

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மார்ச் 06, 2014 | புரட்சி 13 | முழக்கம் 08 | விலை: ரூ.3.00


## வினாக்கள்... விடைகள்...!

+ அமைச்சர்கள் – தலைவர்களின் குடும்ப வாரிசுகளுக்கு தேர்தலில் போட்டியிட, காங்கிரஸ் அனுமதிக்காது. **– ராகுல் அறிவிப்பு**

நல்ல முடிவு! அம்மா சோனியா, சகோதரி பிரியங்காவிடம் கலந்து ஆலோசித்தீர்களா, ராகுல்?

+ மோடி எனக்கு சிறந்த நண்பர். **– கலைஞர்**

ஆமாம்! திருவாரூரில் ‘முரசொலி’யை கையெழுத்துப் பிரதியாக வெளியிட்டபோது கலைஞரின் பேனாவில், மை நிரப்பிக் கொடுத்து எழுது எழுது என்று உற்சாக மூட்டிய நண்பர்!

+ ‘கருணை மனு’ குறித்து குடியரசுத் தலைவர் எடுக்கும் முடிவில் எந்த மறுபரிசீலனைக்கும் இடமில்லை. **– உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு மனு**

இப்படி மொட்டையா சொன்னா எப்படி? அதாவது சோனியா விருப்பப்படி உள்துறை அமைச்சர் முடிவெடுத்து, அதை குடியரசுத் தலைவர் வழியாக வெளியிடும் அறிவிப்பில் உச்சநீதிமன்றமேயானாலும் தலையிடும் உரிமையே கிடையாது என்று விளக்கமாகச் சொல்லுங்க! அப்பத்தானே புரியும்!

+ இராணுவ வீரர்கள் ஒவ்வொருவரும் பா.ஜ.க.வை ஆதரிக்க வேண்டும்; பா.ஜ.க.வில் இணைந்த முன்னாள் தளபதி வி.கே.சிங் அழைப்பு. **– செய்தி**

எதுக்கு தலைய சுத்தி மூக்கைத் தொடுறீங்க... பா.ஜ.க.வே இராணுவத்தை தேர்தலில் நிறுத்தி, இராணுவ தளபதிகளை ஆட்சிக்குக் கொண்டு வந்துடுங்க, எல்லாமே முடிஞ்சிடும்!

+ கோயில் உண்டியலில் ‘காணிக்கை’ செலுத்துவதைவிட, வருமான வரி கட்டினால் நாட்டு மக்களுக்கு பயன் கிடைக்கும். **– நடிகர் கமலகாசன்**

அதாவது, வருமான வரிகட்டாமல் ஏய்ப்பவர்கள்தான் அந்த பாவத்தைப் போக்க உண்டியலில் காணிக்கை போடுகிறார்கள் என்பதை நாகரிகமாகச் சொல்லிட்டீங்க... கமலுக்கு ஒரு ‘ஓ போடுங்க....!’

+ முஸ்லீம் சமுதாயத்துக்கு எப்போதாவது நாங்கள் தவறு செய்திருந்தால் தலைவணங்கி மன்னிப்புக் கேட்கிறோம். **– பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத்சிங்**

அப்படி எல்லாம் எதுவும் நடக்கவே இல்லீங்க. குஜராத்தில்கூட மூன்றுமுறை முதல்வராக இருந்த மோடி, ஒரு சட்டசபை தொகுதியிலேகூட முஸ்லீமை நிறுத்தி வைத்து தொந்தரவு கொடுக்கவே இல்லைங்க. அந்த நன்றியை எல்லாம் மறக்கவே முடியாதுங்க!

+ கூட்டணி குறித்து அரசியல் கட்சிகள் ‘பேச்சு வார்த்தை’ தீவிரம். **– செய்தி**

நல்லா நடத்துங்க... ஆனால், பேச்சுக்கும் வார்த்தைக்கும் உள்ள வித்தியாசத்தை வாக்காளர்களுக்கு, கொஞ்சம் விளக்குங்கய்யா....

+ ஊழலுக்கு எதிரான அவசரச் சட்டம், மத்திய அமைச்சரவை ஆலோசனை! **– செய்தி**

ஆமாங்க... முதலில் சட்டம் அவசரமாக வந்திடட்டும். ஊழலை அப்புறமா ‘சாவகாசமாக’ ஒழிச்சுக்கலாம்!

+ ‘மோடி மீன் விற்பனைக்கடை’ பா.ஜ.க. தலைவர் இல.கணேசன் திறந்து வைத்தார். **– செய்தி**

பலே! இல. கணேசன், மீன் விற்க வந்துட்டாரே! இந்த மீன்களையும் இந்து மதத்துல சேத்துடாதீங்க. அவையாவது மதமில்லாமலே சாகட்டும்!

# மேட்டூரில் முப்பெரும் நிகழ்வுகள்




மேட்டூரில் 25.2.2014 அன்று மாலை முப்பெரும் விழாக்கள் சிறப்புடன் நடந்தன. ‘அகமணமுறையை அகற்றுவோம்; ஆரோக்கிய சமூகத்தை வளர்ப்போம்’ என்ற முழக்கத்தை முன் வைத்து கழகம் நடத்திய பரப்புரைப் பயணத்தின் நிறைவு; ‘புரட்சிப் பெரியார் முழக்கம்-2014’ ஆம் ஆண்டு மலர் வெளியீடு; ஒரே ஜாதிக்குள் நிகழும் இணையர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் சந்திக்கும் உடல், மனநலக் கோளாறுகளை அறிவியல் ரீதியாக மருத்துவர்கள் முன் வைத்த கருத்துகளைத் திரட்டி உருவாக்கப்பட்ட ஆவணப் படம் திரையீடு என்ற முப்பெரும் நிகழ்வுகள் நடைபெற்றன. மாலை 5.30 மணியளவில் மேட்டூர் டி.கே.ஆர். குழுவினரின் ஜாதி எதிர்ப்புப் பாடல்களுடன் நிகழ்ச்சி தொடங்கியது. தொடர்ந்து மேட்டூர் பெரியார் பிஞ்சுகள் நடத்திய கலை நிகழ்ச்சிகள், பரப்புரை பயணத்தில் அகமண முறைக்கு எதிரான கருத்துகளை விளக்கிடும் திராவிடர் கலைக் குழுவினர் நடத்திய நாடகம் ஆகிய நிகழ்வுகள் அனைவரையும் கவர்ந்தன.

கருந்திணை சார்பில் தயாரிக்கப்பட்ட அறிவியல் விளக்கங்களைக் கொண்ட ஆவணப் படம் திரையிடப்பட்டது. 40 நிமிடங்கள் ஓடிய இத்திரைப்படத்தில் பெண், ஆண் மருத்துவர்கள், ஒரே ஜாதித் திருமணங்களால் பிறக்கும் குழந்தைகள் எதிர்கொள்ளும் மனநல உடல்நலக் கேடுகளை விளக்கினர். மண்டல அமைப்புச் செயலாளர் மேட்டூர் சக்தி தலைமையில் மலர் வெளியிட்டு நிகழ்ச்சிகள் தொடங்கின. எழுத்தாளர் பாமரன் வெளியிட, ‘எவிடென்சு’ கதிர் மலரைப் பெற்றுக் கொண்டார். நிகழ்ச்சியில் ரூ.150 விலையுள்ள மலர் ரூ.100க்கு விற்கப்பட்டது. மேடையில் திருச்செங்கோடு கழகத் தோழர் சோமசுந்தரம்-காஞ்சனா இணையரின் பெண் குழந்தைக்கு கொளத்தூர் மணி ‘இளம்பரிதி’ என்று பெயர் சூட்டினார்.

வழக்கறிஞர் திருமூர்த்தி, கழகப் பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் துரைசாமி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையைத் தொடர்ந்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். பயணக் குழுவில் தொடர்ந்து பரப்புரை செய்த பொள்ளாச்சி விஜயராகவன் பயணத்தில் மக்கள் தந்த ஆதரவை விளக்கிக் கூறினார். வெளியீட்டு செயலாளர் சூலூர் தமிழ்ச்செல்வி, பரப்புரைப் பயணத்தின் வரவு-செலவு அறிக்கையை சமர்ப்பித்தார். பரப்புரை செயலாளர் பால். பிரபாகரன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

கழகத் தலைவர், தோழர்கள் விடுதலைக்கு நீதிமன்றத்தில் வாதாடிய வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை. அருண், சேலம் நீதிமன்றத்தில் தொடர்ந்து வழக்குகளில் முழுமையான பங்களிப்பு வழங்கிய வழக்கறிஞர்கள் ஆனந்தராஜ், மாயன், கவுதம பூபாலன், சிறையிலிருந்து விடுதலையான தோழர்கள் நங்கவள்ளி கிருட்டிணன், அருண் குமார், சேலம் அம்பிகாபதி ஆகியோருக்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனும் பயணத்தில் பங்கேற்ற தோழர்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணியும் ஆடைகள் போர்த்தி பாராட்டினர். சேலம், ஈரோடு, கோபி, கோவை, குமாரபாளையம், சென்னை உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து தோழர்கள் ஏராளமாக நிகழ்ச்சிக்கு திரண்டு வந்திருந்தனர்.

# ஈரோட்டில் மரண தண்டனை ஒழிப்புக் கருத்தரங்கம்

***கழகத் தலைவர் பங்கேற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பு:***

*23-02-2014* ஞாயிற்றுக்கிழமை மாலை 6-00 மணியளவில், ஈரோடு பெரியார் மன்றத்தில் ‘மரணதண்டனை ஒழிப்புக் கருத்தரங்கம்’ நடைபெற்றது. மக்கள் சிவில் உரிமைக் கழகம் கண.குறிஞ்சி தலைமை தாங்கினார். தமிழ்த் தேச மக்கள் கட்சி நிலவன் அறிமுக உரை ஆற்றினார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, திருவள்ளுவர் பெரியார் மானுட ஒன்றியம் அற்புதம் அம்மாள், மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன், எழுத்தாளர் பாமரன், தமிழின பாதுகாப்பு இயக்கம் கி.வே.பொன்னையன், இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் ஏ.கோவிந்தராசு ஆகியோர் கருத்துரை ஆற்றினர். த.பெ.தி.க குமரகுருபரன் நன்றி கூறினார். அரங்கில் “உயிர்வலி” படம் திரையிடப்பட்டது.

**தஞ்சையில் :** *01-03-2014* சனிக்கிழமை காலை 9-30 மணி முதல், இரவு 8-00 மணிவரை, தமிழ்த் தேச பொதுவுடைமைக் கட்சி சார்பில் தஞ்சாவூர் காவேரி திருமண மண்டபத்தில் “காவிரி எழுச்சி மாநாடு” நடை பெற்றது. காவிரி உரிமை மீட்பு, வேளாண் பொருளியல், வேளாண் சூழலியல் பாதுகாப்பு ஆகிய தலைப்புகளில் கருத்தரங்குகளும், மாலை நிறைவரங்கமும் நடைபெற்றது. முதலில் உழவர் எழுச்சி இசையோடு துவங்கிய இந்த மாநாட்டின் தொடக்கவுரையை உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர் பழ. நெடுமாறன் ஆற்றினார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வாழ்த்துரை வழங்கினார்.


**அடுத்த இதழில்...**

**மனம் திறக்கிறார், அருந்ததி ராய்...**

அதிகாரம் – பொருளாதாரம் – ஊடகத் துறைகளில் நிரம்பி வழியும் பார்ப்பன–பனியா ஆதிக்கம் – புறக்கணிக்கப்படும் பட்டியலினத்தவர் – அருந்ததிராய் வெளியிட்ட ஆழமான கருத்துகளின் தொகுப்பு – அடுத்த இதழில்...

## உறவுக்குள் திருமணம்: ஊனமாகும் குழந்தைகள்

# பெண்களை நெகிழ வைத்த பரப்புரை

*அகமண முறைக்கு எதிராக கழகம் நடத்திய பரப்புரை இயக்கத்தின் பதிவுகள். கடந்த இதழின் தொடர்ச்சி.*

பிப்.18 காலை 10 மணிக்கு கருந்திணை இல்லத்தில் பயணக் குழுவில் உள்ள தோழர்களுக்கு பணியிடைப் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. அகமண முறையின் ஆபத்துகளையும், ஜாதி மறுப்புத் திருமணங்களின் அவசியத்தையும் விரிவாக விளக்கி தோழர் பூங்குழலி வகுப்பு நடத்தினார். இரண்டு நாள்களாக பயணக் குழுவிடம் பொது மக்கள் கேட்ட கேள்விகளுக்கு அறிவியல்பூர்வமான பதில்களை அறிந்துகொள்ளும் வகையில் வகுப்பு நடந்தது. கேள்வி-பதில் முறையில் பயிற்சிக் கையேடும் வழங்கப்பட்டது. அந்தக் கையேட்டின் செய்திகளை அடிப்படையாக வைத்து பரப்புரைக் குழுவினர் வீதி நாடகங்களையும், சொற்பொழிவுகளையும் திட்டமிட்டனர்.

அத்தகைய வீதி நாடகங்களைப் பார்த்து, அதன் உண்மைகளைப் புரிந்த கிராமத்துப் பெண்கள் நமது தோழர்களிடம், ‘எங்கள் ஊரில், எங்கள் வாழ்க்கையில் நடப்பதை நாடகமாக நடத்துள்ளீர்கள். இனி ஒரு ஜாதிக்குள் திருமணம் செய்யவே மாட்டோம்’ என கண்ணீருடன் உறுதியளித்த நெகிழ்வான நிகழ்வுகளோடு பயணம் தொடர்ந்தது.

பிப்.19 நண்பகல் 1 மணியளவில் தேனி மாவட்டம் போடி நாயக்கனூரில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து பரப்புரையைத் தொடங்கினர். மாலை 4 மணியளவில் திருவள்ளுவர் சிலை அருகில் பயண விளக்கக் கூட்டம் நடைபெற்றது. 5.30 மணியளவில் வ.உ.சி. சிலை அருகில் நடைபெற்றது. அனைத்து இடங்களிலும் காவை இளவரசனின் மந்திரமா? தந்திரமா? நடைபெற்றது. பொள்ளாச்சி விஜயராகவன், பயணத்தின் நோக்கத்தை விளக்கி உரையாற்றினார். திராவிடர் கலைக் குழுவின் பறை இசையும் வீதி நாடகமும் நடைபெற்றது. உதயசங்கர் நன்றியுரை நிகழ்த்தினார். வ.உ.சி. சிலை அருகில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மக்கள் திரளாக சாலையின் இருமருங்கிலும் கூடி நின்றனர். பயணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேனி மாவட்ட அமைப்பாளர் போடி சரவணன், மாவட்ட செயலாளர் பெரியகுளம் குமரேசன், சரவணன், தமிழ்நாடு மாணவர் கழகம் உதயசங்கர் ஆகியோர் செய்திருந்தனர். பயண நிதியாக ரூ.2000 வழங்கினர்.

பிப்.20 நண்பகல் 12 மணியளவில் திண்டுக்கல் மாவட்டம் நாகல் நகரில் நடைபெற்ற பயண விளக்கக் கூட்டத்தில் விசயராகவன் உரையாற்றினார். நமது துண்டறிக்கையைப் படித்த அப்பகுதி பெண் ஒருவர் அகமணமுறையால் ஏற்படும் ஆபத்துகளைப் பற்றி தெரிந்து கொள்ள நமது தோழர்களிடம் தொலைபேசி எண் வாங்கினார். பயணத்தின் செலவை சரி செய்ய நிதி வசூல் செய்த தோழர்களுக்கு தி.க. மாவட்டத் தலைவர் வீரபாண்டியன் தேனீர் வாங்கிக் கொடுத்து சிறப்பாக செயல்படுங்கள் என வாழ்த்தினார்.

மாலை 6 மணியளவில் ஆத்தூர் ஒன்றியம் வலையபட்டி கிராமத்தில் கிராம கலையரங்க மேடையில் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. காவை இளவரசனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி நடைபெற்றது. கிராம மக்கள் திரளாக வந்து நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர். ஆத்தூர் ஒன்றியச் செயலாளர் நாகராஜ், செம்பட்டி ஆல்பர்ட் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்தனர்.




பிப்.21 காலை 10 மணியளவில் கரூர் மாவட்டம் கடவூர் பேருந்து நிலையம் அருகிலும், 11.30 மணியளவில் பாலவிடுதி கிராமத்திலும், 12.45 மணியளவில் தரகம்பட்டி பகுதியிலும், மாலை 6.30 மணியளவில் குளித்தலையில் சுங்கச் சாவடியிலும் காவை இளவரசனின் ‘மந்திரமா தந்திரமா?’, விஜயராகவனின் உரை, வீதி நாடகங்கள் நடைபெற்றன. இந்தப் பகுதி கிராமங்கள் அனைத்திலும் பெண்கள் அதிக ஆர்வத்துடன் நிகழ்ச்சியைக் கண்டனர். கடவூரில்தான் சின்னம்மாள் என்ற பெண் கண்கலங்கி நம் தோழர்களின் காலில் விழ வந்தார். தோழர்கள் அதைத் தடுத்து ஆறுதல் படுத்தினர். இந்த ஊரைத் தொடர்ந்து பல கிராமங்களில் நமது பரப்புரைக்கு பெண்களின் ஆர்வமும், ஒத்துழைப்பும் அதிகமாக இருந்தது.

பிப்.22 காலை 11 மணியளவில் கிருஷ்ணராயபுரத்திலும் 12.45 மணியளவில் புலியூர் பேருந்து நிறுத்தம் அருகிலும், மாலை 5 மணியளவில் கரூர் உழவர் சந்தை அருகிலும், இரவு 8 மணியளவில் சின்ன தாராபுரம் பேருந்து நிலையத்தின் அருகிலும் பரப்புரை நடை பெற்றது. மக்களிடம் உண்டியல் ஏந்தி நிதி வசூல் செய்த தோழர்களிடம் மகளிர் தையலகம் நடத்தும் பெண்கள், பெரியார் பெண் விடுதலைக்காகப் போராடியதை நினைவுகூர்ந்து, “நாங்களும் உங்கள் இயக்கத்தோடு இணைந்து பெண் விடுதலைக்காகப் போராடத் தயாராக உள்ளோம்” என்று கூறி தமிழ்ச் செல்வியிடம் தங்கள் முகவரியைப் பதிவு செய்தனர். நண்பகல் உணவிற்குப் பிறகு விஜயராகவன் பரப்புரைக் குழுவுக்கு அன்னை மணியம்மையாரின் பணிகளை விளக்கி வகுப்பு நடத்தினார்.

கரூர் மாவட்டத் தலைவர் பாபு, மாவட்டப் பொறுப்பாளர் சத்தியசீலன், மாவட்ட அமைப்பாளர் பெரியார் தாசன், தமிழ்நாடு மாணவர் கழகம் முத்து, சின்ன தாராபுரம் சண்முகம், ரஞ்சித், செந்தில் குமார், பிரகாஷ் ஆகியோர் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்தனர். கழகப் பொருளாளர் ஈரோடு இரத்தினசாமி, கழகச் செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி ஆகியோரும் நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

பிப்.23 காலை 11 மணியளவில் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் பேருந்து நிலையம் அருகில் பயண விளக்கக் கூட்டம் நடைபெற்றது. பயணத்தின் நோக்கங்களை விளக்கி கோவை மண்டல அமைப்புச் செயலாளர் பல்லடம் விஜயன் மற்றும் விஜயராகவன் உரையாற்றினார். வழக்கறிஞர் கிருஷ்ணக்குமார், இராஜாமணி ஆகியோர் பயணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

மாலை 5 மணியளவில் காங்கேயம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற கூட்டத்தில் பயணத்தின் நோக்கங்களை விளக்கி தமிழ்நாடு அறிவியல் மன்ற மாநில அமைப்பாளர் சிவகாமி, முகில்ராசு, சமூகக் கல்வி இயக்க மூர்த்தி ஆகியோர் உரையாற்றினர். பாண்டியன் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார்

இரவு 7 மணியளவில் பல்லடம் பேருந்து நிலையம் அருகில் பயண விளக்கக் கூட்டம் நடைபெற்றது. செயலவைத் தலைவர் துரைசாமி, விஜயராகவன் ஆகியோர் உரையாற்றினர். பல்லடம் நகர ஒன்றிய பொறுப்பாளர்கள் மணிகண்டன், சுந்தரராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். பயண நிதி ரூ.1000 வழங்கினர். அனைத்து இடங்களிலும் திராவிடர் கலைக் குழுவின் பறை இசையும் வீதி நாடகங்களும் நடைபெற்றன. மக்கள் திரளாக நின்று நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர். தனியார் கல்லூரி விரிவுரயாளர் பிரபு அமைப்பில் இணைந்து பணியாற்ற முகவரியைப் பதிவு செய்தார். திருப்பூர் மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் செயலவைத் தலைவர் சு.துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், கோவை மண்டலச் செயலாளர் சி.விஜயன், தமிழ்நாடு அறிவியல் மன்றம் சிவகாமி, திருப்பூர் மாவட்டச் செயலாளர் அகிலன் மற்றும் மாநகரப் பொறுப்பாளர் ஜீவா நகர் குமார், உடுமலை ஒன்றியப் பொறுப்பாளர்கள் குணசேகரன், மலரினியன், சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழக கோவை மண்டல அமைப்பாளர் அ.ப.சிவா மற்றும் தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

பிப்.24 கோவை மாவட்டம் சூலூர் ஒன்றியம் இராவுத்தூர் கிராமத்தில் காலை 10.45 மணியளவில் கழகக் கொடியினை பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் ஏற்றி வைத்தார். ஊர் பொது மக்கள் திரளாகக் கலந்து கொண்டனர். காலை 11.30 மணியளவில் சூலூர் பேருந்து நிலையம் அருகில் பயண விளக்கக் கூட்டம் நடைபெற்றது. பால். பிரபாகரன் தனது உரையில் “பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீட்டு உரிமை பறி போகிறது,

(4 ஆம் பக்கம்)

### பயணத்திற்கு உழைத்தோர்

பயண ஒருங்கிணைப்பாளர்: சூலூர் தமிழ்ச்செல்வி

புத்தக விற்பனை : கோவை ராஜாமணி, மேட்டூர் முத்துராஜ், கலைக் குழு : கோபி அர்ச்சுணன், திருப்பூர் பிரசாத், நகுலன், குட்டிமணி, மணிகண்டன், குமார், உடுமலை கவிதா, சூலூர் நாராயணமூர்த்தி, கொளத்தூர் குமரேசன், மகேந்திரன், செம்பட்டி பூபாலன்.

வசூல் குழு : சென்னிமலை செல்வராஜ், ஈரோடு சிவானந்தம், பள்ளிபாளையம் ரமேஷ், பல்லடம் வடிவேல், செல்வக்குமார், கிருஷ்ணமூர்த்தி, பொன்னுசாமி, திருப்பூர் மூர்த்தி, காவை கணிகாச்செல்வன், அலங்கியம் ரவி, சூலூர் ராமமூர்த்தி. ஒலிபெருக்கி அமைப்பாளர் : திருப்பூர் சரத்.

புகைப்படம், ஒளிப்பதிவு : மேட்டூர் பாலு.

வாகன ஓட்டுனர் : சரவணன், பல்லடம் மணிகண்டன்.

சொற்பொழிவாளர்கள் : பொள்ளாச்சி விஜயராகவன், காவை இளவரசன். செய்தி சேகரிப்பு : மதுரை யாழ்மொழி.

முன்னேற்பாட்டுக் குழு : இராம. இளங்கோவன், பல்லடம் விஜயன், திண்டுக்கல் இராவணன்.




பரப்புரைப் பயணக் குழுவினர்

### இங்கே ‘இரட்டைக் குவளை’யின் பெயர் ‘இராமபாத்திரம்’

# மோடியின் குஜராத்தில் தீண்டாமை அவலங்கள்

*நரேந்திர மோடி எழுதிய நூல் ஒன்று 2007 ஆம் ஆண்டு வெளி வந்தது. அதன் பெயர் கர்மயோகம்.*

*அவர் எழுதிய நூல் என்பதைவிட அவருடைய உரைகளின் தொகுப்பு.*

அதில் தலித் மக்களைப் பற்றி குறிப்பிடும்போது அவர்கள் மலம் அள்ளுதல் போன்ற பணிகளை செய்வதற்குக் காரணம், அவர்கள் அந்தப் பணிகளைப் புனிதமாகக் கருதுகின்றார்கள். “Experience in Spirituality” ஆன்மிக அனுபவம் எனக் கூறுகின்றார். இதனால் தான் அவர்கள் மலம் அள்ளுதல் முதலாய தொழில்களை இத்தனை காலமாக செய்கின்றார்கள். அல்லாமல் அவர்கள் தங்களுக்கு வேறு தொழில்கள் கிடைக்கவில்லை என்பதனால் அல்ல என்கின்றார்.

அவர் அந்த நூலில் எழுதுகிறார்:

“I do not believe that they are doing this job just to sustain their livelyhood had this been so, they would not have continued with this type of job, generation after generation... at some point of time somebody might have got the englightenment, that it is their duty to work for the happiness of the entire society and god so. That they have to do this job, bestowed upon them by godso, and that his job of cleaning shared continue as an spiritual activity for centuries. This shered have continued generation after generation. It is impossible to believe that their ancestors did not have the choice of adopting any other work or business.”

இதன் பொருள்:

“நான் அவர்கள் (தலித்கள்) இந்தப் பணியை தங்கள் வயிறுகளை நிரப்புவதற்காகத்தான் செய்து கொண்டிருக்கின்றார்கள் என நம்பவில்லை. இதற்காகத்தான் அவர்கள் செய்கின்றார்கள் என்றால் நிச்சயமாக அவர்கள் இந்த (அசிங்கமான தொழிலை) இத்தனை தலைமுறையாகச் செய்து கொண்டிருக்க மாட்டார்கள். வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் இந்த மக்களில் யாருக்கோ, இந்தப் பணியைச் செய்வது மொத்த மனித இனத்திற்கும் செய்திட வேண்டிய பணி என்ற ஞானோதயம் ஏற்பட்டிருக்கின்றது. அதனால்தான் கடவுள் அவர்கள் மீது பணித்த இந்த கடமையை அவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் மீது கடவுள் அருள் செய்த இந்தக் கடமையைத்தான் அவர்கள் செய்ய வேண்டும். இந்த துப்புரவு பணி, ஓர் உள்ளார்ந்த ஆன்மிக நடவடிக்கையாக, பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த ஆன்மிகப் பணிதான், தலைமுறை தலைமுறையாக நடந்து கொண்டிருக்கின்றது. இஃதல்லாமல் இந்த துப்புரவு பணிகளைச் செய்பவர்களின் தலைமுறைகளுக்கு வேறு வேலைகளோ, வாணிபங்களோ கிடைக்க வில்லை என நம்ப முடியவில்லை.”

இதிலிருந்து பெறப்படும் உண்மை மனித மலம் அள்ளுவது பிணம் தூக்குவது முதலாயப் பணிகள் ஆன்மிக தேட்டமும், நாட்டமுமாம். அதனால் அவர்கள் அந்தப் பணியைச் செய்திட வேண்டுமாம்.

இந்த நூல் வேறொரு விதத்தில் ஆழ்ந்து கவனிக்கப்பட வேண்டும். அது, இந்த நூல், மோடி பேசிய அல்லது நிகழ்த்திய உரைகளின் தொகுப்பு. இந்த உரைகள் அவர் முதலமைச்சர் என்ற தோரணையில், ‘ஐ.ஏ.எஸ்.’ என்ற மாவட்ட ஆட்சியர் அந்தஸ்திலுள்ள அதிகாரிகளிடம் நிகழ்த்தியது. அப்படியானால் தான் மட்டும் தலித் பெருங்குடி மக்களைப் பற்றி இப்படி தரக் குறைவான ஒரு பார்வையைக் கொண்டிருக்கவில்லை. மாறாக, அதனை அதிகாரிகள் வட்டத்திலும் பதிய வைத்திருக்கின்றார்.

மோடி இப்படியொரு கருத்தை தனது உயர்மட்ட அதிகாரிகளின் மனதில் பதிய வைத்திருக்கின்றார். திமிரோடு அதை நூலாகவும் வெளியிட்டிருக்கின்றார் என்ற செய்திகள் பரவலாயின. அதனை நவம்பர் 2007இல் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடும் வெளியிட்டது. இதனை தலித் மக்கள் - குறிப்பாக தமிழக தலித் மக்கள் எதிர்த்தார்கள்.

உடனேயே மோடிக்கு ஆதரவாக சங்கப் பரிவாரம் களத்தில் குதித்தது. ஆனால், நாடெங்குமுள்ள தலித் மக்கள் கொதித்தார்கள். மனித உரிமை ஆர்வலர் சுகாஷ் கட்டேடர், இந்த நூலை தடை செய்ய வேண்டும் மோடியைக் கைது செய்து வன்கொடுமைச் சட்டததின்படி சட்டத்தின் முன் நிறுத்திட வேண்டும் என்று அகில இந்திய அளவில் குரல் எழுப்பினார்.

இந்தப் பின்னணியில் இந்த நூல் திரும்பப் பெறப் பட்டது. நூல் ஒரு வேளை திரும்பப் பெறப்பட்டிருக்கலாம். ஆனால், அன்று மாவட்ட ஆட்சியர் அளவிலுள்ள அதிகாரிகளின் மனதில் மோடி பதிய வைத்த சிந்தனைப் போக்கை யார் திரும்பப் பெறுவது?

மோடியை ஒரு பெரிய ஹீரோவாகக் காட்டிடும் பொறுப்பு ஆப்கோ - என்ற சர்வதேச நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மோடியின் உரைகளை நூலாகத் தொகுத்து வெளியிட வேண்டும். மோடியை ஒரு சீரிய சிந்தனையாளனாகக் காட்டிட வேண்டும் என்ற பொறுப்பும் ஆப்கோ நிறுவனத்திடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனம் பல கோடி பணத்தைப் பெற்றுக் கொண்டுதான் இந்தக் கீழ்த்தரமான நூல் வெளியிட்டுப் பணியைச் செய்தது.

இந்த மொத்த குழப்பத்திலும் பெறப்படும் உண்மை என்னவெனில், மோடி தலித் மக்களை அவர்களின் அந்த கீழான தொழிலிலும், நிலையிலுமே வைத்திருப்பார். இன்று குஜராத்தில் நடந்து கொண்டிருப்பவை இதனை உறுதி செய்கின்றன. குஜராத்தில் டீக்கடை உட்பட அனைத்துப் பொதுத் தளங்களிலும் தலித்களுக்குத் தனி பாத்திரமாம். அதற்குப் பெயர் இராம பாத்திரமாம். Ram Palia என்று புனிதப்படுத்திக் கூறப்படுகின்றது.

குஜராத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை ‘வால்மீகி’ என அழைக்கின்றார்கள். இவர்கள் எப்படி நடத்தப் படுகின்றார்கள் என்பதை அங்குள்ள வால்மீகிகளில் ஒருவர் இப்படிக் கூறுகின்றார். “நாங்கள் தீண்டத் தகாதவர்கள். எங்களை இங்கே யாரும் தொடுவதில்லை.”

பிக்கா பாய் என்ற இந்த தலித், ஒரு விவசாய பண்ணையில் வேலை செய்கின்றார். அந்தப் பண்ணையில் அவருக்கென ஒரு தேனீர் குவளை வைக்கப்பட்டிருக்கும். அவருக்கான தேனீர் அந்த குவளையில் ஊற்றப்படும். தேனீரை குவளையில் ஊற்றுபவர் அந்த குவளையைத் தொடுவதுமில்லை. அதேபோல் உணவு வாங்கிடவும் தனி பாத்திரம். அந்தப் பாத்திரத்தையும் தொட்டு அல்லது கையில் வாங்கி யாரும் உணவை தருவதில்லை. மாறாக சற்று தூரத்திலிருந்து உணவை வழங்குவார்கள்.

இப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் தனி பாத்திரத்திற்கு குஜராத்தில் ‘இராம் பாத்திரம்’ என்று பெயர். அங்காடிகளில் அவர்கள் காய்கறிகளைத் தொட்டுப் பார்த்து வாங்கிட முடியாது. எட்டத்தில் நின்று சமிக்ஞைகள் செய்திட வேண்டும். தருவதை வாங்கிக் கொண்டு காசை அங்குள்ள கூடையில் போட்டுவிட்டுப் போய்விட வேண்டும்.

இதுதான் பல தலைமுறைகளாக நடந்து கொண்டிருக்கின்றது. அன்றைய நாள்களில் அந்த இராம பாத்திரம், களிமண் குவளையாக இருந்தது. இன்யை நாட்களில் அது ஸ்டீல் சொம்புகளாக மாறி இருக்கின்றன. பல தேனீர் கடைகளில் இப்போது டீயை குடித்து விட்டு தூக்கி வீசிடும அளவிலுள்ள பிளாஸ்டிக் குவளைகளிலேயே டீ வழங்கப்படுகின்றது. தலித் மக்கள் பரவிக் கிடக்கும் 22 மாவட்டங்களிலும் இந்தத் தனிக் குவளை முறை பின்பற்றப்படுகின்றது.

**– வைகறை வெளிச்சம்**

## திருச்சியில் சமூக விரோதிகள் ஆக்கிரமிப்புக்கு எதிராக கழகம் போராட்டம்

*திருச்சி மாநகராட்சி 19 ஆவது வார்டு ஜெயில்பேட்டை பகுதியில் தமிழ்நாடு குடிசைப் பகுதி வாரியத்தால் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்பை சமூக விரோதிகள் சிலரால் அபகரிக்கும் முயற்சி நடந்து கொண்டிருப்பதால் தமிழ்நாடு அரசும், மாநகராட்சி நிர்வாகமும், குடிசை மாற்று வாரியமும் கவனத்தில் கொள்ளும்படியாக ‘கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்’ திருச்சி மாவட்ட கழகச் செயலாளர் கந்தவேல் குமார் தலைமையில் திருச்சி மரக்கடையில் நடைபெற்றது.*

*கழக மாவட்டத் தலைவர் மீ..ஆரோக்கியசாமி, கழக மண்டல அமைப்புச் செயலாளர் த.புதியவன், கழக பெரம்பலூர் மாவட்ட தலைவர் துரை. தாமோதரன், தோழமை அமைப்புகளான விடுதலை சிறுத்தைகள் கட்சி - புறநகர் மாவட்ட செயலாளர் தமிழாதன், மாநகர செயலாளர் கோ. சங்கர், புறநகர் மாவட்ட செயலாளர் அய்யப்பன், ஆதி தமிழர் பேரவை - மாவட்ட நிதி செயலாளர் உதயன், இளைஞரணி செயலாளர் மலர்மன்னன், தமிழ்ப் புலிகள் மாவட்ட செயலாளர் இரமணா ஆகியோர் உரையாற்றினர்.*

*மேலும் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களான மாவட்ட அமைப்பாளர் குணராஜ், பொன்னுசாமி, தமிழ்முத்து, முருகானந்தம், மணிகண்டன், பாரத், சுரேஷ், குமரேசன் மற்றும் ஜெயில்பேட்டை பகுதியில் இருந்து ஏறத்தாழ 150க்கும் மேற்பட்ட பொதுமக்கள் திரளாகப் பங்கேற்றனர். இறுதியில் பழனிவேல் நன்றியுரை கூறினார்.*

# அழிந்தே போகட்டும்! ஒழிந்தே போகட்டும்!

அழிந்தே போகட்டும்!
ஒழிந்தே போகட்டும்!
உங்கள் பொய்மை பேச்சும்
இருட்டுக் காரியங்களும்
அழிந்தே போகட்டும்!
ஒழிந்தே போகட்டும்!

தாய்மை எமக்கென
தம்பட்டம் அடித்து
நீவீர் பூட்டிய அடிமை
விலங்குகள் அனைத்தும்
அழிந்தே போகட்டும்!
ஒழிந்தே போகட்டும்!

பெண்மை போற்றுவோமென
தெருவெல்லாம் கூவிவிட்டு
மனைதோறும் அடிமைத்தன
ஆணிவேரை வார்த்தெடுக்கின்ற
உங்கள் இரட்டை நாக்கு
அழிந்தே போகட்டும்!
ஒழிந்தே போகட்டும்!

தாய்மை என்றாலும்
தாரமே என்றாலும்
“சேவை செய்தே கடவாய்” எனச்
சபித்துச்சொன்ன – உங்கள்
மறைகள் அத்துணையும்
அழிந்தே போகட்டும்!
ஒழிந்தே போகட்டும்!

என் ஜனனத்தின் வாயிலை
போகத்தின் பொருளாக
வார்த்தெடுத்த உங்கள்
வேட்கை நரம்புகள்
அழிந்தே போகட்டும்!
ஒழிந்தே போகட்டும்!

தேவதை என்று கூறியே
எங்கள் கைகளில்
கரண்டியை கொடுத்த – உங்கள்
அழுகுணி ஆட்டங்கள்
அழிந்தே போகட்டும்!
ஒழிந்தே போகட்டும்!

தாலி எனக்கயிற்றை கட்டி
சாகும்வரை எனை ஆளும்
சாக்கடை அரசியல்
அழிந்தே போகட்டும்!
ஒழிந்தே போகட்டும்!

கல் ஒரு பெண் என்றாலும்
அதற்கும் கற்பு உண்டென
அடித்துக் கூறுகின்ற
உங்களின் சூட்சும பிரச்சாரங்கள்
அழிந்தே போகட்டும்!
ஒழிந்தே போகட்டும்!

அடிமை என்றறிந்தும்
அதில் ஊறித்திளைக்கின்ற
தையலின் அறிவுப்பேதமை
அழிந்தே போகட்டும்!
ஒழிந்தே போகட்டும்!


போர்க்களமிட்டுக் கூவி
சடுதியில் வருகின்றோம்!
நீங்கள் எங்களுக்குப் பூட்டிய
விலங்குகளின் சாவியை
பத்திரமாய் வைத்திருங்கள்...
உங்களை பூட்டிவைக்க அல்ல
எங்களை விடுவித்துக் கொள்ள!!

**– இரவி**

**(மார்ச் 8 – சர்வதேச மகளிர் நாள்)**

DATE OF PUBLICATION 05.03.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# தபசி குமரன் இல்ல மணவிழா



திராவிடர் விடுதலைக் கழக தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன்-பா.குமாரி இணையரின் மகள் வி.அகத்தியா, பி.இ., பா.வினோத், எம்.எஸ்சி., எம்.பி.ஏ. (சாலிகிராமம் பெ.பாலு-பா.செல்வக்குமாரி இணையரின் மகன்) ஆகியோர் வாழ்க்கை இணையேற்பு விழா 2.2.2014 ஞாயிறு மாலை 5 மணியளவில் சென்னை இராமபுரம் 'ஜீவன் ஜோதி மகாலில்' சிறப்புடன் நடைபெற்றது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மணவிழாவை நடத்தி வைத்தார்.

கழகப் பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, சென்னை மாநகர முன்னாள் மேயர் மா.சுப்ரமணியம், சைதை அன்பரசு, வெங்கட்ராமன் (த.தே.பெ.க.) உள்ளிட்ட தோழர்கள் வாழ்த்துரை வழங்கினர். மண்டல அமைப்புச் செயலாளர் அன்பு தனசேகர் தொகுத்து வழங்கினார். தமிழகம், புதுவையிலிருந்து கழகத் தோழர்கள் வருகை புரிந்திருந்தனர். மணவிழா மகிழ்வாக கழக ஏட்டுக்கு மணமக்கள் ரூ.5000 நன்கொடை வழங்கினர்.

## நன்கொடை

தர்மபுரி மாவட்டம் வகுத்துப்பட்டி தோழர் ஆனந்தன்-ஜானகி இணையரின் மகள் அறிவுச் செல்வி-அருண்குமார் ஆகியோருக்கு 2.2.2014 அன்று நடந்த திருமண மகிழ்வாக கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் பிப்.27 அன்று ரூ.20,000 தோழர் ஆனந்தன் நன்கொடை வழங்கினார்.

அதே நிகழ்வில் - தோழர் குணசேகரன ரூ.5000-மும், சென்னை தோழர் சரவணன் ரூ.3000-மும் நன்கொடை வழங்கினர்.

02-03-2014 ஞாயிற்றுக்கிழமை அன்று கும்பகோணம் ஆர்.பி.எஸ்.ஸ்டாலின் கழகத் தலைவரிடம் பெரியார் முழக்கம் சந்தா தொகை ரூ - 10,000 (பத்தாயிரம் ரூபாய்) வழங்கினார்.

தஞ்சை மாவட்ட கழகம் சார்பாக, மக்கள் சந்திப்பு இயக்கம் நடத்தப்பட்டு முதல் தவணையாக ரூ.11,000 (பதினொரு ஆயிரம் ரூபாய்) பேராவூரணி திருவேங்கடம், முனைவர் ஜீவானந்தம் மற்றும் தோழர்கள் 01-03-2014 அன்று தஞ்சையில் கழகத் தலைவரிடம் வழங்கினர்.

# 'எமகண்ட'த்தில் நடந்த இல்லத் திறப்பு



தாராபுரம் வழக்குரைஞர் கிருஷ்ணகுமார் அவர்கள் புதிதாக கட்டியுள்ள இல்லத் திறப்பு விழா 23-02-2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் நடைபெற்றது. எமகண்டத்தில் நல்ல நிகழ்வுகளை நடத்தக்கூடாது என்ற மூடநம்பிக்கையை ஒழிக்கும் வகையில், பிற்பகல் 1-30 வரை எமகண்டம் என்பதால் அந்த நேரத்தில் இல்லம் திறக்கப்பட்டது. முதலில் திராவிடர் கலைக்குழுவினர் கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். "வாஸ்து அறிவியலா?" என்ற நூல் வெளியிடப்பட்டது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நூலினை வெளியிட தாராபுரத்தைச் சார்ந்த மூத்த வழக்கறிஞர் சி.இராமசாமி நூலினை பெற்றுக்கொண்டார். கழகத் தலைவர் முன்னிலையில் 'பெரியார் பிஞ்சு' தோழர் ஈ.வெ.ரா இல்லத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் கழகப் பொருளாளர் ஈரோடு ப.இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, வெளியீட்டுச் செயலாளர் சூலூர் தமிழ்செல்வி, பரப்புரை செயலாளர் தூத்துக்குடி பால். பிரபாகரன், அமைப்புச் செயலாளர் தி.தாமரைக்கண்ணன், தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர்கள் திருப்பூர் சிவகாமி, ஈரோடு ப.சிவக்குமார், பேராசிரியர் புரட்சிக்கொடி, பல்லடம் விசயன், திருப்பூர் அகிலன், ஒட்டன்சத்திரம் பெரியார் நம்பி, பொள்ளாச்சி விசயராகவன், பரப்புரைக் குழுவினர் மற்றும் தோழர்கள் திரளாக கலந்துகொண்டனர். அனைவருக்கும் அசைவ உணவு வழங்கப்பட்டது.

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பன்னாட்டு நிறுவனங்கள் இயற்கை வளங்களை சூறையாடுகிறது, விவசாயிகளுக்கு மானியங்கள் கிடைப்பதில்லை. அதற்கு எதிராகப் போராடாமல் சாதி மறுப்பு திருமணங்கள் செய்யும் தங்கள் பிள்ளைகளை போலி கவுரவங்களுக்காகக் கொலை செய்கிறார்கள். இயற்கையாய் ஏற்படும் காதல் திருமணங்களை ஆதரித்து ஒரு ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்க திராவிடர் விடுதலைக் கழகம் வேண்டுகோள் விடுக்கிறது. சாதி மறுப்பு இணையரின் வாரிசுகளுக்கு சாதியற்றோர் இடஒதுக்கீடு வழங்கி சாதி மறுப்புத் திருமணங்களை ஆதரிக்க அரசு வழி வகை செய்ய வேண்டும்" என கேட்டுக் கொண்டார்.

துரைசாமி, விஜயன், பல்லடம் பிரகாசு, மாவட்டத் துணைத் தலைவர் பன்னீர் செல்வம், சூலூர் ரமேஷ், கார்த்திக், பார்த்திபன் ஆகியோர் கலந்து கொண்டனர். இடுவாய் ரவி மற்றும் சூலூர் துரைசாமி தலா ரூ.100 நன்கொடை கொடுத்தனர்.

காலை 12.30 மணியளவில் சிங்காநல்லூர் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற கூட்டத்தில் மாநகரத் தலைவர் பன்னீர்செல்வம் மற்றும் விஜயராகவன் உரையாற்றினர். தமிழ்நாடு மாணவர் கழகம் சிலம்பரசன் நன்றியுரை ஆற்றினார். பயணக் குழுத் தோழர்கள் ஆதித் தமிழர் பேரவை தலைமை அலுவலகத்தில் உணவருந்தி ஓய்வெடுத்தனர். அ. எழில் வரவேற்று உபசரித்தார். மாலை 4.30 மணியளவில் காந்திபுரம் திருவள்ளுவர் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற பரப்புரையில், தோழர் அறக்கட்டளையின் நிறுவனர் சாந்தக்குமார் வாழ்த்துரை வழங்கினார். பயணத்தின் நோக்கங்களை விளக்கி கோவை பன்னீர்செல்வம், விஜயராகவன், சூலூர் தமிழ்ச்செல்வி ஆகியோர் உரையாற்றினர்.

மாலை 6.45 மணியளவில் சரவணம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் பயண விளக்கக் கூட்டம் நடைபெற்றது. மாநகரப் பொருளாளர் கணேசன் வரவேற்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் வெள்ளமடை நாகராஜ், சாதியற்றோர் இடஒதுக்கீட்டின் அவசியத்தை வலியுறுத்தியும், 2001 ஆம் ஆண்டில் நீதிபதி வெங்கடாசலய்யா அறிக்கையில் சாதியற்றோருக்கு 5 % இடஒதுக்கீடு கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியதை நினைவு கூர்ந்து உரையாற்றினார். அனைத்து இடங்களிலும் திராவிடர் கலைக் குழுவின் பறை இசையும் வீதி நாடகங்களும் நடைபெற்றன. மக்கள் திரளாக நின்று நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர். அனைத்து இடங்களிலும் சூலூர் பன்னீர்செல்வம், மாநகரத் துணைத் தலைவர் ஆண்ட்ரூஸ், மாநகரச் செயலாளர் ஜெயந்த், மாவட்டத் துணைச் செயலாளர் கிருட்டிணன், மாநகர அமைப்பாளர் நேருதாஸ், தமிழ்நாடு மாணவர் கழக மாநில அமைப்பாளர் சிலம்பரசன், பிரதாப், ஜெயப்பிரகாஷ், நிர்மல், பத்மநாபன், கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிப்.25 காலை 10 மணியளவில் அன்னூர் பேருந்துநிலையம் அருகில் நடைபெற்ற கூட்டத்திற்கு அன்னூர் முருகேசன் தலைமை தாங்கினார். மாவட்டப் பொறுப்பாளர்கள் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், வெள்ளமடை நாகராஜ், கோவை பன்னீர் செல்வம் ஆகியோர் பயணத்தின் நோக்கத்தை விளக்கி உரையாற்றினார்கள். முடுக்கந்துரை ரவி நன்றியுரையாற்றினார். பெண்கள் பலர் சாலையின் இருபுறங்களிலும் நின்று நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தது மனநிறைவைத் தந்தது.

காலை 11.30 மணியளவில் புலியம்பட்டியிலும், பிற்பகல் 1.50 மணியளவில் சத்தியமங்கலம் பேருந்து நிலையம் அருகிலும், பிற்பகல் 3 மணியளில் சத்தியமங்கலம் வடக்குப் பேட்டையிலும் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றன.

ஈரோடு மண்டல அமைப்புச் செயலாளர் இராம. இளங்கோவன், வர்ணாசிரம அமைப்பைப் பற்றி எடுத்துக் கூறி அதிலிருந்து எவ்வாறு இத்தனை சாதிப் பிரிவுகள் ஏற்பட்டன என்பதையும் விளக்கினார். மேலும் "சாதியை ஒழிக்கவும், ஆரோக்கியமான தலைமுறையை வளர்த்தெடுக்கவும் சாதி மறுப்பு திருமணங்களையே ஆதரிக்க வேண்டும்" என்றும் எடுத்துரைத்தார். விஜயராகவன், கோபி. வேலுச்சாமி ஆகியோர் பயணத்தின் நோக்கத்தைப் பொது மக்களுக்குப் புரியும் வண்ணம் இயல்பான நடையில் விளக்கினர்.


பயண நிதியாகத் திருப்பூர் தண்டபாணி ரூ.1200 வழங்கினார். அனைத்து இடங்களிலும் திராவிடர் கலைக் குழுவின் பறை இசையும், அகமணமுறை செய்து கொண்ட இணையர்களின் குழந்தைகளுக்கு; ஏற்படும் ஊனங்கள் பற்றி விளக்கி வீதி நாடகங்களும் நடைபெற்றன. மக்கள் திரளாக சாலையின் இருமருங்கிலும் கூடி நின்று வீதி நாடகங்களைக் கண்டு களித்தனர்.

மாவட்டத் தலைவர் நாத்திக ஜோதி, மாவட்டச் செயலாளர் நிவாஸ், மாவட்ட அமைப்பாளர் சதுமுகை பழனிச்சாமி, மாவட்ட இளைஞரணித் தலைவர் இராஜேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மூர்த்தி, பகுத்தறிவாளர் கழகத் தலைவர் கோகுல்ராஜ், கே.என்.பாளையம் அமைப்பாளர் முருகேசன் மற்றும் தோழர்கள் பலர் திரளாகக் கலந்து கொண்டு பரப்புரைக் குழுவுக்கு உரிய முன்னேற்பாடுகளைச் செய்திருந்தனர்.

**செய்தித் தொகுப்பு : மதுரை யாழ்மொழி**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 6th March 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மார்ச் 13, 2014 | புரட்சி 13 | முழக்கம் 09 | விலை: ரூ.3.00


## வினாக்கள்... விடைகள்...!

+ ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன் அணியிலிருந்த மொடக்குறிச்சி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.எம். பழனிச்சாமி, அமைச்சர் சிதம்பரம் அணியில் சேர்ந்தார்.
**– தினமலர் செய்தி**

இனி எதிர்காலத்தில் இளங்கோவன் அணியுடன் கூட்டணியோ, தொகுதிப் பங்கீடோ கிடையாது என்று பேட்டி அளித்தாரா?

+ தன்னை ஒரு டீக்கடைக்காரர் என்று கூறிக் கொள்ளும் மோடிக்கு, ஹெலிகாப்டரில் பயணம் செய்ய எங்கிருந்து பணம் வந்தது?
**– கெஜ்ரிவால் கேள்வி**

இது என்ன கேள்வி? 'சாமான்யன்' மோடிக்கு, 'சாமான்யர்' அம்பானி உதவிடக் கூடாதா? மனிதாபிமானம் இல்லாமல் பேசக் கூடாது.

+ திருவனந்தபுரம் விரைவு ரயிலில் பயணம் செய்த முதியவரின் கையை எலி கடித்ததால் ரயில் ஈரோட்டில் 30 நிமிடம் தாமதமாகப் புறப்பட்டது. **– செய்தி**

எல்லா இரயில்களிலும் எலிகளுக்காக நான்கு ஏ.சி. கோச்சுகளை தனியாக ஒதுக்கியிருந்தா, இந்தப் பிரச்சினை வந்திருக்காதுல்ல.

+ ஒருபோதும் சுயமரியாதையை விட்டுக் கொடுக்க முடியாது. **– தா. பாண்டியன்**

ஆமாம்! விட்டுக் கொடுக்கவே கூடாது. அது சரி; நீங்கள் சொல்லும் தொகுதி, எந்த மாவட்டத்தில் இருக்கிறது, தோழர்?

+ காங்கிரசுடன் தமிழ்நாட்டில் எந்தக் கட்சியும் கூட்டணி சேரவில்லை. **– செய்தி**

அப்பட்டமான பொய்! வாசன் பிரிவு, சிதம்பரம் பிரிவு, இளங்கோவன் பிரிவுகளுடன் இணைந்து பலமான கூட்டணி உருவாகி வருகிறது, மறந்துவிட வேண்டாம்!

+ ராஜாஜி, இந்திரா காந்தி, காயிதே மில்லத் போன்றவர்களுடன் அரசியல் நடத்திய கலைஞர் தற்போது சில்லறை கட்சிகளுடன் பேசி வருகிறார். **– மு.க. அழகிரி**

உண்மையிலேயே அவமானம்தான்! ஆகவே மீண்டும் அழகிரியை கட்சிக்குள் கொண்டு வந்து ராஜாஜி, இந்திராவுடன் கலைஞர் அரசியல் நடத்த முன்வர வேண்டும். அப்படித் தானே?

+ குஜராத் வளர்ச்சியை நேரில் பார்வையிடச் சென்ற கெஜ்ரிவாலை எதிர்த்து மோடி ஆதரவாளர்கள் கறுப்புக்கொடி கலவரம்.
**– செய்தி**

வளர்ச்சியை நேரில் பார்க்க முடியாது என்பதற்குத்தானே பத்திரிகைகளில் புள்ளி விவரங்களோடு வெளியிட்டு வருகிறோம். இதுகூட புரியவில்லையா?

+ நாடு முழுதும் மோடி அலை வீசுகிறது என்றால், மோடி பாதுகாப்பான வாரணாசி தொகுதியைத் தேடுவது ஏன்?
**– சுஷ்மா சுவராஜ் எதிர்ப்பு**

என்னங்க மேடம் இப்படி கேக்குறீங்க...மோடி அலையில் மோடியே அடிச்சுகிட்டுப் போயிட்டா, என்னாவது? ஒரு பாதுகாப்பு வேண்டாமா?

+ இந்தியா முழுதும் உள்ள பல்வேறு நகரங்களில் டீக்கடைக்கு வந்தவர்களுடன் மோடி 'வீடியோ கான்பரன்ஸ்' தொழில்நுட்பம் வழியாக பேசினார். **– செய்தி**

அதெல்லாம் இருக்கட்டும்; குஜராத்தில் கிராம டீக்கடைகளுக்குப் போய் அவர்களிடம் பேசி அங்கே தலித் மக்களுக்கு வைக்கப்பட்டுள்ள தனிக் குவளையை முதலில் ஒழிக்கச் சொல்லுங்க!

# பார்ப்பன–பனியா ஆதிக்கம்: அம்பலப்படுத்துகிறார் அருந்ததிராய்



***1936இல் லாகூரில் ஜாதி ஒழிப்பு சங்கம், ஜாதி குறித்து அம்பேத்கரை பேச அழைத்தது. கடுமையான உழைப்பில் அம்பேத்கர் தயாரித்த ஆழமான அந்த ஆய்வுரையில் பார்ப்பனர், இந்து மதம் தொடர்பான கருத்துகளை நீக்க வேண்டும் என்று சங்கத்தார் கூறியதை ஏற்காத அம்பேத்கர், உரை நிகழ்த்த மறுத்துவிட்டார். வரலாற்று சிறப்பு மிக்க அந்த உரையை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் தந்தை பெரியார். 'ஜாதியை ஒழிக்க வழி' என்ற தலைப்பில் சுயமரியாதை இயக்க பதிப்பாக வெளிவந்தது. பல நூறு பதிப்புகளைக் கண்ட அந்த ஆங்கில நூலை, அண்மையில் நவயாண பதிப்பகம் வெளியிட்டது. இதற்கு உலகப் புகழ் பெற்ற புக்கர் விருது பெற்ற எழுத்தாளர் அருந்ததிராய், 200 பக்க அளவில் விரிவான முன்னுரை எழுதியுள்ளார். அரசியல் பொருளாதார ஊடகத் துறைகளில், தலித் மக்கள் புறக்கணிக்கப்படுவதற்கும், பார்ப்பன பனியா ஆதிக்கம் தொடர்வதற்கும் ஜாதியமைப்பே காரணம் என்கிறார் அருந்ததிராய். அவர் எழுதிய முன்னுரையிலிருந்து ஒரு பகுதி:***

இந்தியாவில் இன்று சராசரி தனி மனித வருவாயில் மூன்றில் ஒரு பங்கு நூறு பணக்காரர்களின் சொத்துக்கு சமமாக இருக்கிறது. 1.2 பில்லியன் மக்கள் தொகைக் கொண்ட ஒரு தேசத்தில், நாள் வருவாய் ரூ.20க்கும் குறைவாகக் கொண்டு வாழ்வோர் 800 மில்லியன் மக்கள். பகாசுர கம்பெனிகள்தான் இந்த ஒரு நாட்டை தங்களுக்கு சொந்தமாக்கிக் கொண்டு நாட்டையே ஆட்சி செய்கிறார்கள். அரசியல் கட்சிகளும், அரசியல்வாதிகளும், பெரும் தொழில் நிறுவனங்களின் சேவகர்களாக மாறி வருகின்றனர்.

இந்த மாற்றங்களினால் ஜாதிய கட்டமைப்புகளுக்கிடையிலான உறவுகளில் தாக்கங்கள் நிகழ்ந்துள்ளதா? இந்திய சமுகம் உடைந்து சிதறிவிடாமல் ஜாதிய உறவுகளே தடுத்து வருகின்றன என்றும், தொழில் புரட்சிக்குப் பிறகு மேற்கத்திய சமூகத்தில் நிகழ்ந்ததைப்போன்ற பிளவுக் கூறுகள் தலைதூக்காமல் சமூகத்தைக் காப்பாற்றியதும் ஜாதி அமைப்புதான் என்றும் சிலர் வாதாடுகிறார்கள்.

இதற்கு நேர் எதிரான கருத்துகளை முன் வைப்போரும் உண்டு. இந்த பகாசுர தொழில் நிறுவனங்களின் வருகைக்குப் பிறகு, முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நகர் மயமாகும் போக்கு அதிகரித்து வருகிறது என்றும், அதனால் தொழிலாளர்கள் வேலை செய்யும் சூழல்கள் மாறிக் கொண்டு வருவதால் ஜாதியமைப்பின் இறுக்கம் தளர்ந்து, அதன் தேவைக்கான அவசியம் குறைந்து வருகிறது என்றும் கூறுகிறார்கள். இரண்டு கருத்துகளும் ஆழமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவை தான்.

பொதுமைப்படுத்தப்படும் கருத்துகள், உண்மை நிலவரங்கள் ஆக முடியாது. அண்மையில் அமெரிக்காவின் 'போர்ப்ஸ்' பத்திரிகை உலகின் மிகப் பெரும் பணக்காரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் 55 பேர் இந்தியர்கள். இதில் தரப்பட்டுள்ள சொத்து விவரங்கள் - அவர்கள் வெளிப்படையாக அறிவித்தது மட்டும்தான். இந்த 55 இந்திய கோடீசுவரர்களில் முதல் 10 இடத்தில் இருப்பவர்களுக்கும் அவர்களுக்கு கீழே உள்ளவர்களுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. இந்த 10 நபர்களில் 7 பேர் 'வைசியர்கள்'. இவர்கள் பெரும் தொழில் நிறுவனங்களில், தலைமைப் பொறுப்பில் இருந்து கொண்டு உலகம் முழுதும் தங்கள் தொழில் சாம்ராஜ்யத்தை நடத்தி வருகிறார்கள். துறைமுகங்கள், சுரங்கங்கள், எண்ணெய் வயல்கள், கப்பல் கம்பெனிகள், மருந்து தயாரிப்பு தொழிற்சாலைகள், பெட்ரோ கெமிக்கல், எரிவாயு, அலைபேசி இணைப்புகள், சினிமா தயாரிப்பு, 'ஸ்டெம்செல்', சேமிப்பு கிடங்குகள், மின் விநியோக அமைப்புகள், சிறப்பு பொருளாதார மண்டலங்களை நடத்தி வருகிறார்கள். யார் இவர்கள்? முகேஷ் அம்பானி (ரிலையன்சு), லட்சுமி மிட்டல், திலிப் சிங்காவி, ரூஜா சகோதரர்கள், கே.எம்.பிர்லா, சாவித்ரிதேவி ஜின்டால், கவுதம் அடானி, சுனில் மிட்டல் ஆகியோர். எஞ்சியுள்ள 45 உலக அளவிலான பணக்காரர்களில், மேலும் 19 பேர் வைசியர்கள். மற்றவர்களில் பார்ப்பனர்கள் இருக்கிறார்கள். பார்சி, போராஸ், கத்ரிஸ் (அனைவரும் வணிக ஜாதிகள்) இருக்கிறார்கள். இந்தப் பட்டியலில் ஒரு 'தலித்'தோ ஒரு ஆதிவாசியோ கிடையாது.

பெரிய தொழில்கள் மட்டுமல்ல, வைசியர்களான பனியாக்கள் சிறு தொழில்களிலும் 'லேவாதேவி' என்ற வட்டிக்கு கடன் வழங்குவதிலும் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். வறுமையில் உழலும் மக்கள் இவர்களின் சுரண்டல் பிடியில் சிக்குண்டு கிடக்கிறார்கள். பழங்குடி மக்கள் அதிகம் வாழக்கூடிய வடகிழக்கு மாநிலங்களான அருணாசலப் பிரதேசம், மணிப்பூர், மிசோராம், மேகலயா, நாகாலாந்து மற்றும் அசாம் மாநிலங்களில் 'சுதந்திரம்' பெற்ற காலத்திலிருந்து ஆயுதம் தாங்கிய குழுக்களின் போராட்டங்களும், இராணுவ குவிப்பும், இரத்த ஆறுமாக இருந்து கொண்டிருக்கின்றன. இவ்வளவு கடுமையான நெருக்கடிகளுக்கு இடையே இந்த மாநிலத்தில் குடியேறிய மார்வாடிகள் ஆரவாரம் இல்லாமல், தங்கள் தொழிலை நிலைப்படுத்திக் கொண்டு விட்டார்கள். இந்தப் பகுதிகளில் அனேகமாக அனைத்துப் பொருளாதார செயல்பாடுகளையும் தங்களுடைய ஆளுகைக்குக் கீழே இவர்கள் கொண்டு வந்து விட்டார்கள்.

இந்தியாவில் ஜாதிவாரியாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு கடைசியாக எடுக்கப்பட்டது 1931 ஆம் ஆண்டில்தான். அந்தக் கணக்கெடுப்பின்படி வைசியர்கள் (பனியா) 2.7 சதவிதம் (அதே நேரத்தில் தீண்டப்படாதவர்கள் 12.5 சதவீதம்) பனியாக்களின் குழந்தைகள் நல்ல ஆரோக்கியத்துடன் வளமான வாழ்க்கைச் சூழல் இருந்தும்கூட, அவர்களின் மக்கள் தொகை எண்ணிக்கை குறைந்திருக்கிறதே தவிர, அதிகரித்ததாக தெரியவில்லை., ஆனால், பெரும் வர்த்தகங்கள், சிறு தொழில்கள், விவசாயம், பெரும் தொழில்களில் உயர்ந்து நிற்கிறார்கள். மக்கள் தொகை எண்ணிக்கையில் குறைந்த அளவில் உள்ள ஒரு பிரிவு பொருளாதாரத்தில் மட்டும் அசைக்க முடியாத சக்தியாக மேலும் மேலும் உயர்வது ஏன்? ஜாதியும் முதலாளித்துவமும் தனித்துவமான இந்திய சமூக 'உலைக்களத்தில்' பிரிக்க முடியாமல், பிணைந்து போய்கிடப்பதுதான் இதற்கான காரணம். திறமை, தகுதிகளைப் பார்க்காமல், தன்னுடைய ஜாதி என்பதற்காகவே கைகோர்த்து ஒருவருக்கொருவர்

(3 ஆம் பக்கம்)

**தலையங்கம்**

## ஏமாற்றம்தான்: ஆனாலும்...

இலங்கை அரசின் போர்க் குற்றங்கள் மற்றும் மாந்தநேயத்துக்கு எதிரான குற்றங்களை தனக்குத் தானே இலங்கை அரசு விசாரிக்கும் நாடகத்துக்கு இம்முறையாவது முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற சர்வதேச தமிழினத்தின் எதிர்பார்ப்புக்கு ஏமாற்றமே பதிலாகக் கிடைத்துள்ளது.

அய்.நா.வின் 25ஆவது மனித உரிமை மன்றத்தில் இங்கிலாந்து, மொரிசியசு, மான்டி நிக்ரோ, மாசிடோனியா நாடுகளுடன் இணைந்து அமெரிக்கா தாக்கல் செய்துள்ள வரைவு தீர்மானம், கடுமையான விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. தமிழர் பகுதிகளை இராணுவ மயமாக்கிவரும் இலங்கை அரசு, தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமித்து, இராணுவத்தையும் சிங்கள மக்களையும் குடியேற்றி வருவதோடு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வடக்கு மாகாண சபையை செயல்பட முடியாத நிலைக்கு முடக்கி வைத்து விட்டது. மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை வழங்குவதிலிருந்து அன்றாட சிவில் நிர்வாகம் வரை இராணுவம் கையில் எடுத்துக் கொண்டுவிட்டது. இந்த நிலையில் சர்வதேச நேரடிக் கண் காணிப்புக்கு உடனடியாக இலங்கை அரசு உட்படுத்தப்படா விட்டால், தமிழர் நில ஆக்கிரமிப்புகள் மேலும் தீவிரமாகிவிடும் என்ற நியாயமான அச்சம் உருவாகியிருக்கிறது. மற்றொரு புறத்தில் போருக்கு முன்பும் பின்பும் இலங்கையின் சிங்கள இராணுவம் தமிழர்களுக்கு எதிராக நடத்திய இனப்படு கொலைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், சர்வதேச விசாரணை மன்றத்தின் முடிவுகள் வெளிவந்து கொண்டிருக் கின்றன. இலங்கைக்கு நேரில் சென்று அய்.நா. மனித உரிமை ஆணையர் நவிப்பிள்ளை தாக்கல் செய்த அறிக்கை, சர்வதேச விசாரணைக்கு இலங்கை அரசு உள்ளாக்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்துள்ளது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வடக்கு மாகாண சபையும், சர்வதேசப் புலனாய்வு விசாரணையை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. இவ்வளவுக்குப் பிறகு, அமெரிக்காவின் வரைவுத் தீர்மானம், மீண்டும் இலங்கை மைதானத்துக்கே பந்தைத் தள்ளியிருக்கிறது.

ஈழத் தமிழர்களின் உரிமைகளை மீட்டுத் தரவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு அமெரிக்கா இம்முயற்சிகளில் இறங்கியிருக் கிறது என்றோ, அமெரிக்கா இத்தகைய முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுக்கும் என்றோ, தமிழர்கள் நம்பிக் கொண்டிருக்கவும் முடியாது. அதே நேரத்தில் ஈழத்தில் இனப்படுகொலைக்கு துணை போன இந்தியா, இவ்வளவுக்கும் பிறகாவது அய்.நா.வில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் தீர்மானத்தை கொண்டு வந்திருக்க வேண்டும். அதற்கு இந்தியாவை நாம் வலியுறுத்த வேண்டும். இதைத் தவிர்த்துவிட்டு அமெரிக்கா இதில் உறுதியான தீர்மானத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என்று எதிர்ப்பதில் என்ன அர்த்தமிருக்க முடியும்? 2009 ஆம் ஆண்டு இனக் கலவரத்தைத் தொடர்ந்து, அடுத்த ஒரு வாரத்தில் இலங்கை அரசைப் பாராட்டி இந்தியாவின் ஆதரவோடு அய்.நா.வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும், அடுத்தடுத்து உலகத் தமிழர்கள் கொடுத்த அழுத்தங்கள் காரணமாக இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டதும், அதிலும்கூட இந்தியா தலையிட்டு தீர்மான வாசகங்களை மேலும் நீர்த்துப் போகச் செய்ததும், கடந்த காலங்களில் நாம் சந்தித்த கசப்பான வரலாறு.

ஆனாலும்கூட ஆண்டுக்கு ஒரு முறை அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தின் வழியாகத்தான் ஈழத் தமிழர் பிரச்சினை சர்வதேச அரங்கின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டு விவாதப் பொருளாகிறது. தனது அரசியல் பொருளாதார நலனுக்காக அமெரிக்கா கொண்டு வரும் இந்தத் தீர்மானமும் இல்லாமல் போய் விட்டால், சர்வதேச அரங்கில் முழுமையான இருட்டடிப்புக்கும் புறக்கணிப்புக்கும் ஈழத் தமிழர் பிரச்சினை உள்ளாகியிருக்கும். எனவே தீர்மானம் 'பல் இல்லாத' – பிரச்சினைக்கு சரியான தீர்வு தராத ஒன்றாக இருக்கிறது என்பதற்காகவே அமெரிக்காவை எதிர்க்க தொடை தட்டிக் கிளம்புவது பயனற்றது என்பதே நமது கருத்து.

அய்.நா. மனித உரிமை ஆணையத்தின் மேற்பார்வையின் கீழ் இலங்கை அரசு மேற்கொள்ளப்பட வேண்டிய விசாரணைகள் இப்போது முதன்முதலாகக் கொண்டு வரப்பட்டுள்ளது – ஒரு முன்னேற்றம் தான். அய்.நா. மனித உரிமை ஆணையத்தின் நேரடி தலையீட்டுக்கு பிரச்சினை போய்விட்டதால் ராஜபக்சே அலறி அமெரிக்காவை கடுமையாக எதிர்த்து வருகிறார். ராஜபக்சேயின் அமெரிக்க எதிர்ப்புக் குரலோடு தமிழர்களின் குரலும் சேர்வதால் யார் பயனடைவார்கள் என்பதை நாம் கருதிப் பார்க்க வேண்டியதும் அவசியமாகும்! இந்த விவாதத்தின் பின்புலத்தில் இந்தியாவே தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்ற கோரிக்கைக்கு மக்கள் கருத்தை உருவாக்கும் இயக்கங்களை நடத்துவதே சரியான அணுகுமுறையாக இருக்க முடியும்.

பொது வாக்கெடுப்பு நடத்தி, ஈழத் தமழர்கள் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்ய வேண்டும் என்ற இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் பல மைல்களைக் கடக்க வேண்டிய அரசியல் தெளிவும் புரிதலும் அவசியத் தேவை. வெற்று உணர்ச்சி முழக்கங்கள் மட்டுமே அரசியல் தீர்வை முன்னோக்கி நகர்த்தலுக்கு ஒரு போதும் பயன்படாது!

சிந்தனைத் திறனும் அரசியல் விழிப்புணர்வுமே இனத்துக்கு வலிமை சேர்க்கும்!

# இனப்படுகொலைக்கு எதிராக மனித உரிமை அமைப்புகள் கலந்தாய்வு



இராஜஸ்தான், கருநாடகா, டெல்லி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இயங்கி வரும் மனித உரிமை அமைபபுகள் சென்னையில் மார்ச் 8, 9 தேதிகளில் கூடி தூக்குத் தண்டனை ஒழிப்பு மற்றும் ஈழத் தமிழர் பிரச்சினைக் குறித்து விவாதித்து, இந்தப் பிரச்சினையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் செல்லும் செயல் திட்டங்களை வகுத்தன. இந்திய அரசு மரணதண்டனை முழுவதுமாக நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை இதில் நம்பிக்கையுள்ள தேசிய மாநில கட்சிகள், தங்கள் தேர்தல் அறிக்கையில் வலியுறுத்த வேண்டும் என்று கூட்டத்தின் முடிவில் வேண்டுகோள் விடப்பட்டது. கருணை மனு காலதாமதத்தின் அடிப்படையில் 15 தூக்குத் தண்டனை கைதிகளை உச்சநீதிமன்றம் விடுவித்து அளித்த தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் மனித உரிமைக் குழுக்கள் வரவேற்றன.

இரண்டாம் நாள், இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள்; அய்.நா.வில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள வரைவு தீர்மானம் குறித்து, பிரதிநிதிகள் விரிவாக விவாதித்தனர். தமிழர் பிரச்சினை என்ற அளவில் சுருக்கிவிடாமல், தெற்காசிய நாடுகளில் ஒன்றான இலங்கையில் நடந்த போர்க் குற்றம், இனப்படுகொலை என்ற கண்ணோட்டத்தில் இதை தெற்காசியப் பிரச்சினையாக அணுகி, தலைநகர் டெல்லியில் மனித உரிமை அமைப்புகளைத் திரட்டி, இலங்கை அரசுக்கு எதிரான கருத்துருவாக்கத்தை உருவாக்கும் முயற்சிகளை மேற்கொள்வதற்கான திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. அமெரிக்கா, அய்நா.வில் கொண்டு வந்த தீர்மானம் மென்மையாகவே உள்ளதால் பன்னாட்டு விசாரணையை வலியுறுத்தும் தீர்மானத்தை அய்.நா.வில் இந்தியாவே கொண்டுவரவேண்டும் என்று மனித உரிமைக் குழுக்கள் சார்பில் வலியுறுத்தப்பட்டது. தமிழ்நாடு மக்கள் சிவில் உரிமைக் கழகம் ஏற்பாடு செய்திருந்த இரண்டு நாள் ஆய்வு மற்றும் கருத்தரங்கில், பரம்ஜித்சிங் (புதுடில்லி), சுஜாதா பத்துரா (மேவங்காளம்), சந்திசேகர் (ஆந்திரா), பாஸ்கர்ராவ் (ஆந்திரா), ராமசாமி (கருநாடகா),ரமேஷ் (கருநாடகா), ரகுநாத் (ஆந்திரா), கவிதா ஸ்ரீவத்வா (ராஜஸ்தான்) ஆகியோர் பங்கேற்றுப் பேசினர். பியு.சில் தேசிய செயலாளர் டாக்டர் சுரேஷ், தமிழ்நாடு தலைவர் பேராசிரியர் சரசுவதி, செயலாளர் டிஎஸ்எஸ்மணி பங்கேற்றனர். சிறப்பு அழைப்பாளர்களாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் அழைக்கப்பட்டிருந்தனர். ராஜஸ்தானில் 22 ஆண்டுகளுக்கு முன்பு குழந்தைத் திருமணத்தை தடுத்து நிறுத்தியதற்காக கூட்டாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பன்வாரிதேவி இந்தக் கூட்டத்தில் பங்கேற்று, ஈழத் தமிழர் மீது நடக்கும் இனப் படுகொலைக்கு இலங்கை அரசு தண்டிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

## மோடியை தோலுரித்த கழகக் கூட்டம்

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக 6.3.2014 அன்று மாலை 6 மணியளவில் இராஜ அண்ணா மலைபுரம் ஜே.ஜே. திருமண மண்டபம் அருகில் மோடி பிரதமராகக் கூடாது ஏன்? என்ற தலைப்பில் விளக்கக் கூட்டம் நடைபெற்றது. திருமூர்த்தி (உயர்நீதிமன்ற வழக்கறிஞர்), துரை அருண், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் செங்குட்டுவன், காஞ்சி மாவட்ட பொருளாளர் விழுப்புரம் அய்யனார் மற்றும் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்ட தலைவர் பா.ஜான் சிறப்புரை நிகழ்த்தினர். நிகழ்வின் தொடக்கத் தில் திருவல்லிக்கேணி பகுதி செயலர் அருண், தபேலா வாசிக்க, நா. நாத்திகன் பாடல்களை பாடினார். மண்ட அமைப்புச் செயலாளர் அன்பு தனசேகர், சென்னை மாவட்ட பொருளாளர் வேழ வேந்தன், மாவட்ட அமைப்பாளர் சுகுமாறன், காஞ்சி மாவட்ட செயலாளர் தினேசுகுமார், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மெய்யப்பன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### மார்ச் 16இல் திருவாரூர் தங்கராசு படத்திறப்பு

குத்தூசி குருசாமி – குருவிக்கரம்பை வேலு சுயமரியாதைப் பேரவை சார்பில் சுயமரியாதைச் சுடரொளிகள் நாள் கருத்தரங்கம் 16.3.2014 காலை 10 மணியளவில் திருவான்மியூர் 'இராகமங்களா' இல்ல மாடியில் (130, வால்மீகித் தெரு, திருவான்மியூர்) நடைபெறுகிறது. மருத்துவர் சவுந்தரபாண்டியன் தலைமையில் முடிவெய்திய திருவாரூர் தங்கராசு உருவப் படத்தை விடுதலை இராசேந்திரனும், திராவிடர் கழகப் பொருளாளர் கோ.சாமிதுரை படத்தை கவிஞர் செ.வை.ர. சிகாமணியும் திறந்து வைத்து பேசுகிறார்கள். கே.என்.இராமச்சந்திரன் (உடையார்பாளையம் வேலாயுதம் மருமகன்), கவிஞர் குடந்தையார் உரையாற்றுகிறார்கள். (தொடர்புக்கு: பேராசிரியர் இராசேந்திரன், பேசி: 9940203595)

## கல்லக்குறிச்சியில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம்

25.1.2014 அன்று விழுப்புரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் இடஒதுக்கீட்டை புறந்தள்ளும் தமிழக அரசைக் கண்டித்து கள்ளக்குறிச்சி அம்பேத்கர் சிலை அருகில் மாலை 4 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கல்லை சி.ஆசைத்தம்பி தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் செநாவாப் பிள்ளை, வெற்றிவேல், ச.பெரியார் வெங்கட், மா. பெரியார்குமார், க.இராமர், சென்னை டார்வின்தாசன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார். பல பகுதிகளிலிருந்தும் தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

# ‘மனு–அர்த்தசாஸ்திரங்களே’ சுரண்டலுக்கு வழி வகுத்தன!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

உயர்வதற்கும் உயர்த்துவதற்குமான ‘ஓர் சார்புத் தன்மை’ ஜாதியமைப்புக்குள்ளேயே அசைக்க முடியாமல் இறுகிப் போய் நிற்கிறது (Cronyism is built into the caste system).

வைசியர்கள் (பனியாக்கள்) என்ன செய்கிறார்கள்? அவர்கள் நம்பும் மதசாஸ்திரங்கள் அவர்களுக்காக விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்கிறார்கள். வட்டி வாங்கும் உரிமை வைசியர்களுக்கு உண்டு என்று “அர்த்த சாஸ்திரம்” கூறுகிறது. மனு சாஸ்திரம் எந்தப் பிரிவினரிடமிருந்து எவ்வளவு வட்டி வாங்க வேண்டும் என்று மேலும் விரிவாகக் கூறுகிறது. “பிராமணர்” களிடமிருந்து 2 சதவீதமும், க்ஷத்தியர்களிடமிருந்து 3 சதவீதமும், ‘சூத்திரர்’ களிடமிருந்து 5 சதவீதமும் வட்டி வசூலிக்கப்பட வேண்டும் என்று ‘மனு சாஸ்திரம்’ வரையறுத்துள்ளது. இதன்படி ஆண்டுக்கு ஒரு “பிராமணன்” 24 சதவீதமும், ஒவ்வொரு சூத்திரர், பஞ்சமர் - 60 சதவீதமும் வரி செலுத்தியாக வேண்டும். இன்றைக்கும்கூட கந்து வட்டிக்காரர்கள், ஏழை விவசாயிக்கு அல்லது நிலமற்ற ஒரு கூலித் தொழிலாளிக்கு 60 சதவீத வட்டி வாங்குவது வழக்கமாக உள்ளது. ஒரு வேளை அவர்கள் பணமாக செலுத்த முடியாதபோது, “உடல் ரீதியாக வட்டி” வாங்கிவிடுகிறார்கள். அதாவது, தலைதலைமுறையாக இந்த மக்கள் கடன் கொடுத்த ‘முதலாளி’க்கு அடிமையாக உடல் உழைப்பைத் தந்து வருகிறார்கள். திருப்பி செலுத்த முடியாத கடனுக்காக வட்டி இப்படி உடல் உழைப்பாக சுரண்டப்படுகிறது. ‘மனுசாஸ்திர’ப்படி எந்த ஒரு மேல்ஜாதியினரையும் ‘கீழ் ஜாதியினருக்கு’ சேவை செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது.

அர்த்தசாஸ்திரமும் மனு சாஸ்திரமும் வகுத்துள்ள வாழ்க்கை முறையினால் ‘வைசியர்கள்’ (பனியாக்கள்) தொழில் துறையை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டார்கள். “பூதேவர்கள்” என்று கூறிக் கொள்ளும், அதாவது வானத்திலிருந்து பூமியில் உள்ள அற்ப மனிதர்களுக்காக சேவை செய்வதற்காக கடவுளால் அனுப்பப்பட்டதாகக் கூறிக் கொள்ளும் “பிராமணர்கள்” என்ன செய்கிறார்கள்? 1931 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு “பிராமணர்கள்” 6.4 சதவீதம் என்று கூறுகிறது. ஆனால், இந்த சதவீதம்கூட, வைசியர்களைப்போல குறைந்து வந்துள்ளது. சமூக வளர்ச்சி ஆய்வு மய்யம் (Centre for the Study of Developing Society - CSDS) நடத்திய கணக்கெடுப்பின்படி நாடாளுமன்றத்தில் பார்ப்பனர் பிரதிநிதித்துவம் அவர்களின் மக்கள் தொகை விகிதாச்சாரத்தைவிட பல மடங்கு அதிகமாக இருக்கிறது. மக்கள் தொகை கணிசமாகக் குறைந்த போதிலும் அவர்களின் பிரதிநிதித்துவம் கூடுதலாக இருப்பது எதைக் காட்டுகிறது? பார்ப்பனர்கள் செல்வாக்கும் அதிகாரமும் குறைந்த வருகிறது என்ற கருத்தை இந்த உண்மைகள் மறுக்கின்றன.

அம்பேத்கர் புள்ளி விவரங்களுடன் விளக்குகிறார். 1948இல் சென்னை மாகாணத்தில் மக்கள் தொகை 3 சதவீதமாக இருந்த பார்ப்பனர்கள் அரசு பதவிகளில் 37 சதவீத ‘கெசட்டட்’ அதிகாரிகள் பதவிகளிலும் 43 சதவீத ‘கெசட்டட்’ அல்லாத பதவிகளிலும் இருந்தனர். 1931 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜாதி வாரியாக மக்கள் தொகைக் கணக்கெடுப்புகள் கைவிடப்பட்டதால் உண்மை நிலை மறைக்கப்பட்டது. எனவே 1931 ஆம் ஆண்டு நிலை அப்படியே தொடர்ந்ததா என்பதைக் கண்டறிய முடியவில்லை. மக்கள் தொகை விகிதாசாரத்தில் வகிக்கும் பதவிகள் பற்றிய பார்ப்பனர் புள்ளி விவரங்கள் ஏதும் கிடைத்திடாத நிலையில், இது தொடர்பாக வெளிவந்த தகவல்களை மட்டுமே நாம் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. 1990 ஆம் ஆண்டு குஷ்வந்த் சிங் (பிரபலமான பத்திரிகையாளர், எழுத்தாளர்), ‘பார்ப்பனர்கள் ஆதிக்க சக்தி’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார். அதில் இவ்வாறு கூறியிருந்தார்:

“மக்கள் தொகையில் **3.5** சதவீதம் உள்ள பார்ப்பனர்கள் 70 சதவீத அரசு வேலைகளில் இருக்கிறார்கள். உயர் அதிகாரிகளாக உள்ளவர்களை மட்டும் சுட்டிக்காட்டுகிறேன். துணை செயலாளர்கள் என்ற நிலைக்கு மேலாக உள்ள 500 பதவிகளில் 310 பேர் பார்ப்பனர்கள் (63 சதவீதம்); 26 தலைமைச் செயலாளர்களில் 10 பேர் பார்ப்பனர்கள்; 27 ஆளுநர்கள் மற்றும் துணை ஆளுநர்களில் 13 பேர் பார்ப்பனர்கள்; 16 உச்சநீதிமன்ற நீதிபதிகளில் 9 பேர் பார்ப்பனர்கள்; 330 உயர்நீதிமன்ற நீதிபதிகளில் 166 பேர் பார்ப்பனர்கள்; 140 வெளிநாட்டு தூதர்களில் 58 பேர் பார்ப்பனர்கள்; 3300 அய்.ஏ.எஸ். அதிகாரிகளில் 2376 பேர் பார்ப்பனர்கள். தேர்ந்தெடுக்கப்படுகிற பதவிகளிலும் இதே நிலைதான். 508 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 190 பேர் பார்ப்பனர்கள்; 244 மாநிலங்களவை உறுப்பினர்களில் 89 பேர் பார்ப்பனர்கள். **3.5** சதவீத மக்கள் தொகை கொண்ட பார்ப்பன சமூகம், நாட்டில் கிடைக்கக்கூடிய மொத்த பதவிகளில் 36 சதவீதத்திலிருந்து 63 சதவீதம் வரை இருக்கின்றனர் என்பதையே இந்த புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இது எப்படி சாத்தியமானது என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால், பார்ப்பனர்களின் “கூர்ந்த அறிவுத் திறன்” தான் இதற்குக் காரணம் என்பதை மட்டும் நான் நம்பத் தயாராக இல்லை” - என்று குஷ்வந்த் சிங் எழுதினார்.

குஷ்வந்த் சிங் தந்துள்ள இந்த புள்ளி விவரங்களில் பிழைகள் இருக்கலாம்; ஆனால், மிக மோசமான அளவில் பிழைகளாக இருக்க வாய்ப்பில்லை. அதற்குப் பிறகு கால்நூற்றாண்டு கடந்துவிட்டது. புதிய கணக்கெடுப்புகள் வந்தால் உண்மை நிலையைக் கண்டறிய முடியும். அதற்கான வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை.

சமூக வளர்ச்சி மய்யத்தின் (சி.எஸ்.டி.எஸ்.) கணக்கெடுப்பின்படி, 1950 முதல் 2000 வரை உச்சநீதிமன்ற நீதிபதிகளில் 47 சதவீதம் பேர் பார்ப்பனர்கள். இதே காலகட்டத்தில் உயர்நீதிமன்றங்கள் கீழ் நீதிமன்றங்களில் இணை நீதிபதிகளாக இருந்த பார்ப்பனர்கள் 40 சதவீதம். 2007 ஆம் ஆண்டுக்கான பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் அறிக்கை இந்தியாவில் உயர் அதிகாரிகளாக **37.17** சதவீதம் பார்ப்பனர்கள் இருப்பதாகக் குறிப்பிடுகிறது. இதில் பெரும்பாலோர் உயர் அதிகாரப் பதவிகளை ஆக்கிரமித்துள்ளனர்.

ஊடகங்களிலும் காலங்காலமாக பார்ப்பனர்களே ஆதிக்கத்தில் இருந்து வருகிறார்கள். இதில்கூட, 1945இல் அம்பேத்கர் கூறிய கருத்துகளே காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. “தீண்டப்படாதவர்களுக்கு பத்திரிகை இல்லை. காங்கிரஸ் நடத்தும் பத்திரிகைகள் தீண்டப்படாதவர்களை இருட்டடிக்கின்றன. அவர்கள் குறைந்த அளவில்கூட வெளிச்சத்துக்கு வந்துவிடக் கூடாது என்று உறுதியாக முடிவு செய்துவிட்டன. தீண்டப்படாதவர்கள் தங்களுக்காக பத்திரிகை நடத்த முடியவில்லை. அதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. விளம்பரங்கள் மூலம் வருவாய் இல்லாமல் எந்த ஒரு பத்திரிகையும் உயிர்வாழ முடியாது. விளம்பரங்கள், தொழில் வணிக நிறுவனங்களிடமிருந்து தான் கிடைக்கும். சிறிய தொழில் பெரிய தொழில் எதுவாக இருந்தாலும் அதன் உரிமையாளர்கள் காங்கிரசோடு இணைந்து நிற்கிறார்கள். காங்கிரஸ் அல்லாத எந்த அமைப்பையும் அவர்கள் ஆதரிக்க மாட்டார்கள்.

இந்தியாவிலே பத்திரிகைகளுக்கு செய்தி தரும் மிகப் பெரிய செய்தி நிறுவனமான ‘அசோசியேட்டட் பிரஸ்’சில் பணியாற்றுகிறவர்கள் அனைவருமே சென்னைப் பார்ப்பனர்கள். இந்தியாவில் வெளிவரும் அனைத்துப் பத்திரிகைகளுமே இவர்களின் கைப்பிடிக்குள்தான் அடக்கம். இந்த செய்தி நிறுவனம் வழங்கும் செய்திகளையே வெளியிடுகின்றன. இந்தப் பார்ப்பனர்கள் காங்கிரசுக்கு ஆதரவான செய்திகளை மட்டுமே தருவார்கள். காங்கிரசுக்கு எதிரான எந்த செய்தியும் விளம்பரமாகாமல் தடுத்து விடுவார்கள். தீண்டப்படாதவர்கள் சக்திக்கும் அப்பாற்பட்ட நிலை இது” என்கிறார் அம்பேத்கர்.

2006 ஆம் ஆண்டு சமூக வளர்ச்சி மய்யம் (சி.எஸ்.டி.எஸ்.) புதுடில்லியில் இயங்கும் ஊடகங்களின் சமூகப் பின்னணி குறித்த கணக்கெடுப்பு ஒன்றை வெளியிட்டது. அதன்படி, டெல்லியைத் தளமாகக் கொண்டு செயல்படும் 37 இந்தி மற்றும் ஆங்கில தொலைக்காட்சி மற்றும் அச்சு ஊடகங்களில் முடிவெடுக்கும் அதிகாரத்தில் இருக்கக்கூடிய 315 நபர்களைக் கண்டறிந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன. ஆங்கிலம் மற்றும் இந்தி அச்சு ஊடகங்களான பத்திரிகைகளில் 90 சதவீதம் பேரும், தொலைக்காட்சிகளில் 79 சதவீதம் பேரும் முடிவெடுக்கும் அதிகாரத்தில் இருக்கும் முன்னேறிய ஜாதியினர். இதில் 49 சதவீதம் பேர் பார்ப்பனர்கள். ஒருவர்கூட தலித்தோ, ஆதிவாசியோ இல்லை. ‘சூத்திரர்’ என்ற பிரிவில் உள்ளவர்கள் 4 சதவீதம்; முஸ்லிம்கள் 3 சதவீதம் (இவர்களின் மக்கள் தொகை 13.4 சதவீதம்). இது பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை. மிகப் பெரிய பத்திரிகை, தொலைக்காட்சி நிறுவனங்களின் உரிமையாளர்கள் யார்? 4 பெரிய ‘தேசிய’ நாளேடுகளில் மூன்று வைசியர்களிடமும், ஒன்று பார்ப்பனரிடமும் இருக்கிறது. ‘டைம்ஸ்’ குழுமம் (பென்னட் கோல்மென் அண்ட் கோ லிமிடெட்) நடத்தும் பல பத்திரிகைகளில் ‘டைமஸ் ஆப் இந்தியா’ நாளேடும், ‘டைம்ஸ்’ 24 மணி நேர தொலைக்காட்சியும் அடங்கும். இதன் உரிமையாளர் ‘பனியா’ (சமணர் குடும்பம்) ‘இந்துஸ்தான் டைம்ஸ்’ நாளேட்டின் உரிமையாளர் ‘பரியாஸ்’ என்ற பிரிவினர். இவர்கள் மார்வாரி பனியாக்கள். ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ குழுமமும் ‘கோயாங்கா’ எனும் மார்வாரி பனியாக்களுக்கே சொந்தமானது. ‘இந்து’ நாளேடு, பார்ப்பனர் குடும்பத்துக்கு உரிமையானது. இந்தியாவிலே அதிகம் விற்கக்கூடிய ‘தய்னிக் ஜெக்ரான்’ இந்தி நாளேடு, கான்பூரைச் சார்ந்த பனியாக்களான குப்தா குடும்பத்துக்கு சொந்தமானது. மிகவும் செல்வாக்குகளை மற்றொரு இந்தி நாளேடான ‘தைனிக் பாஸ்கர்’ அகர்வால் என்ற பனியாவுக்கு சொந்தமானது. குஜராத் பனியாவான அம்பானி குடும்பம் - 27 தேசிய, மாநில தொலைக்காட்சிகளின் முக்கிய பங்குதாரர். இவை அனைத்தும் அம்பானி குழுமத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

இந்தியாவின் மிகப்பெரும் செய்தி மற்றும் பொழுதுபோக்கு தொலைக்காட்சியான ‘இசட் டி.வி.’யின் உரிமையாளரான சுபாஷ்சந்திரா ஒரு பனியா. தென்னிந்தியாவில் ஜாதியத்தின் வெளிப்பாடு வேறு மாதிரியாக இருக்கிறது. உதாரணமாக ஈநாடு குழுமம் பல செய்தி பத்திரிகைகளோடு உலக அளவில் திரைப்பட நகரங்களையும் 12 தொலைக்காட்சி அலை வரிசைகளையும் நடத்தி வருகிறது. இதன் உரிமையாளர் ரமோஜிராவ், இவர் ஆந்திராவைச் சார்ந்த ‘கம்மவா’ என்ற விவசாயம் செய்யும் ஜாதிப் பிரிவைச் சார்ந்தவர் பார்ப்பன-பனியாக்களைப் போல் இந்தக் குழுமம் கொடிகட்டிப் பறக்கிறது. மற்றொரு ஊடகக் குழுமமான ‘சன்’ நிறுவனம் மாறன்களுக்குச் சொந்தமானது. இவர்கள் ‘பிற்படுத்தப்பட்டோர்’ என்று அழைக்கப்படுகிறார்கள்; அரசியலில் செல்வாக்குள்ளவர்கள் - என்று பட்டியலிட்டுள்ளார் அருந்ததிராய்!

**(அருந்ததிராய் பேட்டி – அடுத்த இதழில்)**

## விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு நாள் பரப்புரை இயக்கம்

22.2.2014 அன்று விழுப்புரம் மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சாதி, மத வாதத்தை எதிர்த்தும், சாதி மறுப்பு திருமணங்களை ஆதரித்தும் ஒரு நாள் முழுதும் பரப்புரை நடைபெற்றது. பரப்புரைப் பிரச்சாரத்திற்கு ச. பெரியார் வெங்கட் தலைமை வகித்தார். பரப்புரை காலை 10 மணியளவில் பறை முழக்கத்துடன் மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலை அருகில் துவங்கப்பட்டது. இலட்சுமணன், தோழர்களுக்கு தேநீர் ஏற்பாடு செய்தார். பின், 12 மணியளவில் வடசிறுவள்ளூர் பேருந்து நிலையம் அருகில் பரப்புரை நடைபெற்றது. தோழர்களுக்கு மதிய உணவை கல்லை ச.ஆசைதம்பி, தனங்கண்ணன் ஆகியோர் ஏற்பாடு செய்தனர். மாலை 3 மணியளவில் பகண்டை கூட்டு ரோடு ஒன்றிய பஞ்சாயத்து அலுவலகம் முன்பும், மாலை 6 மணியளவில் மூரார்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளி அருகிலும் நடைபெற்றது. தோழர்கள் செ.நாவாப்பிள்ளை, க.இராமர், ச.பெரியார் வெங்கட், மா.பெரியார் குமார், சென்னை ஜான், காஞ்சிபுரம் செங்குட்டவன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். முருகன், குப்புசாமி, கி.ஆனந்தன், திருநாவுக்கரசு, குமரேசன் உள்பட 45 தோழர்கள் பிரச்சாரத்தில் பங்கேற்றனர்.



DATE OF PUBLICATION 12.03.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# ‘முகமூடி’ மோடியின் உண்மை முகம் பாரீர்!

நரேந்திர மோடி பிரதமர் பதவிக்கே வந்து விட்டதைப் போலவே தொலைக் காட்சிகளும் பத்திரிகைகளும் கருத்துகளைப் பரப்புகின்றன. ‘தேசத் தந்தை’யாகவே மோடி, மக்கள் மீது திணிக்கப்படுகிறார்.

முகமூடி தரித்துவரும் ‘இந்த கதாநாயகன்’ எப்படி நடிக்க வேண்டும்? எதைப் பேச வேண்டும்? உடை எப்படி அணிய வேண்டும்? மக்களை எப்படி ஏமாற்ற வேண்டும்? இதற்காகவே ஒரு சர்வதேச நிறுவனத்தை (Apco Worldwide) மாதம் ரூ.25,000 அமெரிக்க டாலர் செலத்தி, வாடகைக்கு எடுத்துள்ளார் மோடி. இதில் இடம் பெற்றுள்ள வெளி நாட்டு நிபுணர்கள் தான் ‘தேச பக்த’ மோடிக்கு மக்களை ஏமாற்றும் தந்திர நடவடிக்கைகளை உருவாக்கித் தருகிறார்கள்.

மோடியின் முகமூடியை அகற்றிப் பார்த்தால் உண்மை முகம் அம்பலமாகிவிடும்.

- இந்தியாவை இந்துக்களின் நாடாக்கும் கொள்கைக்காக செயல்பட்டுவரும் ஆர்.எஸ்.எஸ்.சில் பயிற்சி பெற்று அரசியலுக்கு வந்தவர் மோடி. ‘இந்தியாவை இராணுவ மயமாக்கு; இராணுவத்தை இந்து மயமாக்கு’ என்பதே ஆர்.எஸ்.எஸ். அதன் துணை அமைப்புகளின் முழக்கம். இப்போது முன்னாள் இராணுவ தளபதிகள் அதற்காகவே பா.ஜ.க.வில் இணைந்து வருகிறார்கள்.
- நினைவிருக்கிறதா? அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதும் அதற்காக அத்வானி நாடு முழுதும் ரத யாத்திரை நடத்தியதும் நினைவிருக்கிறதா? அந்த யாத்திரைக்காக திட்டங்களை வகுத்து செயல்பட்டவர்தான் மோடி!
- 2002 ஆம் ஆண்டில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் கொடூரமாக மோடி ஆட்சியில் இனப் படுகொலைக்கு உள்ளானர்களே, மறக்க முடியுமா? இந்தப் படுகொலைகளை தடுக்க வேண்டாம் என்று காவல்துறைக்கு உத்தரவிட்டவர் இந்த மோடிதான். அப்போது மோடிக்கு ஆதரவாக செயல்பட்ட அவரது அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த ஹரேன்பாடியா எனும் அமைச்சர் விசாரணைக் குழுவின் முன் இந்த உண்மையைப் போட்டு உடைத்தார்.


  இதன் காரணமாக அடுத்த சில மாதங்களிலேயே அவர் மர்ம நபர்களால் படுகொலை செய்யப்பட்டார். கொலையுண்ட ஹரேன்பாடியாவின் தந்தை, இந்தக் கொலைக்குக் காரணம் மோடிதான் என்று குற்றம் சாட்டினார்., மோடியோ, பாகிஸ்தான் தீவிரவாதிகள் சதி என்று கதை கட்டி 17 அப்பாவி முஸ்லிம்களை கைது செய்தார். பொய் வழக்கு என்று கூறிய நீதிமன்றம் அனைவரையும் விடுதலை செய்தது.
- கலவரத்தின்போது பிணையில் வெளிவர முடியாத ஆள் தூக்கி சட்டங்களின் கீழ் மோடி கைது செய்த - அனைவருமே இஸ்லாமியர்கள்தான்.
- மூன்று முறை முதல்வராக இருந்த மோடி, எந்த ஒரு தேர்தலிலும் ஒரு வேட் பாளராகக்கூட முஸ்லிம் சமூகத்தைச் சார்ந்தவர்களை நிறுத்தியதில்லை. அவர் தான் இப்போது முஸ்லிம்களின் வாக்குக்காக முதலைக் கண்ணீர் வடிக்கிறார்.
- குஜராத் கலவரத்தில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டதை, தனது காரில் ஒரு நாய் குட்டி சிக்கியதைப்போல் உணர்ந்தேன் - என்று கூறியவர் தான் மோடி.
- இந்தியாவின் முதல் நிலையில் இருக்கக்கூடிய 100 முதலாளிகளில் 74 பேர் அடுத்த பிரதமராக மோடியே வரவேண்டும் என்று கருத்து கூறியுள்ளனர். மக்களைச் சுரண்டி கொள்ளையடிக்கும் மோடி பெருமுதலாளிகளின் வேட்பாளர்.
- ‘குஜராத்தில் கலவரம் நடந்தது உண்மைதான். ஆனால் மோடி மீது நீதிமன்றம் குற்றம்சாட்டவில்லை’ என்று பேசித் திரிகிறார்கள், மோடியின் பிரச்சாரப் புலிகள். இது முழு உண்மையல்ல. மோடிக்கு எதிராக வழக்குப் பதிவுசெய்வதற்கு போதுமான அளவில் சாட்சிகள் கிடைக்கவில்லை என்றுதான் நீதிமன்றம் கூறியிருக்கிறது. அவர்களிடம் மற்றொரு கேள்வி! மோடி அமைச்சரவையில் அமைச்சராக இருந்தவர் மாயா கோத்னானி; அவர் 28 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ஏன்? நரோ பாட்டியா என்ற இடத்தில் 69 இஸ்லாமியர்கள். (பெண்கள், குழந்தைகள் உட்பட) வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். அப்போது பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினராக இருந்த இந்தப் பெண், இந்தக் கொலைக்கு உத்தரவிட்டார் என்பது குற்றச்சாட்டு. இந்தப் படுகொலைகளை நடத்தியதற்காக 2007இல் பெண்கள், குழந்தைகள் நலத்துறை அமைச்சராக்கி அழகு பார்த்தவர்தான் ‘தேசபக்தர்’ மோடி!
- குஜராத் படுகொலைகள் உலகத்தையே அதிரச் செய்தன. மனித உரிமை அமைப்புகள் கண்டித்தன; இனி எந்த முகத்தோடு வெளிநாடுகளுக்குப் போவேன் என்று பிரதமராக இருந்த இவர்கள் கட்சியைச் சார்ந்த வாஜ்பாயே கூறினார். அது மட்டுமல்ல, அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பல அய்ரோப்பிய நாடுகள் தங்கள் நாட்டுக்குள் நுழையவே மோடிக்கு அனுமதி மறுத்தன. அந்தத் தடை இப்போதும் நீடிக்கிறது. இந்த மனிதர்தான் பிரதமராகி, இந்தியாவின் கவுரவத்தை உலகத்தில் உயர்த்திப் பிடிக்கப் போகிறாராம். இதை மக்கள் நம்ப வேண்டுமாம்!
- குஜராத் காவல்துறை மோடியைக் காப்பாற்றுவதாகக் கூறி ஒரு ‘போலி என்கவுண்டர்’ நடத்தியது. கல்லூரி மாணவி உள்ளிட்ட பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் தன்னை கொலை செய்ய திட்டமிட்டதாக மோடி கூறினார். நீதிமன்றம் இது பொய்யாக நடத்தப்பட்ட ‘என்கவுண்டர்’ என்று கூறியது. அதற்காக 32 காவல்துறை அதிகாரிகள் இப்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். காவல்துறை தலைமை அதிகாரி வன்சரா என்பவரும் ஒருவர். அவர் சிறையிலிருந்து மோடிக்குக் கடிதம் எழுதியுள்ளார். “அரசாங்கம் கூறியதற்காகவே நாங்கள் கொலை செய்தோம்; தண்டனை எங்களுக்கு மட்டும்தானா! அரசாங்கத்துக்கு இல்லையா?” என்று கடிதத்தில் கேட்டுள்ளார். ஊர் ஊராகப் போய் ‘சவால்’ விடும் மோடி, வாயை மூடிக் கொண்டிருக்கிறார்.
- “குஜராத்தைப் பாருங்கள்... அடேங்கப்பா... என்ன வளர்ச்சி?” என்று ஆர்ப்பரிக்கிறார்கள், மோடியின் சீடர்கள். அவை எல்லாம் கட்டுக்கதை என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. குஜராத்தில் பெரும் தொழிலதிபர்கள்தான் கொழுக்கிறார்கள். ஆனால் மக்கள்...? வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களில் குஜராத் இந்தியாவில் 9 ஆவது இடத்தில் இருக்கிறது. கல்வி கற்றவர்கள் எண்ணிக்கையில் தமிழ்நாட்டுக்குக் கீழே 5 ஆவது மாநிலம். குழந்தைகள் மரண வீதத்தில் இந்தியாவிலேயே முதலிடம் குஜராத்துக்குத்தான். பெண் குழந்தைகளை வெறுப்பதிலும், பெண் குழந்தைக் கொலைகளும் குஜராத்தில் அதிகம். ஆண்களுக்கு இணையாக பெண்கள் மிகக் குறைவாக இருப்பதில் இந்தியாவிலேயே 11 ஆவது இடத்தில் நிற்கிறது குஜராத். இரத்த சோகையால் பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகள் இந்தியாவிலேயே அதிகம் உள்ள மாநிலம் குஜராத். இன்னும் ஏராளமாகப் பட்டியலிட முடியும்.
- குஜராத்தில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள் 641 பேர். இவர்கள் விபத்தில் பலியானவர்கள் என்று காவல்துறை பொய்யாக வழக்குப் பதிவு செய்ய மோடி ஆட்சி கட்டாயப்படுத்துகிறது.
- மனித மலத்தை மனிதன் எடுப்பது புனிதமான தொண்டு என்று மோடி கூறினார். அது நூலாகவும் வெளிவந்து பிறகு திரும்பப் பெறப்பட்டது. மனித மலத்தை மனிதர்கள் எடுப்பது அங்கே பெருமளவில் நடைமுறையில் உள்ளது. பாதாள சாக்கடையில் இறங்கி, மூச்சுத் திணறி இறந்து போன துப்புறவுத் தொழிலாளர் எண்ணிக்கை 641 பேர்.
- குஜராத்தில் 90 சதவீதத்துக்கும் அதிகமான கிராமங்களில் தீண்டாமைக் கொடுமைகள் தொடருகின்றன. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல் இது. தேனீர்க் கடைகளில் தலித் மக்களுக்கு தனிக் குவளை. அதற்குப் பெயர் ‘இராம பாத்திரம்’. உயர்சாதியினர் கடைகளில் பொருள் வாங்க அவர்கள் நடத்தும் பேருந்துகளில் பயணிக்க, மதிய உணவுத் திட்டத்தில் பிற ஜாதிக் குழந்தைகளுடன் இணைந்து உணவருந்த.... என்று, தடைகள் நீடிக்கின்றன. ஆமதாபாத் போன்ற நகரங்களிலேயே ‘தலித்’ பிரிவினருக்கு ‘வீட்டுக்குடியிருப்புகள்’ தனியாகவே அமைக்கப்பட்டுள்ளன. அய்.ஏ.எஸ். போன்ற உயர் அதிகாரிகள்கூட இந்தக் குடியிருப்புகளில்தான் வாழ வேண்டும். ‘ஆமதாபாத்’ தொழில் நகரத்தில் மட்டும் இதேபோல் 300 குடியிருப்பு காலனிகள் உள்ளன. மூன்று முறை முதல்வராக இருந்த மோடி ‘தேனீர்க்கடை’யில் வேலை செய்து உயர்ந்தவன் என்று கூறிக் கொள்ளும் மோடியின் கண்களுக்கு இந்த அவலங்கள் தெரியவில்லையா?
- குஜராத்தில் பெரும் தொழிலதிபர்கள் வளருகிறார்கள் என்பதுதான் உண்மை. டாட்டா, அதானி, சத்ரலா, லார்சன் அண்ட் டூட்ரோ போன்ற பெரும் தொழில் நிறுவனங்களுக்கு அடிமாட்டு விலைக்கு நிலங்களை ‘தாரை’ வார்த்துள்ளார் மோடி! 2011-2012ஆம் நிதி ஆண்டில் பெரும் ‘பகாசுர’ தொழில் நிறுவனங்களுக்கு சந்தேகப்படும் வகையில் நியாயமில்லாமல் ரூ.1275 கோடியை மோடி, வாரி இறைத்ததை மத்திய தணிக்கை அதிகாரியின் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. ரூ.160 கோடியை அரசுக்கு செலுத்தாமல் ஏமாற்றிய அதானி நிறுவனத்துக்கு மோடி ஆட்சி ரூ. 240 மட்டும் அபராதம் விதித்து பிரச்சினையை முடித்துக் கொண்டது. ஏராளமாகப் பட்டியலிட முடியும்.
- எரிவாயுக்கு ஒரு யூனிட் விலையை மத்திய காங்கிரஸ் கட்சி 4 டாலரிலிருந்து 8 டாலராக உயர்த்தியது. மோடியின் குஜராத் ஆட்சி 16 டாலராக உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்துகிறது, ஏன்? சூரிய மின்சக்தியை எல்லா மாநிலங்களிலும் ஒரு யூனிட் ரூ.8க்கு வாங்கப்படும்போது குஜராத்தில் மட்டும் ரூ.15க்கு வாங்குவது ஏன்? சுரங்க ஊழலில் சிக்கி 3 ஆண்டு தண்டனை பெற்று பிணையில் வெளி வந்துள்ள பாபு பொக்கிரியா, மோடி அமைச்சரவையில் அமைச்சராக்கப்பட்டுள்ளார். ரூ.450 கோடி மீன் வள ஊழலில் சிக்கிய புருசோத்தம் சோலங்கி ‘கேபினட்’ அமைச்சர், அம்பானி குடும்பத்தின் மருமகன் சவுராவ் பட்டேல், குஜராத்தில் எரிவாயு, பெட்ரோலிய எரிசக்தித் துறை அமைச்சர், ஏன்? கெஜ்ரிவால் எழுப்பியுள்ள இந்த குற்றச்சாட்டுகளுக்கு மோடியிடமிருந்து பதில் இல்லை.
- இந்திய மருத்துவக் கவுன்சில்தலைவராக இருந்த கேதன் தேசாய் என்ற பார்ப்பனர், மருத்துவக் கல்லூரிக்கு அங்கீகாரம் வழங்க 2 கோடி லஞ்சம் வாங்கும்போது பிடிபட்டவர். 2010 ஏப்ரலில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். வீட்டில் சோதனையில் சுமார் 1500 கோடி ரூபாய் நோட்டுகளும் 250 கிலோ தங்கமும் பிடிபட்டன. நாட்டையே அதிர்ச்சியடையச் செய்த இந்த பார்ப்பனர் ஊழலால் இந்திய மருத்துவ கவுன்சிலே கலைக்கப்பட்டது. பிணையில் வெளி வந்துள்ள தேசாய் மீது வழக்கு நிலுவையில் இருக்கும்போதே மோடி ஆட்சி குஜராத் பல்கலை வழியாக இவரை (மீண்டும் மருத்துவக் கவுன்சிலுக்கு உயிரூட்டப்பட்டு), அதன் கவுன்சில் உறுப்பினராக்கியுள்ளது. இதற்கு மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத்தும் உடந்தை. இதற்கு எழுத்து மூலம் எதிர்ப்பு தெரிவித்த சுகாதாரத் துறை செயலாளர் கேசவ் தேசிகராஜ் - வேறு துறைக்கு தூக்கி அடிக்கப்பட்டுள்ளார். இதுதான் மோடியின் ஊழல் ஒழிப்பு லட்சணமா?

இந்த பார்ப்பன பாசிச சக்திகளிடம் தமிழர்களே, ஏமாறாதீர்!

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 13th March 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மார்ச் 20, 2014 | புரட்சி 13 | முழக்கம் 10 | விலை: ரூ.3.00

## வினாக்கள்... விடைகள்...!

+ குஜராத் கலவரத்துக்காக எங்கள் கட்சித் தலைவர் ராஜ்நாத் முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கேட்கவில்லை.
**– பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் முக்தார் அப்பாஸ்**

அப்படி மன்னிப்புக் கேட்டிருந்தால் அதற்காக மன்னிச்சுடுங்கன்னு சொல்ல வர்ரீங்களா...

+ அந்தமான் சிறையிலே அடைக்கப்பட்டிருந்தார் பகத்சிங். **– அகமதாபாத்தில் மோடி பேச்சு**

மோடிஜி! பகத்சிங் இருந்தது டில்லி சிறை; அந்தமான் சிறையிலிருந்தது வி.டி. சவர்க்கார். அட விடுங்கப்பா; ஏதோ ஒரு சிறை என்கிறீர்களா? ஹி.... ஹி....

+ அய்.நா.வில் அமெரிக்க தீர்மானத்தை பார்ப்பன ஊடகங்களும் 'அசல் திராவிடர் இயக்கமும்' சேர்ந்து ஆதரிக்கின்றன.
**– 'தமிழ்நெட்' இணையதளம்**

இப்படியும் கூறலாமே! அதே தீர்மானத்தை 'அசல் தமிழ் ஈழம்' பேசும் 'தமிழ் நெட்'டும் இராஜபக்சேவுடன் சேர்ந்து கொண்டு எதிர்க்கிறது.

+ சென்னை 'பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைக்கு' அரசு மருத்துவமனையிலிருந்து சிறப்பு மருத்துவர்கள் மாற்றப்பட்டு விட்டதால் அரசு மருத்துவமனைகளில் பணிகள் பாதிப்பு. **'தினமலர்' செய்தி**

விடுங்க.... பொது மருத்துவமனைகளை எல்லாம் அரசு செயலகங்களாக மாற்றி அம்மா அறிவிச்சுடுவாங்க!

+ ஓட்டுக்கு பணம் வாங்காதீர் என்று 'சத்யாகிரகா' அமைப்பினர், பொது மக்கள் காலில் விழுந்து பிரச்சாரம். **– செய்தி**

18 வயதுக்குக் கீழே உள்ளவர்களைப் பார்த்து காலில் விழுவார்களானால் கோரிக்கை முழு வெற்றி. இது உறுதி!

+ அரசியல் கட்சியின் நிர்வாகிகள் நடத்தும் கூட்டத்தில் பிரியாணி வழங்குவது தவறு இல்லை; அது தேர்தல் செலவு கணக்கில் சேர்க்கப்படும்.
**– தேர்தல் ஆணையம்**

சிக்கன் பிரியாணியா? மட்டன் பிரியாணியா? அல்லது வெறும் முட்டை பிரியாணியா என்று தெளிவுபடுத்தி விட்டால் அதிகாரிகள் பிரியாணியை சோதனை போடும் வேலையைக் குறைக்கலாமே!

+ தேர்தல் முடியும் வரை நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அலுவலகங்கள் இயங்கக் கூடாது. **– தேர்தல் ஆணையம்**

இது தேர்தல் முடியும் வரை தான். தேர்தலுக்குப் பிறகு நாடாளுமன்றமே இயங்காமல், வெற்றி பெற்றவர்களே கவனமாக பார்த்துக் கொள்வார்கள். கவலை வேண்டாம்!

+ தமிழகத்தில் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவது 'இறைவன்' கொடுத்த வரம்.
**– தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன்**

அப்படியே போட்டியிடுவதற்கு வேட்பாளர்களையும் 'வரமாக' தரச் சொல்லுங்க! ஆட்களே கிடைக்க மாட்டேங்குது!

+ ஜி.கே.வாசன், தங்கபாலு, ஜெயந்தி, ப.சிதம்பரம் தேர்தலில் போட்டியிட மறுப்பு. **– செய்தி**

கடைசியில் 'போட்டியிடாத வேட்பாளர்கள்' பட்டியலைத்தான் காங்கிரஸ் அறிவிக்கும் போல!

+ மோடி பிரதமராக – காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலில் "வேத விற்பன்னர்கள்" நடத்திய சிறப்பு யாகத்தில் பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் முரளிதர் ராவ் பங்கேற்றார். **– 'தினமலர்' செய்தி**

யாகத்துக்கான செலவை யார் கணக்கில் எழுதுவது? மோடி கணக்கிலா? 'காமாட்சியம்மன்' கணக்கிலா?

+ காங்கிரசிலிருந்து விலகி, தனிக்கட்சி தொடங்கியுள்ள ஆந்திர முன்னாள் முதல்வர் கிரண்குமார் கட்சியின் தேர்தல் சின்னம் செருப்பு. **– செய்தி**

வாக்குச் சாவடிக்கு செருப்பு போட்டு வருவதற்கு ஆணையம் தடை விதிக்குமே! அது பரவாயில்லை, 'சட்டை' அல்லது 'பேண்ட்'டை தேர்தல் சின்னமாக்கி விடாதீர்களய்யா!

# மே மாதம் முழுதும் கழக பயிற்சி முகாம்கள்!

**கழகத் தலைமை செயற்குழுவின் முடிவுகள்**

11.3.2014 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் சென்னை தலைமை நிலைய அலுவலகத்தில் திராவிடர் விடுதலைக் கழக தலைமைக் குழு கூடியது. கழக செயலவைத் தலைவர் சு.துரைசாமி தலைமையில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் முன்னிலையில் கூடிய இக்கலந்துரையாடல் கூட்டத்தில் கீழ்கண்டோர் பங்கேற்றனர்:

ஈரோடு ப. இரத்தினசாமி, பால். பிரபாகரன், தி.தாமரைக்கண்ணன், தபசி. குமரன், சூலூர் தமிழ்ச்செல்வி, புதுவை லோகு அய்யப்பன், அன்பு. தனசேகரன், இராம. இளங்கோவன், பல்லடம் விஜயன், மேட்டூர் அ. சக்திவேல், மயிலாடுதுறை இளையராஜா, திண்டுக்கல் இராவணன், கொளத்தூர் குமார், திருப்பூர் சிவகாமி, பேராசிரியர் இராமகிருட்டிணன்.

தலைமைக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள்:

**1. பொறுப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள்:**

சேலம் மண்டல பொறுப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் மே மாதம் 2, 3, 4 ஆகிய மூன்று நாட்கள் ஏற்காட்டிலும்,

கோவை மண்டல பொறுப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் மே மாதம் 12, 13, 14 ஆகிய மூன்று நாட்கள் உடுமலையிலும்,

மதுரை மண்டல பொறுப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் மே மாதம் 15, 16, 17 ஆகிய மூன்று நாட்கள் கொடைக்கானலிலும்,

நெல்லை மண்டல பொறுப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் மே முதல் வாரத்தில் மார்த்தாண்டத்திலும்,

தஞ்சை மண்டல பொறுப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் மே மாதம் 24, 25, 26 ஆகிய மூன்று நாட்கள் பூம்புகாரிலும்,

ஈரோடு மண்டல பொறுப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் ஜூன் மாதம் 6, 7, 8 ஆகிய மூன்று நாட்கள் கோபியிலும்,

சென்னை மண்டல பொறுப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் மே மாதம் 10, 11 ஆகிய இரண்டு நாட்கள் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**2. குழந்தைகள் பழகு மகிழ்வு முகாம்:**

மே மாதம் 12 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதி வரை இரண்டு கட்டமாக ஐந்தைந்து நாட்கள் குழந்தைகள் பழகு மகிழ்வு முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. ஐந்து நாட்களுக்கான கட்டணம் ரூ.1000 (ரூபாய் ஆயிரம்).

**3. இணைய தள தோழர்கள் சந்திப்பு:**

6.4.2014 ஞாயிற்றுக் கிழமை அன்று சென்னையில், இணைய தள தோழர்கள் சந்திப்பு நடத்த முடிவுசெய்யப்பட்டது.

# மதவெறிகளைக் கடந்த மனித உறவுகள்



குஜராத் கலவரத்தின்போது தன்னைக் கொலை செய்ய கத்தியுடன் வந்தவரைப் பார்த்து கண்ணீருடன் கையெடுத்துக் கும்பிட்டு மன்றாடும், கலவரப் படம், மனசாட்சியை உலுக்கிப் போட்டது. அப்படி, உயிருக்கு மன்றாடியவர் குத்புதின் அன்சாரி - தையல் கடை நடத்திய ஒரு இஸ்லாமியர். மத வெறியுடன் கத்தியை தூக்கிக் கொண்டு வந்தவர் அசோக் மோச்சி - செருப்பு தைக்கும் தொழிலாளி.

12 ஆண்டுகளுக்குப் பிறகு இருவரும் நட்புடன் அன்பைப் பரிமாறிக் கொண்ட நிகழ்வு, கேரள மாநிலம் கண்ணூரில் நடந்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கலை இலக்கிய அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு இது. குத்புதீன் - குஜராத்திலிருந்து இடம் பெயர்ந்து, மேற்கு வங்கத்தில் குடியேறிவிட்டார்.

நிகழ்ச்சியில் பேசிய குத்புதீன், "குஜராத்தில் மதவெறி தற்காலிகமாக அடக்கப்பட்டுள்ளது. இது மோடியை டெல்லிக்கு வழியனுப்பி வைப்பதற்குத்தான். என்னைக் கொலை செய்ய வந்த அசோக் மோச்சி மீது எனக்கு பகை இல்லை. அன்பு மட்டுமே உள்ளது. இவர்களை மோடி, தனது அரசியலுக்குப் பயன்படுத்தினார்" என்றார்.

அசோக்மோச்சி பேசுகையில், "இப்போது நான் மனிதன். குஜராத்தில் வளர்ச்சி, வளர்ச்சி என்று டமாரம் அடிக்கப்படுகிறது. எந்த வளர்ச்சியும் இல்லை. நான் இப்போதும் தெருவில் செருப்பு தைப்பவனாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பதே இதற்கு சான்று. பணம் இல்லாததால் நான் திருமணம்கூட செய்து கொள்ளவில்லை" என்றார்.

மதங்களைக் கடந்த மனித உறவுகளின் நெகிழ்ச்சியான சந்திப்பாக இது இருந்தது.

## கழகத் தோழர்கள் நடவடிக்கையால் மன்னை–திருப்பூரில் மூடிய பெரியார் சிலைகள் உடனடியாக திறக்கப்பட்டன



திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி மேல ராஜ வீதியில் உள்ள தந்தை பெரியார் சிலையினை மார்ச் (11) அன்று காலை தேர்தல் விதிகளை காரணம் காட்டி தேர்தல் அதிகாரிகள் துணிகளை கொண்டு மூடி சென்றுள்ளனர். தகவல் அறிந்த திருவாரூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தினர் மன்னை சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் மறைந்த தேசத் தலைவர்களின் சிலைகளை தேர்தல் கமிஷன் மூடக்கூடாது என்ற சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பினைக் காட்டி உடனடியாக தந்தை பெரியார் சிலையை பொதுமக்கள் பார்வைக்கு திறந்துவிட வேண்டுமென திராவிடர் விடுதலைக்கழக திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு தலைமையில் புகார் மனு அளித்தனர். புகார் மனுவை பெற்றுக்கொண்ட உதவி ஆட்சியாளர் உடனடியாக தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார்.

திராவிடர் விடுதலைக்கழகம் கொடுத்த புகார் மனுவில், கடந்த 2011ம் ஆண்டு நடைபெற்ற சட்ட மன்ற தேர்தல் போது தமிழகம் முழுவதும் தந்தை பெரியார் உட்பட பல்வேறு தலைவர்களின் சிலைகள் தேர்தல் கமிஷனால் துணி போட்டு மூடப்பட்டபோது அதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் திராவிடர் கழகம் வழக்கு தொடர்ந்தது. வழக்கை விசாரணை செய்த நீதியரசர் ஜோதிமணி உயிரோடு இருக்கும் தலைவர்களின் சிலைகளை தவிர மற்ற மறைந்த தேசத் தலைவர்கள் குறிப்பாக தந்தை பெரியார் சிலைகளை துணிபோட்டு தேர்தல் கமிஷன் மறைக்க கூடாது என உத்தரவு பிறப்பித்தார். மேற்கண்ட உத்தரவு நகலை மேற்கோள் காட்டி உடனடியாக பெரியார் சிலையை பொதுமக்கள் பார்வைக்கு திறந்து வைக்குமாறு திராவிடர் விடுதலைக் கழக புகார் மனுவில் கூறப்பட்டுள்ளது.

மார்ச் 12 புதன்கிழமை காலை 7 மணியளவில் மன்னார்குடி உதவி ஆட்சியாளர் தலைமையில் வந்த தேர்தல் அதிகாரிகள் பெரியார் சிலை மீது போடப்பட்டிருந்த துணிகளை மாவட்ட செயலாளர் காளிதாசு மற்றும் கழக பொறுப்பாளர்கள் சேரன் ரமேஷ், நல்லிக்கோட்டை முருகன், மா.மணிகண்டன், ராகுல்ராசு, அனுராசு, செந்தமிழன், பிரபாகரன், ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் அகற்றினர். இதேபோல் திருப்பூரில் மூடப்பட்ட பெரியார் சிலைக்கு எதிராக முகில்ராசு உள்ளிட்ட தோழர்கள் உயர்நீதிமன்ற உத்தரவைக் காட்டி புகார் தந்தனர். அதிகாரிகள் மூடிய துணியை அகற்றினர்.

## மார்ச் 29இல் மயிலாடுதுறையில் திராவிடர் விடுதலைக் கழக செயலவைக் கூட்டம்

எதிர்வரும் 29-03-2014 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு, நாகை மாவட்டம் மயிலாடுதுறையில், ( நிகழ்விடம் பின்னர் அறிவிக்கப்படும்) திராவிடர் விடுதலைக் கழக செயலவைக் கூட்டம் கீழ்கண்ட பொருள்கள் குறித்து விவாதிக்க, கழக செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி அவர்கள் தலைமையில், நடைபெற உள்ளது. அனைத்து செயலவை உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

**பொருள்:**

1. இந்துத்துவ எதிர்ப்புப் பரப்புரை
2. பரப்புரை வாகனம் வாங்குதல்
3. மய்ய அரசுப் பணிகளில் தென்னாட்டுக்கு வஞ்சனை
4. பல்கலைக் கழகங்களில் சோதிடக் கல்வி
5. பகுத்தறிவு பரப்புரை தொடர் கூட்டங்கள்
6. ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய் நன்கொடை திட்டம்
7. எதிர்கால வேலைத் திட்டம்

கொளத்தூர் மணி (தலைவர்)

விடுதலை இராசேந்திரன் (பொதுச் செயலாளர்)

## ஜாதியமைப்பு - ஏன் விவாதிக்கப்படுவதில்லை?



அம்பேத்கரின் ஜாதி ஒழிப்பு நூலுக்கு அருந்ததிராய் எழுதிய முன்னுரையிலிருந்து ஒரு பகுதியை கடந்த வாரம் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ பதிவு செய்திருந்தது. இது தொடர்பாக ‘அவுட் லுக்’ பத்திரிகையில் அருந்ததிராய் விரிவாக பேட்டி அளித்துள்ளார். அரசியல், பொருளாதாரம், ஊடகங் களில் பனியாக்கள் பார்ப்பனர்கள் கட்டுப்பாட்டில் இருப்பதை புள்ளி விவரங்களுடன் சுட்டிக்காட்டிய அருந்ததிராய் அரசியல் கட்சிகள் ஜாதியமைப்பு ஜாதி பிரச்சினைகள் குறித்து ‘கண்டு கொள்ளாத’ போக்கை மேற்கொள்வதையும் சுட்டிக் காட்டியுள்ளார். ‘மண்டல்’ பரிந்துரை அமுலாக்கத்துக்குப் பிறகு சமகால இந்திய அரசியலில் ஜாதி ஒரு அடிப்படை அம்சமாக மாறியிருக்கிறதே என்ற வாதத்துக்கு அருந்ததிராய் பதிலளித்துள்ளார். இந்தியாவில் சமகாலத்தில் அதிகாரம், ஊடகம், பொருளாதாரங்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஆதிக்க ஜாதிப் பிரிவினரையும் உரிமைகள் மறுக்கப் பட்டோரையும் பார்க்க மறுக்கிறார்கள்.

மண்டல் குழு பரிந்துரை அமுலுக்கு வந்த பிறகு, ஜாதி அரசியலுக்குள் வந்துவிடவில்லை. அதற்கு முன்பே ஜாதி என்ற என்ஜின்தான் ‘இந்து’ சமூகத்தை மட்டுமல்ல, இந்திய சமூகத்தையே இழுத்துக் கொண்டிருந்தது. 19 ஆம் நூற்றாண்டில் மன்னராட்சிகள் முடிவுக்கு வந்து ‘தேசங்கள்’ உருவான போதும் சரி, அதற்குப் பிறகு ‘அரசாங்கம்’, ‘மக்கள் பிரதிநிதிகள்’ என்ற அமைப்புகள், கருத்துகள் வந்த போதும் சரி, எந்தெந்த சமூகப் பிரிவினர், எவ்வளவு எண்ணிக்கை யில் இருக்கின்றனர் என்பதே முக்கிய பிரச் சினையாக இருந்து வந்திருக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஜாதிகளை ஆதிக்க ஜாதிகள் அடக்கி வந்துள்ளனர். அதன் காரணமாக இஸ்லாமியர்களாகவும், அதற்குப் பிறகு, சீக்கியர்களாகவும், கிறிஸ்துவர்களாகவும் ஒடுக்கப்பட்ட ஜாதியினர் மாறத் தொடங்கினர். பிறகு ‘இந்து’க்களின் எண்ணிக்கை குறையத் தொடங்குகிறதே என்ற கவலையில் தான் இந்து “சீர்திருத்த வாதிகளாக” புறப்பட்ட சிலர், மதமாற்றங்களைத் தடுக்கும் முயற்சிகளில் இறங்கினர்.

மதம் மாறிய “தீண்டப்படாத”வர்களையும் ஆதிவாசிகளையும் அவர்களுக்கான “தூய்மைச் சடங்குகளை” நடத்தி மீண்டும் இந்து மதத்துக்கு மாற்ற “ஆரிய சமாஜ்”, “சுத்தி” இயக்கத்தைத் தொடங்கியது. அதே வேலையை இப்போதும் விசுவ இந்து பரிஷத், பஜ்ரங்தள் போன்ற அமைப்புகள் செய்து வருகின்றன. ஆக, இந்திய அரசியலில் அடிப்படையாகவே ஜாதி தான் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

ஆனாலும்கூட ஜாதி ‘கண்டு கொள்ளப் படாத’ மய்ய அளவில் விவாதத்துக்குக் கொண்டு வரப் படாததை சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. நமது நாட்டில் ‘அறிவு ஜீவிகளுக்கு’ குறிப்பாக இடதுசாதி ‘அறிவு ஜீவிகளுக்கு’ ஜாதி அமைப்பை விவாதிப்பது கசப்பாகவே இருக்கிறது. ஆய்வுக் கட்டுரைகளில் அடிக்குறிப்புகளாக பயன்படுத்துவதோடு நிறுத்திக் கொள்கிறார்கள். அவர்களுக்கு விருப்பமில்லாத, சங்கடத்துக்களாக்குவதாகவே ஜாதியப் பிரச்சினை இருப்பதோடு, மார்க்சியம் கூறும் ‘வர்க்க’ விவாதங்களுக்கு ஜாதி பற்றிய விவாதங்கள் அவர்களுக்கு தேவையற்றதாகி விடுகிறது. “எங்களுக்கு ஜாதியில் நம்பிக்கை இல்லை” என்று கூறுவதே சிறப்பாகவும் முற்போக்காகவும் கருதப்படுகிறது. இது தப்பித்துக் கொள்ளும் செயல்பாடுதான்.

ஜாதியை எதிர்த்துப் போராட வேண்டிய நியாயத்தைப் பேசாமல் ஒதுங்கிக் கொள்கிற போக்கு. நம்முடைய அனைத்து பண்பாட்டு நடவடிக்கைகளிலும் இப்படி ஜாதியம் குறித்த பார்வை அழுத்தம் தரப்படாமல் ஒதுக்கப்படுகிறது. பிரபலமான எழுத்தாளர்களின் எழுத்துகளிலோ, திரைப்படங்களிலோ, ஜாதி குறித்து பேசப்படுகிறதா? நீதி குறித்தும் அடையாளம் குறித்தும் பேசுவோரும் எழுதுவோரும் ‘புதிய பொருளாதார’த்தை விமர்சிப்போரும் ஜாதி பற்றி எவ்வளவு பேர் பேசுகிறார்கள்? எழுதுகிறார்கள்? புரட்சிகரமான தீவிரவாத அமைப்புகள் கூட ஜாதிப் பிரச்சினையை ஒதுக்கி வைத்து விட்டன. 2001இல் தென்னாப்பிரிக்காவில் டர்பனில் நடந்த இனவெறி எதிர்ப்பு மாநாட்டில் ஜாதியும் ஒரு இனவெறியாகக் கருதப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டபோது இந்திய ஆட்சி, அதை ஏற்காமல் மறுத்தது எதைக் காட்டுகிறது?

அதேபோல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலும் இந்தியா ஜாதி குறித்த புள்ளி விவரங்களை கணக்கெடுக்க மறுத்து விட்டது. இதனால் ஜாதியின் பெயரால் மறுக்கப்படும் உரிமைகள், அடக்கு முறைகள் வெளியே தெரியாமல், இருட்டுக்குள்ளேயே நம்மை மூழ்கடித்து விட்டார்கள். அமெரிக்காவில் 1919இல் 165 கறுப்பின மக்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்றால், அதற்குப் பிறகு ஒரு நூற்றாண்டு காலம் கழித்து இந்தியாவில் 2012இல் 8 1574 தலித் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். 651 தலித் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இது அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரம்.

ஜனார்த்தன், திரிவேதி போன்ற காங்கிரஸ்காரர்கள் இடஒதுக்கீடு ஜாதி அடிப்படையில் வழங்கக் கூடாது; பொருளாதார அடிப்படையில் வழங்க வேண்டும் என்று கூறுவது வன்மையான கண்டனத்துக்குரியது. ஜாதி அடிப்படையிலான இடஒதுக்கீடு மிக மிக அவசியமானது. இடஒதுக்கீடு இருப்பதால்தான் குறைந்த அளவிலாவது தலித் மக்கள் உயர் பதவிகளிலும், மருத்துவர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் வர முடிந்திருக்கிறது. பல கல்வி நிறுவனங்களில், நீதித்துறையில், முற்போக்கு கல்வி நிறுவனங்களாகக் கருதப்படும் ஜவகர்லால் நேரு பல்கலையில்கூட முறையான இடஒதுக்கீடுகள் இல்லை. தெரு கூட்டுதல், சாக்கடைக் குழிக்குள் இறங்குதல் போன்ற உயிருக்கு ஆபத்தான உடலைப் பாதிக்கக்கூடிய வேலைகளுக்குத்தான் தலித் மக்களுக்கு முழுமையான இடஒதுக்கீடு இருக்கிறது. இந்தத் துறைகளில்கூட தனியார் மயம் வந்த பிறகு, இந்த துப்புரவு வேலைகளுக்கு குறைந்த கூலியில் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு எடுக்கப்படும் நிலைக்கு ‘தலித்’ மக்கள் தள்ளப்பட்டு விட்டனர்” என்று கூறியுள்ளார் அருந்ததிராய்.

**(மீதி அடுத்த இதழில்)**


“புரட்சிப் பெரியார் முழக்கம்”

**ஆண்டுக்கட்டணம்**

**ரூ.200**

தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535

# ராஜிவ் கொலை விசாரணையில் காங்கிரசின் துரோகம்

*தமிழக முதல்வர் 7 பேரை விடுதலை செய்தவுடன் துள்ளி குதிக்கும் காங்கிரசார், ராஜிவ் மீது உண்மையான பற்று கொண்டவர்கள் தானா? ராஜீவ் பாதுகாப்பில் அலட்சியம் காட்டியதோடு தவறு செய்தவர்களை காப்ாபற்ற முயன்றார்கள். இதோ, ஆதாரங்களுடன்....*

- ராஜீவ் காந்தி கொலை நடந்தபோது மத்தியில் ராஜீவின் 'எடுபிடி'யான சந்திரசேகர் தலைமையிலான ஆட்சி நடந்தது. வி.பி. சிங் ஆட்சியை கவிழ்த்த காங்கிரஸ், தனது ஆதரவோடு சந்திரசேகர் தலைமையில் ஒரு பொம்மை ஆட்சியை உருவாக்கியிருந்தது. சந்திரசேகர் ஆட்சியில் சட்ட அமைச்சராக இருந்தவர் சுப்ரமணியசாமி. ராஜீவ் கொலை நடந்த அடுத்த 6வது நாளில் ஜெக்தீஷ் சரண்வர்மா (ஜெ. எஸ். வர்மா) என்ற உச்சநீதி மன்ற தலைமையில் ஒரு விசாரணை ஆணையத்தை சந்திரசேகர் ஆட்சியில் உள்துறை அமைச்சராக இருந்த சுபத்காந்த் சகாய், 1991 மே 27 ஆம் தேதி அறிவித்தார். ராஜீவ் காந்திக்கு செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் கோளாறுகள், குறைகள் நடந்தனவா என்பது குறித்து ஆராய்வதே இந்த ஆணையத்தின் பணி என்று உள்துறை அமைச்சகம் அறிவித்தது. இதை அப்போது காங்கிரஸ் எதிர்த்தது. ராஜீவ் கொலையின் சதித் திட்டங்கள் பற்றியும், விசாரணை வரம்பு விரிவாக்கப்பட வேண்டும் என்று அப்போது காங்கிரஸ் தலைவராக இருந்த பி.வி. நரசிம்மராவ், பிரதமர் சந்திரசேகருக்கு கடிதம் எழுதினார். ஆனால், ஜெ.எஸ். வர்மா பாதுகாப்பு குறைபாடுகள் தொடர்பான பிரச்சினைகளை மட்டுமே தம்மால் விசாரிக்க முடியும் என்று உறுதியாகக் கூறிவிட்டார். அதன் காரணமாகவே ஜெ.எஸ். வர்மா விசாரணை வரம்பிலிருந்து ஒதுக்கப்பட்ட அயல்நாட்டு சதி தொடர்புகள் குறித்து விசாரிக்க உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.ஜி. ஜெயின் தலைமையில் மற்றொரு விசாரணை ஆணையம் 1991 ஆக. 23 இல் அமைக்கப்பட்டது.
- சந்திரசேகர் ஆட்சியின்போதும் அடுத்த சில மாதங்களில் அமைந்த நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியின்போதும் நீதிபதி வர்மா ஆணையம் செயல்படுவதற்கான நடவடிக்கைகளில் ஆட்சியாளர்கள் ஆர்வம் காட்டவில்லை. அலுவலக செயலாளரோ, பணியாளர்களோ நியமிக்கப்படவில்லை. மனம் குமுறிய ஜெ.எஸ். வர்மா, வெளிப்படையாகவே, "இந்தியாவின் ஜனநாயக முதிர்ச்சி, எந்த அளவுக்கு உள்ளது என்பதையே இது காட்டுகிறது. இது இந்தியாவின் கவுரவம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. உலக மக்கள் இதை உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள்" (2.5.1991 'இந்து' நாளேடு) என்று கூறினார். ஒரு வழியாக நீதிபதி சர்மா, 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பித்தார். 5 மாதங்கள் கழித்து டிசம்பர் மாதம் தான் நரசிம்மராவ் ஆட்சி, அறிக்கையை நாடாளுமன்றத்தில் வைத்தது. உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் சர்மா அறிக்கையின் பரிந்துரைகளை முற்றிலுமாக நிராகரித்தார். ஆனால், காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களே, இந்த அறிவிப்பை கடுமையாக எதிர்த்ததால், பிரதமர் நரசிம்மராவ், அறிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் உருவானது. அதன் பிறகும், இரண்டு ஆண்டுகாலம் அறிக்கை கிடப்பில் போடப்பட்டது. பிறகு எதிர்கட்சிகள் வற்புறுத்தலைத் தொடர்ந்து, மத்திய அமைச்சர்களைக் கொண்ட குழு ஒன்று அறிக்கையை பரிசீலித்து, அரசுக்கு ஆலோசனை வழங்க அமைக்கப்பட்டது.
- வர்மாவின் அறிக்கை மத்திய மாநில ஆட்சிகளின் காவல்துறை, உளவுத் துறையைக் கடுமையாகக் குறை கூறியது. ராஜீவ் கொலை நடந்தபோது மத்தியில் நடந்த சந்திரசேகர் ஆட்சியும், தமிழ்நாட்டில் நடந்த ஆளுநர் ஆட்சியும் காங்கிரசின் 'பினாமி' ஆட்சிகள் தான் என்பதை நினைவில் நிறுத்த வேண்டும். ராஜீவுக்கு பாதுகாப்பு வழங்குவதில் தமிழக காவல்துறை, தமிழக அரசு, இந்திய உளவுத் துறை மற்றும் ராஜீவ் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த காங்கிரசார் தங்கள் கடமையிலிருந்து நழுவி விட்டனர் என்று குற்றம்சாட்டியது வர்மா அறிக்கை, இவர்கள் ஒழுங்காக செயல்பட்டிருந்தால் ராஜீவ் கொலையைத் தடுத்திருக்க முடியும் என்று கூறியது.

ஸ்ரீபெரும்புதூர் காங்கிரஸ் வேட்பாளர் மரகதம் சந்திரசேகருக்கும், தமிழ்நாடு காங்கிரசுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் இருந்ததால், மரகதம் சந்திரசேகர், தமிழக காங்கிரசார் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்வதைத் தவிர்த்து, தானே ஏற்பாடு செய்தார் என்றும், உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய வேண்டிய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும், தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் ஒதுங்கி நின்றார் என்றும் ஆணையம் குற்றம் சாட்டியது. வர்மா விசாரணை ஆணையத்துக்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி எவ்வித ஒத்துழைப்பையும் தரவில்லை என்று கூறிய அந்த பரிந்துரை, **"ஸ்ரீபெரும்புதூர் பொதுக் கூட்டம் நடந்த இடத்தில் காங்கிரஸ் கட்சிக்காரர்களின் செயல்பாடுகள் எந்தவிதமான ஒழுக்கமும் இல்லாமல் பொது இடத்துக்குரிய பொறுப்பின்றி இருந்தது"** என்று கடுமையாக காங்கிரசாரை இடித்துரைத்தது.

- வர்மா அறிக்கை பற்றி பரிசீலிக்க அமைக்கப்பட்ட அமைச்சர்கள் குழு, கடமை தவறிய சில மூத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. கடமை தவறிய நான்கு மூத்த அதிகாரிகளிடம் அமைச்சரவைக் குழு நேரில் விசாரணை நடத்தி விளக்கம் கேட்டது. உளவுத் துறை தலைவர் எம்.கே. நாராயணன், உள்துறை செயலாளர் ஜி.எஸ். மணிசர்மா, பாதுகாப்புச் செயலாளர் ஜி.எஸ். வாஜ்பாய், அமைச்சரவை செயலாளர் வினோத் பாண்டே ஆகியோர் தான், விசாரணை நடத்தப்பட்ட அதிகாரிகள். ஆனால், இவை எல்லாமே கண்துடைப்பு நாடகம் தான். வர்மா, பரிந்துரையை சமர்ப்பித்தபோது, இந்த அதிகாரிகள் பதவியில் இருந்தார்கள். ஆனால், அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகே, விசாரணை நடத்தி விளக்கம்

## அம்பலப்படுத்துகிறது வர்மா ஆணையம்

கேட்கப்பட்டது. பணி ஓய்வு பெற்ற பிறகு, நடவடிக்கை எடுக்க இயலாது என்பதைத் தெரிந்தே, காங்கிரஸ் ஆட்சியினர், இப்படி ஒரு விசாரணை நாடகத்தை நடத்தினர். உடனடியாக, அந்த நான்கு அதிகாரிகளும், தங்களிடம் விளக்கம் கேட்கப்பட்டதை எதிர்த்து, மத்திய நிர்வாக மன்றத்திடம் முறையீடு செய்தனர். ஓய்வு பெற்ற பிறகு, இவர்களிடம் விளக்கம் கேட்பது, முறையற்றது என்று நிர்வாக மன்றம் தீர்ப்பளித்து விட்டது. ராஜீவ் கொலையில் கடமையை செய்யாமல் தவறிழைத்த அதிகாரிகளை காங்கிரஸ் ஆட்சியே இப்படி திட்டமிட்டு காப்பாற்றியது. வர்மா ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் எந்த ஒரு நடவடிக்கையையும் காங்கிரசாரோ, காங்கிரஸ் ஆட்சியோ இதுவரை எடுக்கவில்லை என்பதோடு குற்றம்சாட்டப்பட்டவர்களையும் காப்பாற்றி விட்டார்கள்.

- ராஜீவ் கொலை நடந்தபோது, இந்தியாவின் உளவுத் துறை இயக்குனராக இருந்தவர் எம்.கே. நாராயணன். ஜெ.எஸ். வர்மா ஆணையம், தனது அறிக்கையில் எம்.கே. நாராயணன் 'நம்பகத்தன்மை' குறித்து கேள்விகளை எழுப்பியது.

ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் மீது குண்டு வெடிக்கும் போது எடுக்கப்பட்ட வீடியோ படத்தின் மூலப் பதிவு சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் இருந்தது போலவே, உளவுத் துறை இயக்குனர் எம்கே. நாராயணனிடமும் இருந்தது. ஆனால், இந்த வீடியோ மூலப் பதிவை சிறப்புப் புலனாய்வுக் குழுவும் எம்.கே. நாராயணனும், வர்மா ஆணையத்திடம் தரவில்லை. தங்களிடம் அப்படி எந்த ஒரு 'வீடியோ கேசட்டும்' இல்லை என்றே சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவர் கார்த்திகேயன், ஆணையத்திடம் கூறி விட்டார் என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. அதன் பிறகு, இந்த வீடியோ காட்சிகளில் ஏதேனும் அழிக்கப்பட்டுள்ளதா என்று வெளிநாட்டு நிபுணர்கள் ஆய்வு செய்து கொண்டிருப்பதாக கார்த்திகேயன் வர்மா ஆணையத்தில் தெரிவித்து விட்டார். கடைசி வரை அந்த படப்பதிவு ஆணையத்திடம் தரப்படவில்லை. விசாரணையின் கடைசி அமர்வில்கூட இது பற்றி நீதிபதி வர்மா கேட்டார். அப்போதும்கூட ஆய்வின் முடிவுகளுக்காகக் காத்திருப்பதாகவே, ஆணையத்திடம் கார்த்திகேயன் சார்பில் கூறப்பட்டது.

வர்மா ஆணையத்திடம் வழங்கப்பட்ட பிரதி எடுக்கப்பட்ட அந்த வீடியோ பதிவுகளில் வெடிகுண்டுப் பெண் ராஜீவுக்கு மாலையிட முயன்று வெடிகுண்டை வெடிக்கச் செய்யும் காட்சிகள் தெளிவின்றி திட்டமிட்டே மங்கலாக்கப்பட்டிருந்தன என்று வர்மா, தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். மிக முக்கியமான இந்தக் காட்சிகள் மட்டும் ஏன் மங்கலாக்கப்பட்டன என்ற கேள்வியை நீதிபதி வர்மா எழுப்புகிறார். பாதுகாப்பு குறைபாடுகள் பற்றி விசாரணை நடத்திய வர்மா, ஆணையத்திடம் வீடியோ கேசட் மூலப்பதிவை தர மறுத்த அதே சிறப்புப் புலனாய்வுக் குழு, அன்னிய சதி பற்றி விசாரணை நடத்திய ஜெயின் ஆணையத்திடம் நான்கு வீடியோ கேசட்டுகளை வழங்கியது. காரணம், பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யத் தவறிய அதிகாரிகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற உள்நோக்கம் தான். இது தவிர, ராஜீவ் காந்தி விமான நிலையத்திலிருந்து இறங்கி, ஸ்ரீபெரும்புதூர் சென்றது வரை எடுக்கப்பட்ட வீடியோ கேசட், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிடம் இருந்தது. ஆனால், காங்கிரஸ் கட்சியின் ஒருங்கிணைப்பாளர்கள், அந்த வீடியோ பதிவு தங்களிடம் இல்லை என்றும், அதை காவல்துறை கைப்பற்றியிருக்கலாம் என்றும், வர்மா ஆணையத்திடம் கூறிவிட்டனர். ராஜீவுடன் வந்த காங்கிரஸ்காரர்கள் ஏன் ஸ்ரீபெரும்புதூர் போகவில்லை என்ற கேள்விக்கு பதில் சொல்ல வேண்டிவருமே என்ற அச்சம்தான் இதற்குக் காரணம். இது குறித்து வர்மா தனது வருத்தத்தைப் பதிவு செய்துள்ளார். 'விடுதலைப் புலிகளுக்கு அப்பால்' நூலில் அதன் ஆசிரியர் ராஜீவ் சர்மாவும் கீழ்க்கண்ட கேள்விகளை எழுப்புகிறார்.

ராஜீவ் படுகொலையில் இறுதி வினாடி வரை, அனைத்து நிகழ்வுகளும் வீடியோ பதிவு செய்யப்பட்டதா? கொலை சதிக்கு திட்டமிட்டவர்கள் மீது கேமிரா பார்வை விழுந்ததா? தாணு மற்றும் சிவராசன் அருகில் யார் யார் நின்றார்கள்? அல்லது அமர்ந்தார்கள்? கேமிராவில் உள்ள சில பதிவுகளை திட்டமிட்டு மங்கலாக்கியது யார்? இதற்கு ஆணையிட்டது யார்? என்ற கேள்விகளை எழுப்பியுள்ளார்.

- எம்.கே. நாராயணன் பற்றி வர்மா ஆணையம் தெரிவித்துள்ள கருத்துகள் மிகவும் குறிப்பிடப்பட வேண்டியதாகும். "ராஜீவ் காந்திக்கு அளிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் எம்.கே. நாராயண னுக்கு திருப்தி அளிக்கவில்லை என்பதை இந்த ஆணையம் உணருகிறது. **ஆனால் வெளியே சொல்ல முடியாத காரணங்களால்,** அவரால் இதற்கு எதிராக, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது பற்றி, இன்றைய நாள்வரை எம்.கே. நாராயணன் வாயை மூடி மவுனம் சாதிக்கிறார். உயர்மட்டத்தில் நடக்கும் இந்தக் குறைபாடுகளுக்கான காரணங்களை கண்டறிந்து, உடனே களைய வேண்டும்" என்று வர்மா ஆணையம் குறிப்பிடுகிறது. இது குறித்து ராஜிவ் சர்மா, தனது நூலில் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

"ராஜீவ் உயிருக்கு திட்டவட்டமான அச்சுறுத்தல் உள்ளது என்பதை எம்.கே. நாராயணன் முன்கூட்டியே தெரிந்திருந்தாரா? அல்லது ராஜீவ் பாதுகாப்புக் குறைபாடுகளை சரி செய்ய விரும்பினாலும், 'அதிகார பலம் கொண்ட மேலிட உத்தரவினால்' அவரால் செயல்பட முடியாமல் போனதா? ராஜீவ் மரணத்தால், அரசியல் ரீதியாக பயனடைந்தவர்கள் யார்? ராஜீவ் கொலை செய்யப்படுவதற்கு முதல்நாள் மே 20 அன்று அப்போதைய உளவுத் துறையின் இணை இயக்குனர் எஸ்.கே. தாக்கூர் அனைத்து மாநில காவல்துறை தலைமை அதிகாரிகளுக்கும், ராஜீவ் பாதுகாப்பை அதிகரிக்கக் கோரி, ஒரு கடிதம் எழுதியிருந்தார். அப்படியானால், அடுத்த நாள் ராஜீவ் கொலை நடக்கப் போகிறது என்பது முன்கூட்டியே தெரியுமா? ஏன் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை, என்ற கேள்விகளை அவர் முன் வைக்கிறார்.

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 19.03.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# குஜராத் இனப் படுகொலையை தூண்டியவர் மோடி

2013 செப்டம்பர் 18 அன்று கலவரத்தில் கொலை செய்யப்பட்ட காங்கிரஸ் எம்.பி. எஷான் ஜஃரியின் மனைவி திருமதி ஜக்கியா ஜஃப்ரி, அகமதாபாத் 11 ஆவது பெருநகர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்துப் பூர்வமான குற்றமுறையீட்டின் சுருக்கத்தை கீழே தந்திருக்கிறோம்.

அதில் மோடிக்கு எதிராக கூறப்பட்ட குற்றச்சாட்டுகள்:

1. 2002 பிப்ரவரி 27 அன்று துயரார்ந்த கோத்ரா சம்பவம் நடைபெறுவதற்கு முன்பு 'மகாயஜ்னா' என்ற பெயரில் ஆர்.எஸ்.எஸ்/விஸ்வ இந்து பரிசத் அமைப்புகளின் வன்முறை நடவடிக்கைகள் குறித்து, புலனாய்வு அமைப்புகள் அனுப்பிய செய்திகளை அரசு வேண்டுமென்றே உதாசீனம் செய்தது. இந்த செய்திகளில் பைசாபாத் - அயோத்யாவிற்கு அனுப்பப்பட்ட 2800 மற்றும் 1900 கரசேவகர்கள் செல்லும் வழியெல்லாம் முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.
2. கோத்ரா ரயில் நிலையத்தில் சபர்மதி எக்ஸ்பிரஸ் வரும் சமயத்தில் கரசேவகர் களால் முஸ்லிம்களுக்கு எதிராக ஆத்திரமூட்டும் வகையில் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இவ்வாறு ஆத்திரமூட்டும் வகையில் முழக்கங்கள் எழுப்பப் படுவது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் ஜெயந்திர ரவி, அரசாங்கத்திற்குத் தெரிவித்திருந்தும், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட வில்லை. மாறாக வன்முறை நிகழ்வுகள் மிக வேகமாகப் பெருகுவதற்கு அனுமதிக்கப்பட்டது.
3. குஜராத் மாநிலம் முழுவதும் விஸ்வ இந்து பரிசத்தின் சதித் திட்டங்களுடன் முஸ்லிம் மக்களுக்கு எதிராக பழி வாங்கும் நடவடிக்கைகள் கட்டவிழ்த்துவிடப்பட அனுமதிக்கப்பட்டன. மோடி மேற்கொண்ட முதல் தொலைபேசி கட்டளையே அமைதி திரும்ப எவ்வித நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதுதான். மாறாக மோடி, குஜராத்தின் விஎச்பி செயலாளரான டாக்டர் ஜெய்தீப் பட்டேலுக்கு போன் செய்து அவரைக் கோத்ராவிற்கு செல்லுமாறு பணித்திருக்கிறார். இவ்வாறு மோடிக்கும் விஸ்வ இந்து பரிசத்துக்கும் இடையிலான சதித் திட்டம் ரகசியமாகத் திட்டமிடப்பட்டு மாநிலம் முழுவதும் முஸ்லிம்கள் கொல்லப்படுவது மேற்கொள்ளப்பட்டது.
4. விஸ்வ இந்து பரிசத் பந்த் நடத்திடவும், வீதிகளிலும் பொது இடங்களிலும் தாக்குதல்கள் மற்றும் வன்முறைகளில் ஈடுபட அனுமதித்ததும் மிகவும் மோசமானவைகளாகும். 2002 பிப்ரவரி 27 அன்று மதியமே மாநிலப் புலனாய்வுப் பிரிவினருக்கும், காவல் துறையினருக்கும் பந்த் அழைப்புக் குறித்து நன்கு தெரியும். அதுமட்டுமல்ல அதனைத் தொடர்ந்து காவல்துறை நிர்வாகம் வீதிகளில் இருந்த சாமானிய மக்களை அப்புறப்படுத்தி, கலகக் கும்பல் முஸ்லிம் மக்கள் மீதும் அவர்களின் கடைகளின் மீது மட்டும் வன்முறை வெறியாட்டங்களை நடத்த வசதி செய்து கொடுக்கப்பட்டன.
5. கோத்ரா இரயில் நிலையத்தில் தீக்கிரைக்கு ஆளான சடலங்களை மக்கள் மனதில் முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆர்.எஸ்.எஸ்./வி.எச்.பி.யினர் பார்ப்பதற்கும், அவற்றின் புகைப்படங்கள், ஊடகங்கள் வாயிலாக பரப்பப்படவும் அனுமதிக்கப்பட்டன. இவற்றை சட்டத்தின் கீழ் தடுத்து நிறுத்தி இருக்க முடியும்.
6. கோத்ராவில் இறந்தவர்களுக்காக பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக ஆர்.எஸ்.எஸ்./வி.எச்.பி. ஆட்களுக்கு மோடி தலைமையிலான அரசாங்கம் மற்றும் நிர்வாகம் போதிய அவகாசம் அளித்தது.
7. கோத்ரா ரயிலில் இறந்தவர்களில் அடையாளம் தெரியாத சடலங்கள் வி.எச்.பி. செயலாளர் ஜெய்தீப் பட்டேலிடம் ஒப்படைக்கப்பட்டு, அவரால் அகமதா பாத்திற்குக் கொண்டு வரப்பட்டு, சவ ஊர்வலம் நடத்திட அனுமதிக்கப்பட்டது. 2002 பிப்ரவரி 27 அன்று மாலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற கூட்டத்தில் இந்த சவ ஊர்வலத்தை மோடி துவக்கி வைக்கிறார். இக்கூட்டத்தில் ஜெய்தீப் பட்டேலும் பங்கு கொள்ள அனுமதிக்கப்படுகிறார். இவ்வாறு சட்டத்திற்குப் புறம்பாக வன்முறை வெறியாட்டங்கள் பெருகுவதற்கு மோடி பிரதானமாகப் பொறுப்பாவார்.
8. "இந்துக்கள் தங்கள் கோபத்தைக் வெளிப்படுத்த அனுமதிக்க வேண்டும்" என்று உயர் காவல்துறையினருக்கும் நிர்வாகத்தினருக்கும் மோடி அறிவுறுத்தி இருக் கிறார். இரு மூத்த அதிகாரிகளும், கேபினட் அமைச்சர் ஹரேன் பாண்டியாவும் இவை தொடர்பாக சாட்சியம் அளித்திருக்கின்றனர். மாநிலப் புலனாய்வுப் பிரிவில் பணியற்றிய சஞ்சீவ் பட் என்னும் அதிகாரியும் இது குறித்து சிறப்புப் புலனாய்வுப் பிரிவு மற்றும் உச்சநீதிமன்றத்தின் முன்பும் சாட்சியம் அளித்திருக்கிறார்.
9. அகமதாபாத்தில் வேண்டுமென்றே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் ஜெய்தீப் பட்டேல் தலைமையில் ஊர்வலமாகச் சென்று, வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். ஊர்வலத்தினர் மருத்துவமனை ஊழியர்கள், மருத்துவர்கள், ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி ஆகியோரையும் தாக்கினார்கள். பின்னர் அகமதாபாத் வீதிகள் வழியே ஊர்வலமாகச் சென்றனர். நரோடா பாட்டியா, நரோடா காம் மற்றும் குல்பர்க் சொசைட்டி ஆகிய இடங்களில் நடைபெற்ற தாக்குதல்களில் 200க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பெண்களைப் பட்டப் பகலில் பலர் கண்முன்னாலேயே வல்லுறவு செய்திடவும் அனுமதிக்கப்பட்டது. 2002 பிப்ரவரி 28 அன்று இவ்வாறு வன்முறை வெறியாட்டங்கள் நடைபெறவும், ஆத்திரமூட்டும் வகையில் சவ ஊர்வலங்கள் நடைபெறவும் மோடி, காவல்துறை மற்றும் நிர்வாகத்தினரால் வேண்டுமென்றே அனுமதிக்கப்பட்டது.
10. இராணுவம் வரவழைக்கப்பட்ட போதிலும், அவை செயல்பட அனுமதிக்கப் படவில்லை.
11. குஜராத் மாநிலத்தின் 25 மாவட்டங்களில் 14 மாவட்டங்களில் காவல்துறை யினர் உதவியுடனேயே வன்முறை வெறியாட்டங்கள் நடத்தப்பட்டன. அமைச்சர்கள் காவல்துறையினரின் கட்டுப்பாட்டு அறைகளில் அமர்ந்து கொண்டு இவற்றிற்கு உத்தரவிட்டனர். மோடி உள்துறை அமைச்சர் என்ற முறையில் இதற்குத் தலைமை வகித்தார்.
12. 2002 மே மாதம் வரை வன்முறைகள் தொடர மோடி அனுமதித்தார். ஆர்.எஸ்.எஸ். மற்றும் விஸ்வ இந்து பரிசத் ஆகியவை இவ்வன்முறை களுக்குப் பின்னே இருக்கின்றன என்பதனை ஏராளமான கடிதப் போக்குவரத்துக்கள் மெய்ப்பிக்கின்றன.
13. உச்சநீதிமன்றம் உறுதியாகத் தலையிடும் வரை கீழமை நீதிமன்றங்களில் வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது பெயரளவிலேயே நடவடிக்கைகள் இருந்தன. வழக்குகளை விசாரிப்பதற்காக அரசுத் தரப்பில் நியமிக்கப்பட்ட வழக்குரைஞர்கள் அனைவரும் ஆர்.எஸ்.எஸ்./விஸ்வ ந்து பரிசத் ஆதரவாளர் களேயாவர். இதன் காரணமாகவே பெஸ்ட் பேக்கரி விசாரணை மற்றும் பில்கீஸ் பானு வழக்கு மாநிலத்திலிருந்து வெளி மாநிலத்திற்கு மாற்றப்பட்டன.
14. 2002 பிப்ரவரி 27 அன்று மோடியே முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பை உமிழும் பேச்சை மேற்கொண்டார். முஸ்லிம்கள் மற்றும் கிறித்துவர்களுக்கு எதிராக வன்முறைகளைத் தூண்ட அவரது உள்துறையே அனுமதித்தது. காவல்துறைத் தலைவர் (புலனாய்வு) ஆர்.பி.ஸ்ரீகுமார் தலைமையிலிருந்த மாநிலப் புலனாய்வுப் பிரிவு விஸ்வ இந்து பரிசத் வன்முறையைத் தூண்டும் விதத்தில் பிரசுரங்கள் அச்சடித்து விநியோகித்ததற்காக வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும் என்று அரசுக்கு பரிந்துரைத்திருந்தார். ஆனால் இது அரசால் கண்டு கொள்ளப்படவில்லை. பவநகர் காவல் கண்காணிப்பாளர் ராகுல் சர்மாவும் இதேபோன்று வெறுப்பைக் கக்கிய சந்தேஷ் என்னும் நாளிதழ் மீது வழக்கு தொடுக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்திருந்தார். ஆனால் இதுவும் கண்டு கொள்ளப்படவில்லை. மாறாக அந்த செய்தித் தாளுக்கு வாழ்த்துச் செய்தியை மோடி அனுப்பி இருந்தார். நேர்மையாக நடந்து கொண்ட அதிகாரிகள் மோடியால் தண்டிக்கப்பட்டனர்.
15. குஜராத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக உச்சநீதிமன்றம் தலையிட்ட பின், வன்முறை தொடர்பாக நடைபெற்ற காவல்துறை ஆவணங்கள் அனைத்தையும் மோடி அழித்துவிட்டார். அதற்காகவும் அவர் விசாரிக் கப்பட வேண்டியவராவார்.

இக்குற்றச்சாட்டுகளின்மீது பெருநகர் நீதித்துறை நடுவரின் தீர்ப்புக்காக வழக்கு ஒத்தி போடப்பட்டிருக்கிறது.

---

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)


- 1991 இல் நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் உள்துறை செய லாளர் பார்கவா தலைமையில், உயர் அதிகாரிகள் கூட்டம் ஒன்று நடந்தது. அதில் உளவுத் துறைத் தலைவர் எம்.கே. நாராயணனும் கலந்து கொண்டார். அப்போது ராஜீவுக்கு தரப்படும் பாதுகாப்புகள் பற்றி விவாதிக்கப் பட்டது. எனவே எம்.கே. நாராயண னுக்கு, ராஜீவுக்கு தரப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த எல்லா விவரங்களும் தெரியும் என்று கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த உள்துறை அமைச்ச கத்தின் இணைச் செயலாளர் என்.கே. சிங், என்பவர் வர்மா ஆணையத்தின் முன் தெரிவித்தார். ஆனால், அதுபற்றி தனக்கு எதுவுமே தெரியாது, அப்படி ஒரு கூட்டத்தில் தாம் கலந்து கொள்ளவே இல்லை என்று எம்.கே. நாராயணன் மறுத்தார். நீதிபதி வர்மா விடவில்லை. இருவரையும் எழுத்துப் பூர்வமாக தங்கள் கருத்துகளைக் கூற முடியுமா என்று கேட்டபோது, என்.கே. சிங், எழுத்துபூர்வமாக அக்கூட்டத்தில் பங்கேற்றது உண்மையே என்று எழுதிக் கொடுத்தார். எம்.கே. நாராயணன் எழுத்துப் பூர்வமாக தர முன்வரவில்லை. எம்.கே. நாராயணன், ராஜீவ் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்த வேண்டும் என்று கூறுவதற்கு தனக்குக் கிடைத்த உயர்மட்ட கூட்டத்தின் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வில்லை என்ற முடிவுக்கு தாம் வந்ததாக வர்மா, தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். எம்.கே. நாராயணன், பொய் கூறுவதற்கும் தயங்காத ஒரு மனிதர் என்பதையே இது காட்டுகிறது.

இந்திய உளவுத் துறையை கடுமையாக விமர்ச்சிக்கிறது வர்மா அறிக்கை. "உளவுத் துறையில் அரசியல் தலையீடுகள் மிக சாதுர்யமாக நடக் கின்றன. அதன் செயல்பாடுகள் புரிந்து கொள்ளவே முடியாத அளவுக்கு கறை படிந்து கிடக்கின்றன. அதன் நம்பகத் தன்மை நடைமுறையானாலும், கற்பனையானாலும் மோசமான பாதிப்புக்குள்ளாகி விட்டது. அரசியல் சார்பு, அடியாட்கள் அச்சுறுத்தல் இல்லாமல், சுதந்திரமான, நேர்மையான அதிகாரிகளைக் கொண்ட புதிய அமைப்பாக உளவு அமைப்புகள் உருவெடுக்க வேண்டும்" - என்று வர்மா நெத்தியடியாகக் கூறுகிறார்.

**(விடுதலை இராசேந்திரன் எழுதிய 'விடுதலைப் புலிகள் மீதான அவதூறுகளுக்கு மறுப்பு' நூலிலிருந்து)**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 20th March 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மார்ச் 27, 2014 | புரட்சி 13 | முழக்கம் 11 | விலை: ரூ.3.00


## வினாக்கள்... விடைகள்...!

+ காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதால் தொண்டர்கள் மகிழ்ச்சி.
**– காங்கிரஸ் தலைவர் ஞான தேசிகன்**

*நிச்சயமாக! தி.மு.க., அ.தி.மு.க. தொண்டர்கள் மகிழ்ச்சியின் உச்ச கட்டத்தில் மிதக்கிறார்கள்!*

+ ஏப்.24 அன்று காலையில் குளிச்சிட்டு, சாமி கும்பிட்டு, நாடு நல்லா இருக்கணும் என்று நினைத்து, வாக்குச் சாவடிக்குப் போய் தாமரைச் சின்னத்துல ஒரு விரலால் ஒரு குத்து குத்துங்க.
**– இல. கணேசன் பேச்சு**

*அப்படியே செய்துடறோம்! ஓட்டுப் போட வரும்போது இதுக்கெல்லாம் தனித்தனியாக சான்றிதழ்களையும் கையோடு கொண்டுவரவேண்டுமா கணேசன் 'ஜி'?*

+ பலரையும் நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய இல.கணேசனை இந்த முறை நாம் எல்லோரும் சேர்ந்து நாடாளு மன்றத்திற்கு அனுப்பியே ஆக வேண்டும்.
**– தமிழிசை சவுந்தர்ராஜன்**

*அது முடியாதுங்க மேடம்! மக்கள்தான் ஓட்டுப் போட்டு அனுப்பணும்!*

+ நரேந்திர மோடி இரயில் என்ஜின் மாதிரி. நம்முடைய கூட்டணி கட்சிகள் ரயில் பெட்டி; மோடி எனும் என்ஜின் இல்லாவிடில் பெட்டிகள் தானாக நகர முடியாது.
**– பா.ஜ.க. செயலாளர் வானதி**

*இதை, மோடிகிட்ட புரியும்படி எடுத்துச் சொல்லுங்க. அவர் பொறுப்பில்லாமல் ஹெலிகாப்டரிலேயே பறக்குறாரு!*

+ தேர்தலுக்குப் பிறகு மோடியின் ஆட்சியில் ஜெயலலிதா பங்கேற்றாலும், மோடியின் அரசை தொடர்ந்து ஆதரிப்போம்.
**– தமிழருவி மணியன்**

*அப்பாடா! எங்கே கவிழ்த்துவிடப் போறீங்களோன்னு 'திக்கு திக்கு'ன்னு பயமாக இருந்துச்சு!*

+ இப்போதும், காங்கிரசுக்கு ஓட்டுப்போட முடியவில்லையே என்ற வருத்தத்தில் தான், மக்கள் மாற்று கட்சிக்கு ஓட்டு அளிக்கின்றனர்.
**– பீட்டர் அல்போன்ஸ் போட்டி**

*பீட்டர் சார்... அரசியல் அகராதியில் தோல்விக்கு புது அர்த்தத்தையே வழங்கிட்டீங்களே! எங்கேயோ போயிட்டீங்க....!*

+ மனித இனத்துக்குள் இருக்கும் ஜாதியை மட்டும் ஏன் புறக்கணிக்க வேண்டும்?
**– 'தினமலரில்' அன்புமணி பேட்டி**

*அதேபோல ஏழ்மை, வறுமை, நோய், வன்முறை போன்றவைகளும் மனித இனத்துக்குள்தான் இருக்குது. அவற்றையும் புறக்கணித்துவிடக் கூடாதுன்னு அடித்துச் சொல்லுங்க! ஓட்டுகளை குவிச்சுடலாம்!*

+ பா.ஜ.க.வினரின் 'ஹரஹரமோடி' கோஷம், 'சிவபெருமானை' அவமதிப்பதாகும். இதை ஆர்.எஸ்.எஸ். தடுக்க வேண்டும்.
**– துவாரகை சங்கராச்சாரி கண்டனம்**

*அதெல்லாம் தடுக்க முடியாதுங்க... 'சிவபெருமான்' தேர்தல் ஆணையத்துல நேரில் புகார் தந்தால் மட்டும் பரிசீலிப்போம்!*

## பன்னாட்டு விசாரணை தீர்மானத்தை இந்தியா நீர்த்து போகச் செய்யக் கூடாது

# ஆளுநர் மாளிகை முற்றுகை: கைது



***அய்.நா.வின் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானம் பன்னாட்டு விசாரணையை உறுதிப் படுத்துவதாக இருக்க வேண்டும் என்றும், அப்படி இருந்தால் இந்தியா தலையிட்டு துரோகம் செய்யக்கூடாது என்றும் வலியுறுத்தி, ஆளுநர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டம் நடத்தி தோழர்கள் கைதானார்கள்.***

24-03-2014 திங்கட்கிழமை காலை 11-00 மணியளவில், ஆளுநர் மாளிகை முற்றுகையிடுவதற்காக, சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றம் எதிரிலிருந்து ஆளுநர் மாளிகை நோக்கி புறப்பட்ட சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டனர். இலங்கை மீது சுதந்திரமான பன்னாட்டுப் புலனாய்வு அமைத்திட இந்திய அரசு வகை செய்ய வலியுறுத்தி நடைபெற்ற இந்த முற்றுகைப் போராட்டத்தில், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் விடுதலை க.இராசேந்திரன், த.பெ.தி.க பொதுச்செயலாளர் கோவை இராமகிருஷ்ணன், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் தியாகு, தமிழ்நாடு மக்கள் கட்சி செல்வி, சேவ் தமிழ்ஸ் செந்தில், பேராசிரியர் சரசுவதி, காஞ்சி மக்கள் மன்றம், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம், எஸ்.டி.பி.ஐ, உள்ளிட்ட 18 இயக்கங்களை சார்ந்தவர்கள் கலந்துகொண்டனர். கைது செய்யப்பட்ட அனைவரும் Y.M.C.A விளையாட்டு அரங்கில் வைக்கப்பட்டு மாலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

அய்.நா. மனித உரிமைக் குழுவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இந்தியா தலையிட்டு மேலும் நீர்த்துப் போகச் செய்யக் கூடாது என்ற கோரிக்கையை வலியுறுத்தி இந்த முற்றுகைப் போராட்டம் நடத்தப்பட்டது. ஏற்கெனவே அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானங்களில் இந்தியா தலையிட்டு இலங்கைக்கு சாதகமாக சில பிரிவுகளை நீக்கச் செய்தது. அப்படி, இந்தியா இலங்கைக்காக தலையிட்டும் அதை இலங்கை மதித்து நடக்கத் தயாராக இல்லை. இந்த நிலையில் மூன்றாவது முறையாக அமெரிக்க தீர்மானத்தின் வரைவு அறிமுகமாகியுள்ளது.

அமெரிக்கா முன்வைத்துள்ள இறுதி வரைவு தீர்மானம், சர்வதேச விசாரணை ஆணையம் அமைப்பதற்கும் அதை வழி நடத்துவதற்குமான உரிமையை அய்.நா. மனித உரிமை ஆணையருக்கு வழங்குவதால் இது மாற்றமின்றி ஏற்கப்படுமானால் ஏற்கெனவே கொண்டு வரப்பட்ட தீர்மானங்களைவிட இலங்கைக்கு கூடுதல் சர்வதேச நெருக்கடியை உருவாக்குவதாக அமையும். அமெரிக்காவின் இந்தத் தீர்மானத்துக்கு மனித உரிமை ஆணையத்தின் உறுப்பு நாடுகளின் ஆதரவு கிடைத்திருப்பதாக தெரிகிறது. தீர்மானம் நிறைவேறிய பிறகு இலங்கை சண்டித்தனம் செய்தால் இலங்கைக்கும் அய்ரோப்பிய நாடுகளுக்கு மிடையிலான முரண்பாடுகள் அதிகரிக்கும். இந்த முரண்பாட்டை ஈழத் தமிழர் உரிமைகளுக்கு ஆதரவாக முன்னெடுக்கலாம் என்று கைதின்போது பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டது. தீர்மானம் வரவிருக்கும் மார்ச் 28ஆம் தேதிக்கு முதல் நாள் மார்ச் 27 அன்று கூட்டமைப்பு சார்பில் சென்னையில் மீண்டும் ஆர்ப்பாட்டம் நடத்தி பன்னாட்டு விசாரணையை வலியுறுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

## மரணத்திலும் கொள்கை வழுவாத பெரியார் தொண்டர்

சேலம் மாவட்டம் மேச்சேரி அருகே உள்ள மல்லிகுந்தம் பகுதியில் வசித்து வந்த முன்னாள் இராணுவ வீரரும், உறுதியான பெரியாரியல்வாதியுமான, தோழர் தம்புசாமி 8-3-2014 அன்று இயற்கை எய்தினார். பெரியார் பிறந்தநாள் அன்று ஆண்டுதோறும் ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்து வந்த அவர், தான் இறந்த பின்னர் எந்த விதமான மதச் சடங்குகள் செய்யக்கூடாது என்றும், தனது மனைவியின் பூ, பொட்டு, வளையல் முதலியவற்றை நீக்கும் எந்த விதமான முட்டாள்தனங்களையும் செய்யக்கூடாது என்றும், முடிந்த வரை நாத்திக தோழர்களால் தனது உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் நீண்ட ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு முடிவெய்தினார். தம்புசாமி அவர்களின் நினைவேந்தல் கூட்டம் 19-03-2014 புதன்கிழமை அன்று தம்புசாமி இல்லம் அருகே நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகத்தலைவர் கொளத்தூர் மணி, தம்புசாமியின் படத்தை திறந்து வைத்து, தோழரின் கடிதத்தை படித்துக் காட்டி இரங்கல் உரை ஆற்றினார்.

# மோடி ஆட்சியின் முறைகேடுகள், ஊழல்கள்

1. டாட்டாவின் நானோ திட்டத்திற்கு ஒரு சதுர மீட்டர் ரூ.10 ஆயிரம் மதிப்புள்ள நிலத்தை வெறும் ரூ.900க்கு தரப்பட்டது. இதனால் டாட்டா குழுமம் அடித்த ஜாக்பாட் ரூ.33,000 கோடி.
2. அதானி குழுமத்திற்கு முந்த்ரா துறைமுகம் மற்றும் முந்த்ரா விசேட பொருளாதார மண்டலம் உருவாக்கிட நிலம் சதுர அடி / ச.மீ. ஒன்றுக்கு வெறும் ஒரு ரூபாய்க்கு அதாவது வெறும் 10 காசுகளுக்கு தரப்பட்டது. இதனை அதானி குழுமம் பின்னர் சதுர மீட்டர் ரூ.100க்கு விற்று கொழுத்த இலாபம் பார்த்தனர். இந்த விற்பனை சட்ட விரோதமானது.
3. கே.ரஹேஜா என்ற ரியல் எஸ்டேட்டுக்கு முக்கிய பகுதியில் ஒரு ச.மீ. ரூ.470 வீதம் 3.76 லட்சம் சதுர மீட்டர் விற்கப்பட்டது. அதற்கு அருகாமையில் விமானப்படை நிலம் கேட்டபொழுது ஒரு சதுர மீட்டர் ரூ.1100 என கூறப்பட்டது.
4. நவ்சாரி விவசாயப் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான 65,000 ச.மீட்டர் நிலம் சத்ராலா ஓட்டல் குழுமத்திற்கு விடுதிகட்ட தாரை வார்க்கப்பட்டது. பல்கலை நிர்வாகம் எதிர்ப்புத் தெரிவித்தும் அது புறந்தள்ளப்பட்டது. இந்த இடமாற்றம் நேரடியாக நரேந்திர மோடியின் மேற்பார்வையின் கீழ் நடத்தப்பட்டது. இதனால் குஜராத் அரசுக்கு இழப்பு ரூ. 426 கோடி.
5. அண்டை நாட்டின் எல்லை ஓரத்தில் உள்ள நிலம் அரசின் கைகளில்தான் இருக்க வேண்டும். ஏனெனில் இது தேச பாதுகாப்புடன் தொடர்புடைய அம்சம். ஆனால், ஒரு பெரிய பரப்பளவு உள்ள நிலம் உப்பு நிறுவனங்களுக்கு தரப்பட்டது. இந்த நிறுவனங்கள் வெங்கையா நாயுடுவின் உறவினர்களுக்கு சொந்தமானது. வெங்கையா நாயுடு மோடியை ஏன் ஆதரிக்கிறார் என்பது புரிகிறதா?
6. எஸ்ஸார் கார்ப்பரேட் குழுமத்திற்கு 2.08 லட்சம் சதுர மீட்டர் நிலம் தரப்பட்டது. இதில் ஒரு பகுதி வனங்கள் நிறைந்தது. நீதிமன்றத்தின் தீர்ப்புப்படி இது சட்டவிரோதமானது.
7. அகமதாபாத் நகரின் அருகில் சந்தை நிலவரப்படி விலை உயர்ந்த 25,724 ச.மீ. இடம் பாரத் ஓட்டல் குழுமத்திற்கு தரப்பட்டது. இதற்காக டெண்டர் எதுவும் கோரப்படவில்லை.
8. 38 மிகப் பெரிய ஏரிகளில் மீன் பிடிக்கும் உரிமை டெண்டர்கள் கோரப்படாமலேயே ஒரு சிலருக்கு தரப்பட்டது.
9. ஹாசிரா எனும் இடத்தில் எல் அண்டு டி நிறுவனத்திற்கு 80 ஹெக்டேர் அளவுள்ள நிலம் சதுர மீட்டர் ஒன்றுக்கு வெறும் ரூ.1 அதாவது சதுர அடி வெறும் 10 காசுக்கு தாரை வார்க்கப்பட்டது.
10. Vibrant குஜராத் விழாக்களில் பங்கேற்ற தொழில் அதிபர்களுக்கு நகரின் பல முக்கிய இடங்களில் சந்தையில் விலை உயர்ந்த இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.
11. கறுப்பு பட்டியலில் வைக்கப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து ஒரு கிலோ ரூ.48க்கு கால்நடை தீவனங்கள் வாங்கப்பட்டன. ஆனால் வெளிச்சந்தையில் இத் தீவனம் ரூ.24க்கு கிடைக்கிறது.
12. அங்கன்வாடி மையங்களுக்கு உணவுப் பொருட்கள் வாங்கியதில் இரு நிறுவனங்களுக்கு மட்டுமே அனுமதி. இதன் காரணமாக இழப்பு ரூ.92 கோடி.
13. GSPC எனும் நிறுவனம் தொடங்கிட குஜராத் அரசாங்கம் ரூ.4993.50 கோடி முதலீடு செய்தது. இதுவரை வருமானம் ரூ.290 கோடி மட்டுமே. ஆண்டிற்கு பல கோடிகள் இழப்பு ஏற்பட்டுக் கொண்டுள்ளது.
14. Sujalam Sufalam Yojana எனும் திட்டத்திற்கு 2003 ஆம் ஆண்டு ரூ.6237.33 கோடி ஒதுக்கப்பட்டது.

    2005 ஆம் ஆண்டு இத்திட்டம் பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். இதுவரை பூர்த்தியாகவில்லை. குஜராத் சட்டமன்றத்தின் பொதுக் கணக்குக் குழு (Public Accounts Committee) இதனை ஆய்வு செய்த பொழுது ரூ.500 கோடி ஊழல் நடந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இந்தக் குழுவில் பா.ஜ.க. உறுப்பினர்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அறிக்கை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.
15. நரேந்திர மோடி விமானத்தில் பயணிக்கும் பொழுது குஜராத் அரசாங்கத்தின் விமானத்தையோ அல்லது ஹெலி காப்டரையோ பயன்படுத்துவது இல்லை. ஏர்-இந்தியா, ஜெட் ஏர்வேஸ் போன்ற மக்கள் பயன்படுத்தும் விமானங்களிலும் பயணிப்பது இல்லை. மிகவும் சொகுசான தனியார் முதலாளி களுக்கு சொந்தமான விமானங்களில்தான் அவர் பயணிப்பார். அதன் செலவு தொழில் அதிபர்கள் ஏற்றுக் கொள்வர்.

    அண்மையில் திருச்சிக்கு வந்தபோதும் இதே போன்று தனி விமானத்தில்தான் வந்தார். அக்டோபர் 18 அன்று சென்னைக்கும் தனி விமானத்தில்தான் வந்தார்.
16. இண்டிகோல்டு எனும் நிறுவனம் சட்டத்தை மீறி 36.25 ஏக்கர் பண்ணை நிலத்தை வாங்கி அதிக விலைக்கு விற்று கொழுத்த லாபம் அடைந்தது. இதுவரை இந்த நிறுவனம் மீது நடவடிக்கை இல்லை.
17. குஜராத் அரசுக்கு சொந்தமான பிப் பவர் மின்நிலையத்தின் 49 சதவீதப் பங்குகள் ஸ்வான் எனர்ஜி எனும் நிறுவனத்திற்கு விற்கப் பட்டது. இதற்காக எந்த டெண்டரும் கோரப்பட வில்லை.

# திருச்சி மாவட்டக் கழகம் நடத்திய போராட்டம் வெற்றி

திருச்சி மாவட்டம் 19 ஆவது வார்டு ஜெயில்பேட்டை பகுதியில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டு வரும் 320 குடியிருப்புகள், கட்டிடப் பணிகள், அவர்கள் நிர்ணயித்த 12 மாதங்கள் முடிந்து, மேலும் 6 மாதகாலம் தாமதமாகி வருகிறது. இதனை கண்டித்தும், விரைந்து கட்டிடப் பணிகளை தரமாக முடித்து பயனாளிகளுக்கு வழங்க வேண்டும் என வலியுறுத்தியும் கழகத்தின் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் தோழமை அமைப்புகளை இணைத்துக் கொண்டு கடந்த 21.2.13 அன்று நடைபெற்றது.

கழகத்தின் ஆர்ப்பாட்டத்தினை கவனித்த தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் திருச்சி மாவட்ட தலைமை பொறியாளர் சுரேஷ், கழகத் தோழர் பொன்னுசாமியை அழைத்து, “போரட்டத்தினை கவனித்தோம்; இன்னும் 3 மாத காலங்களில் கட்டிப் பணியை விரைந்து முடித்து விடுவோம்” என உறுதி கூறினார்.

தொடர்ந்து 100க்கும் மேற்பட்ட பணியாளர்கள் புதிதாக வரவழைக்கப்பட்டு, கட்டிடப் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. இதற்கிடையே கட்டுமானத்துக்கு தடை கோரி, தனி நபர் ஒருவர் தொடர்ந்த வழக்கும் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. இது கழக ஆர்ப் பாட்டத்திற்குக் கிடைத்த வெற்றி.

### பன்னாட்டு விசாரணை கோரி உரத்த நாட்டில் போராட்டம்

ஜெனிவாவில் நடந்து கொண்டிருக்கும் அய்.நா. மனித உரிமை ஆணைய மாநாட்டில் சுதந்திரமான பன்னாட்டு விசாரணை வேண்டும் என இந்திய அரசு தீர்மானம் கொண்டு வர வலியுறுத்தி 26.2.2014 புதன் கிழமை அன்று உரத்தநாடு பேருந்து நிலையம் அருகில் அடையாள பட்டினி போராட்டம் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் அ. கண்ணன் தலைமை தாங்கினார். நாம் தமிழர் கட்சி அ. நல்லதுரை, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் மக்கள் விடுதலைக் கட்சி இரா. அருணாச்சலம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோ.ஜெய்சங்கர், திராவிடர் விடுதலைக் கழகம் கு. பாரி, வழக்கறிஞர் காசி. விஸ்வநாதன், ம.தி.மு.க. துரை. ராமச்சந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆம்பல் ஏ. சரவணன், தமிழ் தேசிய பொதுவுடைமைக் க;சி நா.வைகரை, ப. விஜயன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

### கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற நிகழ்வுகள்

21-03-2014 வெள்ளிக்கிழமை அன்று மாலை 5-00 மணியளவில் பல்லடம் தெற்குப்பாளையம், திருவள்ளுவர் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி (தாய்த் தமிழ் பள்ளி) யில் ஆண்டு விழா நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

22-03-2014 சனிக்கிழமை அன்று மதுரை வடக்குமாசி வீதி, தருமபுர ஆதின திருமண மண்டபத்தில் பெண்கள் அரசியல் உரிமை மாநாடு நடைபெற்றது. தமிழ்நாடு பெண்கள் இயக்கத்தின் சார்பாக நடைபெற்ற இந்த மாநாட்டில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

# துரை. தாமோதரன் ஹில்லத் ணிறப்பு

பெரம்பலூர் மாவட்ட கழகத் தலைவர் துரை. தாமோதரன் ஹில்லத் ணிறப்பு ஜீழா பிகழ்ஷி 14.03.2014 அன்று காலை 8 மதி அளஜீல் நடை பெற்றது.



ஜீழாஜீல் ணிராஜீடர் ஜீடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மதி ஹில்லத்தை ணிறந்து வைத் தார். பிகழ்ஜீல் ம.ணி.மு.க. மாபில வெஹீயீட்டு செயலாளர் வந்ணியதேவன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார். காலை 8 மதிக்கு ணிராஜீடர் கழகத் தோழர் ஜீஜயேந்ணிரன் மந்ணிரமா? தந்ணிரமா? பிகழ்ச்ஞியை நடத்ணினார். தொடர்ந்து ஞிற்நி ஹிராசன் மந்ணிரமா? தந்ணிரமா? பிகழ்ச்ஞி மூலம் மூடநம்நிக்கைகளை ஜீளக்கி பேஞினார். கொளத்தூர் மதி, வாஸ்து நித்தலாட்டங்களை அம்பலப்படுத்ணி பேஞினார். ஹிந்பிகழ்ச்ஞிமீல் மறுமலர்ச்ஞி ணி.மு.க பெரம்பலூர் மாவட்ட செயலாளர் துரைராஜ், ணிராஜீடர் கழகத் தோழர்கள் ஞித்தார்த்தன், அக்ளீ ஆறுமுகம் ஆகியோர் உரையாற்றினர். கட்டிட பொறியாளர் சரவண குமார் கட்டுமான தொஷீலாளர்களுக்கு பளீசு வழங்கி பாராட்டினார். தாமோதரன் வரவேற்புரை ஆற்றினார். அவரது துணைஜீயார் தா.ஜீனோணிவீ நன்றி கூறினார்.

### குழந்தைகள் பழகு முகாம் – கொடைக்கானல்

தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் சார்பில் வரும் 12.5.14 முதல் 21.5.14 வரை கொடைக்கானலில் குழந்தைகள் பழகு முகாம் நடைபெற உள்ளது. ஏற்கெனவே திண்டுக்கல்லில் கடந்த 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற பழகுமுகாமில் பங்கேற்ற குழந்தைகளுக்கு 12.5.14 முதல் 16.5.14 முடிய 5 நாள்களில் நடைபெறும். புதியதாக வருவோருக்கு 17.5.14 முதல் 21.5.14 முடிய 4 நாள்கள் நடைபெறும். 5 நாள்களுக்கும் தங்குமிடம், உணவு, சுற்றுலா உள்பட ஒரு குழந்தைக்குக் கட்டணம் ரூ.1000. பங்கு பெற விரும்புவோர் ஏப்ரல் 15-க்குள் கட்டணம் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தமிழ்நாடு அறிவியல் மன்றம்**
தொடர்புக்கு : 9842448175, 9688856151, 9486161500

# பார்ப்பன உளவியல் கட்டமைக்கும் பெண்ணடிமை

## பூங்குழலி

பெண்களுக்கு எதிரான வன்முறைகள், குறிப்பாக பாலியல் வன்முறைகள் குறித்து இன்று அதிகம் விவாதிக்கப்படுகிறது. பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளும், வன்புணர்வுகளும் இந்தியாவில் மட்டும் நடக்கவில்லை. ஆனால் பிற நாடுகளில் நடப்பதற்கும் இந்தியாவில் நடப்பதற்கும் அடிப்படையிலேயே பெரிய வேறுபாடு உள்ளது.

இன்று இந்தியாவெங்கும் முதன்முதலாக வன்புணர்வை ஒரு விவாதப் பொருளாக மாற்றியிருக்கும் தில்லி கொடுமையையே எடுத்துக் கொள்வோம். அந்த கொடூரச் செயலில் ஈடுபட்டவர்கள், பாதிக்கப்பட்ட பெண் அழகாக இருந்தாள்; அவள் அழகில் தூண்டப்பட்டு அவளை வன்புணர்வு செய்தோம் என்று சொல்லவில்லை. அல்லது அவள் கவர்ச்சிகரமாக ஆடை அணிந்திருந்தாள்; அதனால் தூண்டப்பட்டோம் என்றுகூட சொல்லவில்லை. மணமாகாத அப்பெண் இரவு நேரத்தில் தனியாக ஒரு ஆணுடன் எப்படி நடமாடலாம்? அவளுக்கு பாடம் புகட்டவே அவளை வன்புணர்வு செய்தோம் என்று கூறினர். அண்மையில் சென்னையில் பலியான உமா மகேஸ்வரி விசயத்திலும் அதுவே நடந்துள்ளது. இரவில் தனியாக நடமாடினார்; கேலிசெய்யப்பட்ட போது, துணிச்சலுடன் அந்த ஆண்களை செருப்பால் அடித்திருக்கிறார். அதற்கு பழி வாங்கவே அவர் வன்புணர்வு செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் கூறியுள்ளனர். இப்படியான காரணங்களை எந்த நாட்டிலும் கேட்க முடியாது.

கயர்லாஞ்சியில் சுனிதா வன்புணர்வு செய்யப்பட்டது குடிபோதையிலோ அல்லது நொடிநேர வெறியிலோ அல்ல. அது ஒரு பெருங்கூட்டத்தால், ஊரின் பொது வெளியில் திட்டமிட்டு நடத்தப்பட்ட வெறியாட்டம். அந்த வெறியை ஊட்டியது ஜாதி. ஆதிக்க ஜாதி ஆண்கள் பாலியல் வன்முறையில் ஈடுபட, ஆதிக்க ஜாதிப் பெண்கள் சுற்றி நின்று தூண்டிவிட நடத்தப்பட்ட அந்த குற்றச் செயலை செய்வதற்கான துணிவை அவர்களுக்கு அளித்தது இந்த சமூகத்தின் ஜாதிய கட்டமைப்பும் அதை காத்து நிற்கும் அரசமைப்பும். இப்படியான ஒன்றையும் நீங்கள் வேறு எந்த நாட்டிலும் கேட்கவோ பார்க்கவோ முடியாது.

வாசாத்தியிலும், அந்தியூரிலும், சத்தியமங்கலம் காடுகளிலும் கேட்ட பெண்களின் ஓலம், அதிகாரத்தின் அடக்குமுறை வன்முறையாலேதான். அதிகார அத்துமீறல்களும், சீருடை ரவுடிகளின் பாலியல் வன்கொடுமைகளும்கூட பிற நாடுகளில் நடக்கக்கூடும். ஆனால், இங்கு நிகழ்ந்தவற்றில் பாதிக்கப்பட்டப் பெண்கள் அனைவரும் பழங்குடியின, ஒடுக்கப்பட்ட பெண்கள் என்பது தற்செயலானது அல்ல. மணிப்பூரிலும், பிற வடகிழக்கு மாநிலங்களிலும்கூட அதிகாரத்தின் கொடிய கரங்கள் நெறிப்பது பழங்குடியினப் பெண்களையே.

இங்கு மட்டும்தான் குற்றவாளியைவிட பாதிக்கப்பட்டவர்களுக்கு குற்ற உணர்ச்சி ஊட்டப்படுகிறது. தான் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டதை வெளியேச் சொல்வது தனக்குத்தான் அவமானம் என்ற சிந்தனை ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் ஆழ விதைக்கப்பட்டுள்ளது. அப்படி ஒரு வேளை துணிந்து அப்பெண் வெளியே சொன்னால், சமூகம் அவளை விலக்கி வைக்கிறது. வசை பாடுகிறது. குற்றத்தை அவள் மீதே சுமத்துகிறது.

“தன்னை வன்புணர்வு செய்ய வந்தவர்களிடம் அப்பெண் அண்ணா என்று கெஞ்சியிருந்தால் அவள் தப்பித்திருக்கலாம்” - அசராம் பாபு, சாமியார்.

“இருபாலர் கல்வி நிறுவனங்கள் மூடப்பட வேண்டும். திருமணத்திற்கு முன்னால் உடலுறவு வைத்துக் கொள்வது தடை செய்யப்பட வேண்டும்., பெண்கள் சரியான முறையில் உடை அணிய வேண்டும்.” - ஜமாத்-ஈ-இஸ்லாம்-ஹிந்த் தலைவர்.

“பாரதத்தைவிட இந்தியாவில்தான் அதிக வன்புணர்வுகள் நடக்கின்றன” - ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்.

“ஜாதகம் சரியில்லாததால்தான் வன்புணர்வுக்கு ஆளாகிறார்கள்” - சட்டிஷ்கர் உள்துறை அமைச்சர்.

மேலே உள்ளவை தனி மனிதர்களின் கருத்துகள் அல்ல. இச்சமூகத்தின் எண்ணவோட்டம். ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் இந்த எண்ணவோட்டத்திற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. இந்த எண்ணவோட்டத்திலிருந்து அவர்கள் விலகாதவாறு இந்த சமூகமும் அதன் அங்கமாய் இருக்கிற ஊடகங்களும் மிக கவனமாக பார்த்துக்கொள்கின்றன.

1980களில் ‘புதிய பாதை’ என்றொரு படம் வெளியாகி சக்கை போடு போட்டது. அது அந்த இயக்குநரின் முதல் படமாக இருந்த போதும் பெரும் வெற்றி வாய்ப்பை பெற்றது. அதிலும் அதற்கான விளம்பரங்களில் “பெண்கள் கூட்டம் கூட்டமாக காண வரும் படம்” என்று பெருமையுடன் போட்டனர். அந்த படத்தின் கதை இதுதான். “ஒரு ரவுடி, ஒரு பெண்ணை அவளது திருமணத்திற்கு முதல் நாள் வன்புணர்வு செய்கிறான். இந்த செய்தியை அறிந்த மணமகன், இதை ஒரு விபத்தாக எடுத்துக் கொள்கிறேன். நாம் திருமணம் செய்து கொள்ளலாம் என்று கூறுகிறான். ஆனால், அப்பெண் அதை மறுத்து அந்த ரவுடியை தேடிச் சென்று அவனையே திருமணம் செய்து, அவனை திருத்தி அவனுக்கு ஒரு குழந்தையை பெற்றுக்கொடுத்துவிட்டு இறந்து போகிறாள்.”

இக்கதை எண்பதுகளில் வந்ததுதானே என்பவர்களுக்கு..... 2004இல் வந்த படம் ‘தென்றல்’. அக்கதையின் நாயகி, தன்னைவிட வயதில் மிகவும் மூத்த ஒரு எழுத்தாளனை அவனுக்குத் தெரியாமலேயே விரும்புவாள். ஒரு கட்டத்தில், அவளை ஒரு பாலியல் தொழிலாளி என்று நினைத்து அந்த எழுத்தாளன் அவளிடம் உடலுறவு வைத்துக் கொள்வான். நாயகி அதை தனக்கு கிடைத்த பெரும் பேறாகக் கருதி, அவன் மூலம் உண்டான குழந்தையை பெற்று, வளர்த்து, அவனிடம் ஒப்படைத்துவிட்டு இறந்து போவாள்.” இரண்டு படத்திற்கும் பெரிய வேறுபாடு இல்லை.

> **பார்ப்பனியம் - மதத்தின் பெயரால் கட்டமைத்த சமூக உளவியல்தான் பெண்களுக்கு எதிரான குற்றங்களை பெண்ணடிமைக் கண்ணோட்டத்திலேயே பார்க்கச் சொல்கிறது. மேலை நாடுகளில் பெண்கள் மீதான குற்றங்கள் மீதான பார்வையிலிருந்து இது வேறுபடும் புள்ளியாக இருப்பதை ஆழமாக பதிவு செய்கிறது, இக்கட்டுரை.**

வன்புணர்வு பற்றிய திரைப்படங்களின் சித்தரிப்பு மூன்றே விதம்தான். ஒன்று வன்புணர்வுக்கான முயற்சியின் இறுதிக் கட்டத்தில் நாயகன் வந்து காப்பாற்றி விடுவான். (ஆனால் நெடுநேரம் நடக்கும் அந்த முயற்சியின் அந்த இறுதிக் கட்டம் வருவதற்கு முன் காமிராவால் அப்பெண்ணை எவ்வளவு முடியுமோ அவ்வளவு வன்கொடுமை செய்து விடுவார்கள்) இரண்டாவது, வன்புணர்வு ஒருவேளை நடந்துவிட்டால், அப்பெண் இறந்து போவாள். நாயகன் பழிவாங்குவான். அல்லது திருந்துவான். மூன்றாவதுதான் மிக சிறப்பானது. வன்புணர்வு செய்தவனையே அப்பெண் ‘வெற்றிகரமாக’ மணம் முடிப்பாள்.

இந்த மூன்றாவது சித்தரிப்புக்குப் பொருள் வெகு எளிமையானது. ஒருவன் உங்களை அடித்து அவமானப்படுத்தி விட்டால், “ஒரு முதலாளிக்குதான் அடிப்பதற்கும் அவமானப்படுத்துவதற்கும் உரிமை உள்ளது. அவன் உன்னை அடித்து விட்டதால் இனி அவன்தான் உன் முதலாளி. அவனிடம் வாழ்நாள் முழுவதும் அடிமையாக இரு” என்பதுதான்.

இப்படியான சித்தரிப்பும் வேறு எந்த நாட்டிலும் காண கிடைக்காத அற்புதம்.

இந்த சித்தரிப்புக்கு பண்பாடு என்று பெயராம். இருக்கட்டும். பண்பாடு என்றால் யாருடைய பண்பாடு? எதன் பண்பாடு? என்ற கேள்வி எழுகிறது. பண்பாட்டை காப்பதற்காகவே வன்புணர்வு செய்ததாக தில்லி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவன் கொடுத்திருக்கும் வாக்குமூலம் எதிலிருந்து வருகிறது?

### மநு சாஸ்திரம் அத்தியாயம் – 9

14. மாதர் ஆடவரிடத்தில் அழகையும், பருவத்தையும் விரும்பாமலே ஆண் தன்மையை மாத்திரம் முக்கியமாக எண்ணி அவர்களை புணருகிறார்கள்.
15. மாதர்கள் கற்பு நிலையின்மையும், நிலையா மனமும், நண்பன்மையும் இயற்கையாக வுடையவர்கள்.
16. மாதர்களுக்கு இந்த சுபாவம் பிரமன் சிருட்டித்த போதே உண்டானதென்று அறிந்து ஆடவர்கள் அவர்கள் கேடுறாமல் நடப்பதற்கான மேலான முயற்சி செய்ய வேண்டியது.
17. படுக்கை, ஆசனம், அலங்காரம், காமம், கோபம், பொய், துரோக சிந்தை இவற்றினை மாதர் பொருட்டே மனு கற்பித்தார்.
19. மாதர்கள் பெரும்பாலும் விபசார தோஷ முள்ளவர்களென்று அநேக சுருதிகளிலும், சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆக, கெட்டுப் போகும் தன்மையுள்ள பெண்களை காப்பதற்கான பெரும் பொறுப்பை ஏற்றே அவர்கள் மணமாகாமல் ஒரு ஆணுடன் இரவு நேரத்தில் தனியே சென்ற பெண்ணிற்கு தண்டனை கொடுத்துள்ளனர். இந்த தண்டனையின் மூலம் அவர்கள் சொல்ல நினைத்த செய்தி நேரடியானது. இனி பெண்கள் இரவில் வெளியே செல்லாதீர்கள். அதிலும் தந்தை, கணவர், சகோதரர், மகன் அல்லாத யாருடனும் செல்லாதீர்கள். அதிலும் மணமாகாத பெண்கள் செல்லவே செல்லாதீர்கள். சென்றால் இந்த கதிதான் உங்களுக்கும். இதுதான் அவர்கள் சொல்ல விரும்பிய செய்தி. அந்த செய்தி, ஊடகங்கள் மூலமாக மிக நன்றாகவே மக்களிடம் போய் சேர்ந்திருக்கிறது. சாதாரணமாகவே பெண்கள் தனியே பயணிப்பதை அச்சத்துடன் தவிர்க்கும் சமூகம், இதற்கு பின் அச்சம் அதிகமாகிப் போய் நிற்கிறது.

பொருளாதார அடிப்படையிலும், கல்வியிலும் முன்னேறிய போட்மாங்கே குடும்பத்தின் பெண்களை வன்புணர்வு செய்த ஆதிக்கசாதியினர் விடுத்த செய்தி, “தாழ்த்தப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவே இருக்க வேண்டும். முன்னேற முயன்றால் இந்த கதிதான்” என்பதே.

பல ஆண்டுகாலம், அம்பேத்கர், பெரியார் போன்ற தலைவர்கள் மிகவும் போராடி சில அடிகள் முன் நகர்த்திய சமூகத்தை, ஒரே வன்முறையில் பல அடிகள் பின்னோக்கி நகர்த்துவதில் ஆதிக்க சக்திகள் வெற்றி பெற்று வருகின்றனர்.

இன்று ஜாதியை முன் வைத்து காதல் திருமணங்களுக்கு எதிரான கடுமையான பிரச்சாரத்தை ஆதிக்க ஜாதி அமைப்புகள் முன்னெடுத்து வருகின்றன. இதுவும் அடிப்படையில் பெண்களுக்கு எதிரான வன்முறையே. ஒரு பெண் எந்த ஜாதியை சேர்ந்தவளாக இருந்தாலும், தன் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் உரிமையை அவளிடமிருந்து பறிப்பதாகவே இவர்களின் முன்னெடுப்புகள் உள்ளன. பெண்களின் அந்த உரிமையை மிகவும் மலினப்படுத்தி, ஜீன்ஸ் பேண்டுக்கும், கூலிங் கிளாசுக்கும் மயங்கி போகிறார்கள் என்பது ஆணாதிக்கத்தின் உச்சம்.

ஒரு மனிதனின் வாழ்க்கையின் வளத்தை காட்டும் அடையாளங்களாக சொத்தும், நகைகளும் இருப்பது போலவே அவன் குடும்பத்து பெண்களும் அவனது ‘கவுரவத்தின்’ அடையாளமாகவே உணரப்பட்டுள்ளது. பெண்ணும் ஒரு உடைமை. அதனால் அவளது வாழ்வின் அனைத்து முடிவுகளையும் எடுக்கும் உரிமை அவளது குடும்பத்தின் ஆணுக்கே உள்ளது. அதை மீறி அவள் முடிவெடுத்தால், அது கொடுங்குற்றம். இந்த மனநிலையிலிருந்தே காதல் திருமணங்கள் எதிர்க்கப்படுகின்றன. ஜாதி வெறியும் ஆணாதிக்கமும் இணைந்து நின்று பெண்களின் உரிமைகளை பறிப்பதில் முனைப்பே காட்டுகின்றன. அதற்கு அடிப்படையாக இந்து மத இந்திய உளவியல் உள்ளது. இந்து மத உளவியலிருந்து விடுபடாமல் பெண்களுக்கு எதிரான இந்த வன்முறைகளுக்கு முடிவு ஏற்படாது.


**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வங்கிக் கணக்கு**

கரூர் வைஸ்யா வங்கி
அடையாறு கிளை
‘கரன்ட்’ அக்கவுண்ட்.
எண் : 1257115000002041

DATE OF PUBLICATION 26.03.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

## கழக வளர்ச்சி – கழக ஏடு குறித்து விவாதம்

# கோவை மண்டல கழக கலந்துரையாடல் முடிவுகள்

21-03-2014 வெள்ளிக்கிழமை அன்று காலை 11-00 மணியளவில், பொள்ளாச்சி ‘பர்வானா இல்லத்’'தில் (வங்கி பணியாளர்கள் சங்க கட்டிடம்) கோவை மண்டல கழக கலந்துரையாடல் கூட்டம் மண்டல அமைப்புச் செயலாளர் பல்லடம் விஜயன் தலைமையில் நடைபெற்றது. மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் கடவுள் மறுப்பும், பொள்ளாச்சி விஜயராகவன் ஆத்மா மறுப்பும் கூற, கோவை மாவட்டத்தை நிர்வாக வசதிக்காக பொள்ளாச்சி மாவட்டம் என தனியாக பிரித்தல், மாவட்ட அமைப்புகளை புதுப்பித்தல், பயிற்சி வகுப்புகள் நடத்துதல் உள்ளிட்ட கலந்துரையாடல் கூட்டத்தின் நோக்கங்கள் குறித்து பல்லடம் விஜயன் உரையாற்றி துவக்கி வைத்தார். தலைமை சொல்லும் வேலைகளை மட்டும் செய்தால் போதாது; கிராமப்புற பிரச்சாரம் உள்ளிட்ட பல வேலைகளை நாமே முன்னெடுக்க வேண்டும் என்று செயலவைத் தலைவர் துரைசாமி வலியுறுத்தினார். உயர்கல்வி நிலையங்களில் ஒடுக்கப்பட்ட மாணவர்கள் புறக்கணிக்கப்படுவதற்கு எதிராகவும், ஜோதிடக் கல்விக்கு எதிராகவும் போராட வேண்டிய அவசியம் குறித்து வழக்குரைஞர் பன்னீர்செல்வம் பேசினார்.

தலைமைக் கழகம் சொல்லும் அனைத்து பணிகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பு கொடுக்கும் மாவட்டம் திருப்பூர்; அதேபோல பரப்புரை பயணங்களில் கூடுதல் பங்கேற்பு ஆகியவற்றிற்கு காரணம் நான்கு கட்ட பயிற்சி வகுப்புகள், திராவிடர் சீறணி பயிற்சி வகுப்பு, பெண்கள் பயிற்சி வகுப்பு ஆகியவை திருப்பூர் மாவட்டத்தில் நடைபெற்றதால் தான். கோவை மாவட்டத்திலும் இது போன்ற வகுப்புகளை நடத்த ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும்; பயிற்சி வகுப்புக் கான பாடத் திட்டங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட குறும்படங்கள் முதலியவற்றை தலைமை முறைபடுத்தியுள்ளது எனவே பயிற்சி வகுப்புகள் தலைமையின் ஆலோசனையைக் கேட்டு நடத்தினால் சிறப்பாக இருக்கும்; அகமண முறைக்கு எதிரான பரப்புரைக்கு நல்லவரவேற்பு கிடைத்தது நமக்கு மேலும் உற்சாகத்தை அளித்துள்ளது, இதுபோன்ற பயணம் தொடர்வது அவசியம் என கழக அமைப்புச் செயலாளர் தி.தாமரைக்கண்ணன் தனது உரையில் குறிப்பிட்டார்.

மக்கள் சந்திப்பு இயக்கம் சில மாவட்டங்களில் சிறப்பாக நடைபெற்றுள்ளது; அதை மேலும் கூடுதல் முயற்சியோடு தொடர்ந்து எடுத்து செல்ல வேண்டும். பெரியார் முழக்கத்தை இன்னும் கூடுதலாக கொண்டு செல்லுதல், மாத இதழ் தொடங்குதல், புத்தகங்கள் வெளியிடுதல் போன்ற பல வேலைகளை நாம் செய்வதற்கு நிதி ஆதாரம் அவசியம்; முழு நேரப்பணியாளர்கள் மாவட்டத்துக்கு குறைந்தபட்சம் இரண்டு பேராவது தேவை எனவே மாநில அளவில் நிதி வசூல் குழு ஒன்று அமைப்பது அவசியம் என்று கழகப் பொருளாளர் ஈரோடு ப.இரத்தினசாமி தனது உரையில் குறிப்பிட்டார்.

தோழர்கள் நிர்மல்குமார், திருப்பூர் மணிகண்டன் ஆகியோர் மக்கள் சந்திப்பு இயக்கத்தின் மூலம் தங்களின் அனுபவங்களையும், மக்களின் கருத்துக்களையும் பகிர்ந்துகொண்டனர். பெரியார் முழக்கம் கிடைப்பதில் அஞ்சல் துறையில் இருக்கும் சிக்கல் குறித்தும், மாற்று ஏற்பாடு குறித்து சூலூர் நாராயணமூர்த்தி கேள்வி எழுப்பினார். தங்கள் பகுதியில் அஞ்சல் துறைக்கு கடிதம் எழுதியதால் சிக்கல் தீர்ந்தது பற்றியும், மாற்று ஏற்பாட்டுக்கான சிரமம் குறித்தும் பொள்ளாச்சி விஜயராகவன் பதிலளித்தார்.

மாற்று அமைப்பு தோழர்களை நமது மேடையில் பேச அழைப்பது குறித்து ஜீவாநகர் குமார் கேள்வி எழுப்பினார். விஜயன், பன்னீர்செல்வம், முகில்ராசு, துரைசாமி ஆகியோர் இது குறித்து சிறிது நேரம் விவாதித்தனர். பெரியார் முழக்கம், மக்கள் சந்திப்பு இயக்கம் ஆகிய வேலைகளை சரியாக செய்யாமல் விட்டதற்காக வருத்தம் தெரிவித்த உக்கடம் கிருஷ்ணன், இனி அதிக ஈடுபாடு காட்டுவதாக உறுதி அளித்தார். மக்கள் சந்திப்பு இயக்கத்திற்கு அச்சடிக்கப்பட்ட துண்டறிக்கையில் குறைவான செய்திகள் இருப்பதாகவும், செய்திகள் விரிவாக்கப்பட வேண்டும் என்றும் பல்லடம் வடிவேல் கருத்து கூறினார். தோழர்கள் நேருதாஸ், பத்மநாபன் ஆகியோர் நடைமுறையில் இருக்கும் சிக்கல்கள் குறித்து கருத்து தெரிவித்தனர்.

இன்று சில பொறுப்பாளர்களே கலந்து கொள்ளவில்லை, எனவே பொறுப்பாக செயல்படுபவர்களுக்கே பொறுப்பு வழங்கப்பட வேண்டும்; பெரியார் முழக்கத்திற்கான சந்தா தொகையை அவரவர்களே செலுத்துவதற்கு வாய்ப்பாக வங்கி கணக்கு எண் பெரியார் முழக்கத்தில் வெளியிடப்படவேண்டும்; பெரியார் முழக்கத்திற்கு என தனியாக ஒரு பொறுப்பாளர் நியமித்தால் சிறப்பாக இருக்கும் என்று சூலூர் பன்னீர்செல்வம் கருத்து தெரிவித்தார். காதலர் தினத்தில் காதலை எதிர்ப்பவர்களுக்கு எதிராக நாம்



அடையாள போராட்டங்களை நடத்தவேண்டும் என தண்டபாணியும், மேலும் குணா, ஆண்ட்ரூஸ், தனகோபால் ஆகியோரும் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

நமது கொள்கைகளை கலை வடிவங்களில் கொண்டு செல்லவேண்டும் என்று கவிதாவும், பறை முழக்கம், சிலம்பாட்டம் போன்ற பயிற்சிகளை பெண்களுக்கு வழங்கவேண்டும் என்று இராஜாமணியும் கருத்து தெரிவித்தனர். கழகத்திற்கான புதிய பத்து பாடல்களுக்கு மெட்டு தயார் செய்துள்ளதாக இசைமதியும், குறும்படம் எடுப்பதற்கான கருத்துருவாக்கங்கள் சு.க.ப.க சார்பாக தயார் நிலையில் உள்ளதாக அ.பா.சிவாவும் தெரிவித்தனர். பெரியார் முழக்கத்திற்கான எட்டு ஐந்தாண்டு சந்தாக்களும், எட்டு ஓராண்டு சந்தாக்களும் கோவை மாநகர் மாவட்டக் கழகம் சார்பாக வழங்கினர்.

இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை ஆற்றினார், அவர் தனது உரையில் “ஜாதி ஒழிப்புக்காக கடவுள் மறுப்பு என்பது தான் நமது நிலைப்பாடு. நமது அமைப்பின் பெயர் ஊடகங்களில் வரவேண்டும் என்பதற்கான எந்த வேலைகளையும் நாம் செய்ய தேவையில்லை; சில இந்துத்துவா அமைப்புகளின் பெயர்கள் எப்போதும் ஊடகங்களில் வருவதில்லை, ஆனால் அந்த அமைப்புகளில் கணிசமான உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அனைத்து துறைகளிலும் நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. தோழர்கள் தங்களை முழுமையாக தெளிவுப்படுத்திக் கொள்ள பயிற்சி வகுப்புகள் அவசியம் என்று விளக்கிப் பேசிய கழகத் தலைவர், ஒத்த கருத்துள்ள அமைப்புகளோடு இணைந்து போராடுவதில் நமது நிலைப்பாடு குறித்தும் விளக்கமளித்தார். மேலும் இந்துத்துவா அமைப்புகள் பெரும்பாலும் கோவையில் இருந்தே துவங்குவதால், நாம் கோவை மாவட்டத்தின் மீது கூடுதல் கவனம் செலுத்தவேண்டும்; அதனால் ஏற்படும் சிக்கல்களை எதிர்கொள்ளவும் நாம் தயாராக இருக்கவேண்டும் என்று தனது உரையில் குறிப்பிட்டார்

கோவை மாவட்டத்தை, கோவை மாநகர், புறநகர், பொள்ளாச்சி என மூன்று மாவட்டங்களாக பிரித்து இயங்குவது என்றும் கீழ்கண்டவர்கள் பொறுப்பாளர்களாக செயல்படுவது என்றும் முடிவுசெய்யப்பட்டது.

கோவை மாநகர் மாவட்டத் தலைவர் மா.நேருதாஸ், செயலாளர் சு.பத்மநாபன், அமைப்பாளர்கள் கி.இராஜாமணி மற்றும் வழக்குரைஞர் பன்னீர்செல்வம்.

கோவை புறநகர் மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், செயலாளர் சி.பிரசன்னா, அமைப்பாளர் பெ.அய்யாசாமி.

பொள்ளாச்சி மாவட்டத் தலைவர் ச.விஜயராகவன், செயலாளர் நா.வே.நிர்மல்குமார்.

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’**
**பத்திரிகையின் உரிமை விளக்க அறிவிக்கை**
படிவம் 4 (8வது விதி காண்க)

| | | |
|---|---|---|
| 1. | வெளியாகும் இடம் | : 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, சென்னை–41. |
| 2. | வெளியாகும் காலம் | : வாரம் ஒரு முறை |
| 3. | அச்சடிப்பவர் பெயர் | : எஸ். தீமாஸ் |
| | இனம் | : தமிழர் |
| | முகவரி | லில்லி சூசை ஆப்செட் 8 முகமது உசேன் சந்து, சென்னை–14. |
| 4. | பதிப்பாளர் பெயர் | : க. இராசேந்திரன் |
| | இனம் | : தமிழர் |
| | முகவரி | : 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, சென்னை–41. |
| 5. | ஆசிரியர் பெயர் | : க. இராசேந்திரன் |
| | இனம் | : தமிழர் |
| | முகவரி | : 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, சென்னை–41. |
| 6. | ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்யப்பட்டுள்ள பத்திரிகை உரிமையாளரும் கூட்டாளிகளும் பெயரும் முகவரியும் | : இல்லை |

நான் இதன் மூலம் மேலே காணப்படும் விவரங்கள் யாவும் எனக்குத் தெரிந்த வரை முற்றிலும் உண்மையென நம்பகமாக அறிவிக்கிறேன்.

(ஒப்பம்)
நாள்: 27–03–2014 க. இராசேந்திரன்
இடம்: சென்னை. வெளியிடுபவர் கையொப்பம்

## நன்கொடை

- பெரியார் பெருந்தொண்டரும், ஆசிரியருமான சின்னையன், சுப்பிரமணியன் ஆகியோரோடு, மேட்டூர் அணை புதுச்சாம்பள்ளி தோழர்கள் இரகு, செந்தில் ஆகி யோரும் 15-03-2014 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணியை அவரது இல்லத்தில் சந்தித்தனர். கழக வளர்ச்சி நிதியாக ரூ-1000 (ஆயிரம் ரூபாய்) வழங்கினர்.
- சேலம் மாவட்டம், மேட்டூர் அணை இராமன் நகர் பகுதியைச் சார்ந்த தேவி-மனோகரன் ஆகியோரது மகன் ராகுல் (எ)பப்ளுவுக்கும் ஈரோடு அன்புசெல்வி-பாலசுந்தரம் ஆகியோரது மகள் இந்துவுக்கும், ஜாதி மறுப்பு திருமணம், 18-03-2014 அன்று மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. மணவிழா மகிழ்வாக, மண மக்களின் பெற்றோர் சார்பாக பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ-5000 (ஐந்தாயிரம் ரூபாய்) வழங்கினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 27th March 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN